21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978


RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733


BANQUET & EVENT CENTER IN GTA
• Birthday Party
• Special Events
• Upto 50 People
• Reasonable Price
Contact: 416.640.3535

நதி 21 | பாலம் 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2011

# லிபிய போராளிகளின் மத்தியில் கனடிய அமைச்சர்

லிபிய அதிபர் மோமர் கடாபி (Moammer Gadhafi), அவரது மகன் சீவ் அல்-ஸ்லாம் (Seif Al-Islam), லிபிய உளவுத்துறை தலைவர் அப்துல்லா அல்-சனௌசி (Abdullah Al-Sanoussi) ஆகியோரை கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) கடந்த திங்கட்கிழமை ஜுன் 27, 2011 இல் உத்தரவிட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றம் மனிதகுலத்திற்கு எதிரான குற்றமான (Crimes against humanity) பலநூற்றுக்கணக்கான குடிமக்களை கொலை செய்ததும், பயங்கரமாக காயப்படுத்தியதும், தேவையில்லாமல் சிறை வைத்ததும் ஆகும். இக்குற்றங்கள் நடைபெற்ற காலப்பகுதி பெப்ரவரி 15, 2011 இல் இருந்து பெப்ரவரி 28, 2011 வரையாகும். இவ்வழக்கு விசாரணையை நடத்துமாறு ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்பு சபை ஏகமனதாக பெப்ரவரி 26, 2011 ஆம் நாள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை கேட்டிருந்தது.



சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நெதர்லாந்திலுள்ள Hague என்ற நகரிலுள்ளது. இதனை 115 நாடுகள் அங்கீகரித்துள்ளன. இந்த விசாரணையை Sanji Mmasenono Monageng, Sylvia Steiner மற்றும் Cuno Tarfusser ஆகிய மூன்று நீதிபதிகள் நடத்தினார்கள். இவ்விசாரணைக்கு தலைமை வகித்த நீதிபதி போற்சுவானா (Botswana) வை சேர்ந்த Sanji Mmasenono Monageng என்னும் பெண்மணி ஆவர். இவர் தனது தீர்ப்பில் கடாபி எவராலும் கேள்வி கேட்கமுடியாத, அதிஉச்ச சர்வாதிகார அடக்குமுறை ஆட்சியை லிபியாவில் நடத்துவதாகவும், கடாபியும் அவரது மகனும் பொதுமக்களை கொலை செய்ததற்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த கூட்டுப் படையினர் ஐக்கியநாடுகள் விதிகளின் பிரகாரம் பொதுமக்களை பாதுகாக்க மார்ச் 19 ஆம் திகதி கடாபியின் இராணுவத்தை வானிலிருந்து தாக்கத் தொடங்கின. அதை தொடர்ந்து நேட்டோ (NATO) நாடுகள் லிபியாவின் வான்பரப்பை மார்ச் 31இல் முற்று முழுதாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன. அத்துடன் இவர்களுடன் சில அரபுநாடுகளும் சேர்ந்து கொண்டன. நேட்டோ நாடுகள் கடந்த 100 நாட்களாக தொடர்ந்து கடாபியின் இராணுவத்திற்கு எதிராக வான்தாக்குதல்களை நடத்தி வருகின்றன. 41 வருடகால சர்வாதிகார ஆட்சிக்கு பின்னர் நாட்டை விட்டு வெளியேறும் நேரம் கடாபிக்கு வந்து விட்டது என்று பிரான்ஸ் அதிபர் Nicolas Sarkozy கூறியுள்ளார். கடாபியின் அரச அதிகாரிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் விசாரணையை பற்றி கூறுகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு லிபியா பற்றி விசாரணை செய்ய உரிமையில்லை என்றார்கள். அவர் மேலும் தெரிவிக்கையில் நேட்டோ நாடுகள் ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளிலும் தற்போது லிபியாவிலும் செய்து வரும் கொலைகளை மறைப்பதற்காகவே ஆபிரிக்கநாடான லிபியாவிற்கு எதிராக கொலைக் குற்றம் சுமத்துகிறார்கள் என்றார்கள்.

கனடிய வெளிவிவகார அமைச்சர் John Baird கடந்த திங்கட்கிழமை ஜுன் 27, 2011 இல் லிபியாவிற்கு சென்று கடாபிக்கு எதிராக போராடும் போராளிகள் குழுவை சந்தித்துள்ளார். அமைச்சர் லிபியாவில் பென்காசி நகரிலுள்ள Benina விமானத் தளத்திற்கு சென்றார். அங்கிருந்து போராளிகள் வசமுள்ள நகரத்திற்கு காரில் அழைத்துச் செல்லப்பட்டார். அரை நாட்களை போராளிகள் வசமுள்ள இடங்களில் கழித்த அமைச்சர் அரை மணித்தியாலங்கள் போராளிகள் குழுக்களின் கூட்டமைப்பின் 'தேசிய மாற்றம் கொண்டு வரும் சபை' (National Transitional Council) தலைவரான மகமூட் ஜிப்றில் (Mahmoud Jibril) உடன் கதைத்தார். அதை தொடர்ந்து போராளி குழுக்களின் கூட்டமைப்பின் சபை உறுப்பினர்களை சந்தித்து கதைத்தார். பூட்டிய கதவுகளுக்கு பின்னால் அமைச்சர் மகமூட் ஜிப்றில் உடன் கதைக்கும் போது அவருக்கு கனடிய பிரதமரின் கனடா வந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திப்பதற்கான பிரத்தியேக அழைப்பை கையளித்தார்.

கனடா அண்மையில் தான் லிபிய போராளிக்குழுக்களின் கூட்டமைப்பின் "தேசிய மாற்றம் கொண்டு வரும் சபையை" கடாபியின் சர்வாதிகார அரசிற்கு எதிரான லிபிய மக்களின் மாற்று அரசாக அங்கீகரித்தது குறிப்பிடத்தக்கது. ஏற்கெனவே இந்த "தேசிய மாற்றம் கொண்டு வரும்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated


RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com


வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated



Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585


துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221


இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# லிபிய போராளிகளின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சபை" ஐ ஐரோப்பிய யூனியனும் சில அரபு நாடுகளும் லிபிய மக்களின் மாற்று அரசாக அங்கீகரித்துள்ளன. கனடிய வெளிவிவகார அமைச்சர் லிபியாவின் "தேசிய மாற்றம் கொண்டு வரும் சபை" உறுப்பினர்களை சந்திக்கும் போது அவர்களது குறிக்கோளுக்கு உதவுமுகமாக கனடா விலிருந்து கொண்டு சென்ற "அவசர உதவிப் பொதிகளை" (Trauma Kits) வழங்கினார். கனடிய வெளிவிவகார அமைச்சருடன், பாதுகாவலர்கள், அமைச்சு அதிகாரிகள் மற்றும் லிபியாவிற்கான கனடியத் தூதுவர் Sandra McCardell ஆகியோர் லிபியாவிற்கு சென்றனர்.

கனடா லிபிய அரசின் வெளிநாட்டு சொத்துக்களை ஒருவரும் பாவிக்க முடியாதபடி உறைநிலையில் வைத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையும் இவ்வாறு செய்துள்ளது. ஆனால் கனடா உறைநிலையில் வைத்திருக்கும் லிபிய அரசின் சொத்துக்களை லிபிய போராளிகளின் "தேசிய மாற்றம் கொண்டு வரும் சபையின்" உபயோகத்திற்கு கொடுப்பது பற்றி ஆராயும் என அமைச்சர் கூறினார். இதில் பல சிக்கலான சட்டப்பிரச்சினைகள் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.



அமைச்சர் தனது லிபிய விஜயத்தை முடித்துவிட்டு ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளிக்கையில் தான் லிபிய போராளிகளின் விடாமுயற்சியையும் (Determination), துணிவையும் (Courage) பார்த்து வியந்து போனதாக கூறினார். தான் அவர்களிடமிருந்து கடாபியின் இராணுவவீரர்களுக்கு எதிரான போர் பற்றி நேரடியாக கேட்டு அறிந்ததாகவும் சொன்னார். மேலும் தெரிவிக்கையில் கனடாவின் நோக்கம் லிபியாவை திடகாத்திரமானதும் (Strong), செழுமை யானதும் (Prosperous), மக்கள் சுதந்திரத்துடன் வாழக்கூடியதும், அயலவர் களுடன் அமைதி பேணக்கூடியதுமான ஒரு நாடாக உருவாக்குவதுதான் என்றார். நான் லிபியாவில் உடனடியாக கடாபியிலிருந்து ஒரு பூரணத்துவம் (Perfect) பெற்ற அரசு உருவாகும் என எதிர்பார்க்கவில்லை. இது ஒரு நீண்ட தூரப் பயணமாகும் என்றார்.

அமைச்சர் தனது லிபிய பயணத்தை முடித்துக் கொண்டு லிபியாவிற்கான கனடியப் பங்களிப்பை செய்து வரும் கனடிய இராணுவம் தங்கியுள்ள சிசிலி (Sicily) இராணுவ முகாமிற்கு சென்றார். அங்கு இருந்த 650 கனடிய இராணுவ வீரர்களின் முன் உரையாற்றுகையில் நாங்கள் லிபியாவில் முன்னேற்றம் கண்டு வருகின்றோம், இன்னும் சிறிது காலம் பொறுமை காக்க வேண்டும் என்றார்.

கனடாவின் வழமையை பின்பற்றி அமைச்சர் கடாபியின் இராணுவ நிலையை நோக்கி குண்டுபோட புறப்பட இருந்த விமானத்தில் இருந்த குண்டு ஒன்றில் "லிபியாவை விடுவி, ஜனநாயம்" (Free Libya, Democracy) என எழுதி கையெழுத்திட்டார். குண்டு ஒன்றில் 'இந்த தபால் கொடுக்கும்சேவை வேலை நிறுத்தம் செய்யாது" எனவும் எழுதியிருந்தது.

லிபியாவிற்கு சென்றதிற்காக வெளிவிவகார அமைச்சரை புதிய ஜனநாயக கட்சியின் Jack Harris புகழ்ந்து பேசினார். லிபரல் கட்சியும் தனது ஆதரவை கனடிய வெளி விவகார அமைச்சருக்கு தெரிவித்துள்ளது.

# சிறையில் அடைத்தாலும் உண்ணாவிரதம் இருப்பேன்

## அன்னா ஹஸாரே

ஊழலுக்கு எதிரான லோக்பால் மசோதாவை உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. லோக்பால் மசோதாவை நிறைவேற்ற தாமதமானால் வரும் ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதி முதல் மீண்டும் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அன்னா ஹஸாரே எச்சரித்தார். துப்பாக்கியால் சுட்டாலும் உண்ணாவிரதம் இருப்பேன்.

நாட்டுக்காக உயிர் இழக்கத் தயாராக இருக்கிறேன். என் நாட்டு நலனுக்காக போராடும்போது உயிர் இழப்பது எனக்கு பெருமை. நான் உண்ணாவிரதத்தை துவங்கும் முன்பு அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை



அன்னாவின் உண்ணாவிரதம் நாடாளு மன்றத்திற்கு சவால் விடும் செயலாகும் என்று அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவி த்திருந்தார். லோக்பால் மசோதாவை நிறைவேற்ற தாமதமானால் நான் ஆக்ஸ்ட் மாதம் 16-ம் தேதி முதல் மீண்டும் உண்ணாவிரதம் இருப்பேன். டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தர் அல்லது ராஜ்காட் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் உண்ணா விரதம் இருக்க அரசு அனுமதி அளிக்கவில்லை என்றால் சிறையிலாவது உண்ணாவிரதம் இருந்தே தீருவேன். தடியடிக்கு பதிலாக என் நெஞ்சில் நடத்தவிருக்கிறேன். காங்கிரஸ் எனது போராட்டத்தை எதிர்த்தாலும் நான் சோனியாவை சந்திப்பது ஒரு ஜனநாயக நடவடிக்கையாகும்.

லோக்பால் மசோதாவை நிறைவேற்றுவது, அதில் பிரதமரையும் சேர்ப்பது போன்ற கோரிக்கைகளை எதிர்கட்சிகளும் ஏற்காவி-டில், காங்கிரஸ் உடன் சேர்த்து எதிர்கட்சிகளுக்கும் எதிராக போராட்டம் நடத்த தயங்க மாட்டோம். மக்களை சந்தித்து அந்த கட்சிகளுக்கெல்லாம் வாக்களிக்காதீர்கள் என்று வலியுறுத்துவோம்.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணம்

*நினைவாற்றலைப் பெருக்குவதற்கு சதுரங்கம். குறுக்கெழுத்துப் பயிற்சிகள்,. சுடக்கோ(ளரனநமழ) போன்ற உள்ளரங்க விளையாட்டுக்கள் எப்படியெல்லாம் ஞாபக சக்தியை வளர்பதற்கு உதவுகின்றன என்பதை அகணி அவர்கள் தனது நினைவாற்றால் 11 ஆவது தொடர்கட்டுரையில் விபரித்துள்ளார். இந்த தொடரை வாசித்து வந்த நான் சில சமயங்களில் பஸ்சில் பயணம் செய்யும் போது, இங்கு பலர் சுடக்கு, குறுக்கெழுத்துப் பயிற்சிகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தாலும், தாம் இறங்க வேண்டிய பஸ் தரிப்பு வந்ததும், தம் நினைவு திரும்பி தானாகவே உரிய இடத்தில் இறங்கிச் செல்வதை அவதானித்து வியந்துள்ளேன். ஆகவே, அகணியின் கட்டுரைத் தொடர் வாசகர்களுக்கு நற் பலனை தருவதையிட்டு மகிழ்ச்சியை அடைகிறேன்.*

*- பத்மநாதன் தம்பையா*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# இலங்கையில் இராணுவ ஜனநாயகம்......?

இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

இலங்கையில் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு, வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டு அங்கு ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது - இது அரசாங்கத்தின் கூற்று.

'பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களே எனக் கூறிக்கொண்டு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்தார்கள். அவர்களது பிரதேசங்களில் தேர்தல்கள் நடத்த முடியாத ஒரு சூழ்நிலையும், தொடர்ச்சியான யுத்த சூழ்நிலையும் நிலவி வந்தது. விடுதலைப் புலிகளின் பயங்கர வாதப் பிடியில் இருந்து இலங்கையின் அரச படைகள் தமிழ் மக்களை மீட்டெடுத்தது. விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டதன் பின்னர் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மகிழ்ச்சியாகத் தமது சொந்தப் பிரதேசங்களில் வாழ்கின்றார்கள். அங்கு விடுதலைப்புலிகளின் அடக்குமுறை கிடையாது. அந்தப் பிரதேசங்களில் அரசாங்கம் ஜனநாயகத்தை நிலைநிறுத்தி யுள்ளது. பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் என்று பல்வேறு தேர்தல்களும் நடத்தப்பட்டுள்ளன. இவற்றில் மக்கள் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களின்றி தாங்கள் விரும்பியவர்களுக்கு வாக்களித்து தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.'

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் எவ்வாறு ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதற்கு அரசாங்கத் தரப்பில் இவ்வாறு விளக்கம் தெரிவிக்கப்படுகின்றது.

'இலங்கையில் இறுதி யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களாகிவிட்டன. வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் யுத்தமோதல்கள் மறைந்துவிட்டன. யுத்தகாலத்து கட்டுப்பாடு கள், நெருக்கடிகள் என்பன தளர்ந்துள்ளன. எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாமலும், அச்சமின்றியும் மக்கள் தாங்கள் விரும்பிய பகுதிகளுக்குப் பிரயாணம் செய்யக் கூடிய சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்கியிருக்கின்றது……………..'

இதுபோன்று பல்வேறு வியாக்கியானங்களின் மூலம் அரசாங்கம் இன்றைய வடக்கு கிழக்கு நிலைமை பற்றி வாய்கிழிய பேசி வருகின்றது. விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்த அரசாங்கத்தினுடைய இராணுவ வெற்றியின் விளைவாகச் சித்தரித்து அவற்றிற்குக் காரணமானவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச என்று அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் அமைச்சர்கள் வரையில் பெருமை பேசி வருகின்றார்கள்.

இந்தப் போக்கில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற ஈபிடிபி, தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் போன்ற கட்சிகளின் முக்கியஸ்தர்களும் அரசாங்கத்தின் பெருமைகளை வாய் ஓயாமல் கூறி வருகின்றார்கள்.

ஆனால் உண்மையில் நடப்பதென்ன? வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் குறிப்பாக வடக்கில் இராணுவ ஜனநாயகம் நிலவுகின்றது என்பது மேலோட்டமான பார்வையில் உண்மையே.



விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்து, அந்த அமைப்பின் முக்கிய தலைவர்களை அழித்தும், இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் அவர்கள் எங்குள்ளார்கள் என தெரியாத வகையில் மறைத்துள்ள அரசாங்கம் வடக்கிலும், கிழக்கிலும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரைக் குவித்து வைத்துள்ளது. வடக்கில் மாத்திரம் ஒரு லட்சத்திற்கும் குறையாத இராணுவத்தினரை அரசாங்கம் நிரந்தரமாக நிறுத்தியிருக்கின்றது. அத்துடன் இந்த இராணுவத்தினருக்குத் தேவையான சகல வசதிகளையும் உள்ளடக்கிய நிரந்தர இராணுவ முகாம்களையும் அரசாங்கம் மாவட்டங்கள்தோறும் அமைத்துள்ளது. இது போதாதென்று இராணுவ குடியிருப்புக்கென பொதுமக்களின் பாரம்பரிய காணிகளை உள்ளடக்கிய இடங்களையும் அரச காணிகளையும் அரசு கையகப்படுத்தியுள்ளது.

யுத்தகாலத்தில் ஏ9 வீதியிலும் ஏனைய முக்கிய வீதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான இராணுவச் சோதனைச் சாவடிகள், வீதித்தடை முகாம்கள் என்பன இப்போது அகற்றப்பட்டுள்ளன. மதவாச்சியில் செயற்பட்டு வந்த இரண்டு நாடுகளுக்கிடை-டயிலான நுழைவாயில் சோதனைச்சாவடி போன்ற தீவிர சோதனைகள் நடத்தப்பட்டு வந்த தடை நிலையம் இப்போது கிடையாது. ஓமந்தையில் செயற்பட்டு வந்த மற்றுமொரு தீவிர சோதனைச்சாவடியின் சோதனை நடவடிக்கைகள், செயற்பாடுகள் என்பன தளர்த்தப்பட்டுள்ளன.

ஆனால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடிய மர்த்தப்பட்டுள்ள மீள்குடியேற்றப் பகுதிகளில், யுத்த காலத்தில் இருந்ததைவிட அதிக அளவில் இராணுவத்தின் பிரசன்னம் காணப்படுகின்றது. பொலிசாரும் அங்கு இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால் பொலிசார் மேற்கொள்ள வேண்டிய கடமைகளையும் இராணுவத்தினரே இங்கு மேற்கொண்டு வருகின்றார்கள். இது மீள்குடியேற்றப் பிரதேங்களில் மட்டுமல்லா மல், இறுதிக்கட்ட யுத்தம் நடைபெறுவதற்கு முன்பே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்திருந்த வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலும் இந்த நிலைமைதான் காணப்படுகின்றது.

போரினால் இடம்பெயர்ந்து மனிக்பாம் முட்கம்பி முகாமில் முடக்கப்பட்டிருந்த 3 லட்சம் பொதுமக்களில் தற்போது சுமார் 12 ஆயிரம் பேர் வரையில் மட்டுமே அங்கு எஞ்சியிருப்பதாக அரச அதிகாரிகள் கூறுகின்றார்கள். ஏனையோரை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்து விட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களும் சரி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் ஏற்கெனவே இராணுவத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் உள்ள மக்களும்சரி அரசாங்கம் கூறுவதுபோல சுதந்திரமாகவோ அல்லது இயல்பாகவோ வாழ்க்கை நடத்தவில்லை என்பதே யதார்த்தம்.

வடமாகாணத்தில் இன்று மக்கள் தனிப்பட்ட தேவைகளுக்காகக்கூட ஒன்றுகூட முடியாத நிலைமையே காணப்படுகின்றது. பொது மண்டபங்களில் அல்லது பொது இடங்களில் முக்கியஸ்தர்களின் தலைமையில் மக்கள் ஒன்று கூடினால் உடனடியாக அத்தகைய இடங்களுக்கு இராணுவத்தின் உளவுப் பிரிவி னர் வந்துவிடுவார்கள். அவ்வாறு வருபவர்கள் ஏன் இந்தக் கூட்டம், என்ன தேவைக்காக மக்கள் வந்திருக்கின்றார்கள், என்ன நடக்கப்போகின்றது, யார் இதனை ஒழுங்கு செய்தது, இதுகுறித்து ஏன் முன்கூட்டியே இராணுவத்தினருக்கு அறிவித்து, ஏன் முன் அனுமதி பெறவில்லை என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு குடைந்து எடுத்து விடுவார்கள்.

இந்த விசாரணையின்போது, அவர்கள் திருப்தியடைந்தால் ஒன்றும் நடவாது. அவர்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால் அந்த நிகழ்வைத் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதிக்கமாட்டார்கள்.

மீள்குடியேற்றப் பிரதேசங்களில் புனரமைக்கப் பட்டுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஆலயங்களின் நிர்வாக சபைகள் என்பன கிரமமாகக் கூடி தமது நடவடிக்கைகள் குறித்து கலந்துரை யாடவேண்டிய தேவை பொதுவாகவே இருக்கின்றது. இத்தகைய கூட்டங்களில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் மற்றும் இராணுவ பிரதிநிதிகள் கட்டாயம் அழைக்கப்பட வேண்டும் என்ற நியதியும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாமல் பாடசாலை தொடக்கம் ஆலயம் வரையில் ஒழுங்கு செய்யப்படுகின்ற வைபவங்கள், நிகழ்ச்சிகள், விழாக்கள் என்பவற்றிற்கு அந்தப் பிரதேசத்தைச்சேர்ந்த பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் விருந்தினர்களாக அழைக்கப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய விழாக்களுக்கு விருந்தினர்களாக அழைக்கப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றப் பிர-திநிதிகள், (நகரசபை, பிரதேச சபைகளின் தலைவர்கள் அல்லது உறுப்பினர்கள்), அரச அதிகாரிகளைப் போன்று இந்த பொலிஸ், இராணுவ அதிகாரிகளுக்கும் மலர் மாலை சூட்டப்பட வேண்டும். ஏனைய விருந்தினர் களைப் போன்று அவர்களும் வரவேற்கப்பட்டு வைபவங்களில் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட வேண்டும்

**தொடர்ச்சி 37ஆம் பக்கம்**

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# பசுவதை கூடாதென்று நமது கலாச்சாரத்தில் ஏன் அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது என்னும் கேள்விக்கு சத்குரு பதில் அளிக்கும் போது



## சத்குரு வாசுதேவ்

நமது கலாச்சாரத்தில் பசு, பாம்பு மற்றும் காகம் ஆகிய மூன்று உயிரினங்களுக்கும் தனி இடம் தரப்பட்டுள்ளது. உடலின் பரிணாம வளர்ச்சியைப் பார்க்கும்போது குரங்கு நமக்கு மிக அருகாமையில் இருக்கிறது. ஆனால் ஆத்மாவின் பரிணாம வளர்ச்சியைப் பார்க்கும்போது, இந்த மூன்று உயிரினங்களும் நமக்கு மிக அருகாமையில் உள்ளன. அவை மனித உயிரினத்திற்கு மிக நெருக்கமாக இருப்பதால்தான் அவற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கொல்வது ஏறக்குறைய மனிதர்களைக் கொல்வது போல. அந்த அளவிற்கு அவை மனித உயிர்களுக்கு நெருக்கமாக உள்ளன. கிராமங்களில் இன்னமும் மனிதர்கள் பசுக்களுடன் மிக ஆழமான உறவு வைத்துள்ளனர். மிகச்சில உயிரினங்கள் மட்டுமே, ஏன் பசு மட்டுமே என்று கூட சொல்லலாம், மனித உணர்ச்சிகளைக் கொண்டிருக்கிறது. நீங்கள் துக்கமாக இருந்தால் பசு உங்களுக்காக கண்ணீர் விடும். உண்மையாகவே அதன் கண்களிலிருந்து கண்ணீர் வரும். பசு ஏறக்குறைய ஒரு மனித உயிரினம் போலத்தான். எனவேதான் பசுவதை நமது கலாச்சாரத்தில் தடை செய்யப்பட்டிருக்கிறது. இயற்கையில் உள்ள எந்த வனவிலங்கைத் தொட்டாலும் அது எதிர்செயல் செய்யும். ஆனால் ஒரு பாம்பை, விஷப் பாம்பானாலும் சரி, நீங்கள் அதை நளினமாகத் தூக்கினால் அது எந்த வகையிலும் எதிர்ப்பு தெரிவிக்காது. இந்த ஒரு உயிரினம்தான் இப்படி மனிதனிடம் நடந்து கொள்கிறது. மேலும் ஆன்மீக சக்தி உள்ள இடங்களை நாடி பாம்புகள் தானாகவே வந்து சேரும்.

சில யோகிகள் பாம்புக்கோ பசுவிற்கோ அல்லது காகத்திற்கோ பிறவிச் சுழற்சியிலிருந்து விடுதலை அளித்த சம்பவங்களும் உண்டு. மற்ற உயிரினங்களை அப்படி விடுவிக்க முடியாது. இந்தக் காரணங்களால்தான் பசுவையோ, பாம்பையோ தெரிந்தோ தெரியாமலோ கொல்ல நேர்ந்தால் மனிதர்களைப் புதைப்பது போல அதே முறையில் புதைக்க வேண்டும் என சொல்லப்பட்டிருக்கிறது.

**எதிர்வரும் ஜூலை 15 - 17, 2011வரை ரெறொன்ரோவில் 5321 Finch Ave. E. (Finch & Middlefield)இல் கதயோக பயிற்சியும், சிறுவர்களுக்கான கோடைகால விடுமுறைப்பயிற்சி ஜூலை 16 - 22, 2011வரை ரெறொன்ரோவில் 5321 Finch Ave. E. இல் நடைபெறவுள்ளது. மேலதிக விவரங்களும்**
Contact: 1 866 424 ISHA (4742) / Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

# சிறையில்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

லோக்பால் வரவம்புக்குள் பிரதமர் பதவியை கொண்டு வர மன்மோகன் சிங் பயப்படவில்லை, அவரை இயக்கும் ரிமோட் கன்ட்ரோல் தான் பயப்படுகிறது என்றார்.

# ஐ.நா மனித உரிமைச்சபையின் எதிர்வரும் 18வது கூட்டத்தொடர்

கடந்த 2009ம் ஆண்டு மே மாதம் உலகத் தமிழினம் மட்டுமல்லாது மானிட சரித்திரத்திலேயே காணத சந்திக்காத சாதனைகளுடன், வெற்றி நடைபோட்ட தமிழீழ ஆயுதப் போராட்டம், இன்று தற்காலிகமாக மௌனித்துள்ளது. பிரித்தானி யாவின் சனல் நாலினால் (04) ஆவணமாக்கப்பட்டு ஐ. நா மனித உரிமைச் சபையிலும் உலக மக்களுக்கும் காண்பிக் கப்பட்டு விட்டது. காண்பிக்கப்பட்டவை யாவும் நம்பத்தகுந்தவையென முழு உலகமே ஏற்றுக் கொண்டுவிட்டது.

அப்படியானால் தமிழீழ மக்களுடைய கடமை என்ன என்பதை நாம் ஆராய்வது மிக முக்கியமானது. இப்பொழுது நடந்து முடிந்த ஐ. நா மனித உரிமைச் சபையின் 17வது கூட்டத்தொடரில் எந்தவித கண்டனப் பிரேரணைகளையும் சிறீலங்கா மீது நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அமெரிக்கா தொடக்கம் கனடா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் யாவும், நடந்து முடிந்த மனித உரிமைச் சபையில் சிறீலங்காவை மிகவும் மோசமான முறையில் தமது வார்த்தைகளினால் கண்டித்து உரையாற்றி னார்கள். இவற்றுக்கு உடந்தையாக ஐ. நா மனித உரிமை ஆணையாளரின் உரையும் அங்கு அமைந்தது. மேற்கு நாடுகளும் அமெரிக்கவும், சிறீலங்கா மீது ஒரு கண்டனப் பிரேரணையை நிறைவேற்ற முன்வந்த பொழுதும், இவர்கள் இப் பிரேரணைக்கு ஒட்டுமொத்த ஆதரவும் இல்லாமல் முயற்சிப்பது, சிறீலங்காவிற்கு பலம் சேர்க்கும் நடவடிக்கையாக முடியுமென என எண்ணி கைவிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான செயற்பாட்டு நிறுவனங்களில் நம்பிக்கை வைத்து, ஈழத் தமிழருடன் இணைந்து உலகத் தமிழர்களும் சர்வதேச செயற்பாட்டாளர்களும் மிக நீண்டகாலமாக ஐ.நா மனித உரிமைக்கான தலைமைச் செயலகத்தை கொண்ட ஜெனீவாவிற்கு சென்று அங்கு ஐ. நா. மனித உரிமைச் செயற்பாடுகளில் கலந்து வருகின்றனர். ஈழத்தமிழர்களின் சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் உரிமைகள் மிக நீண்ட காலமாக இலங்கைத்தீவில் இலக்கத்தில் பெரும்பான்மையான சிங்கள ஆட்சியாளர்களினால் மறுக்கப்பட்டு வருவதோடு, இவற்றை வேண்டிநிற்கும் தமிழீழ மக்களை பூண்டோடு அழித்து வருகின்றனர்.

ஆனால் 1983ம் ஆண்டு இலங்கைத் தீவு முழுவதிலும் தமிழீழ, தமிழ்பேசும் மக்கள் மீது சிறீலங்கா ஆட்சியாளரினால் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழின அழிப்பைத் தொடர்ந்தே, தமிழீழச் செயற்பாட்டாளர்கள் உலகத் தமிழருடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையிடம் சென்றனர்.

அதேவேளையிலே ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு, ஐ. நா மனித உரிமை உப ஆணைக் குழு, ஐ. நா மனித உரிமை குழு ஆகியவற்றுடன், பல சிறிய, சிறிய குழுக்கள் இயங்கிவந்தன. ஐ. நாவும் சிறீலங்காவும் அவ்வேளையிலே ஒரு மாதமாக நடைபெறும் ஆணைக்குழுவோ உப ஆணைக் குழுவோ, சிறீலங்கா விடயத்தில் பெரிதாக பேசிக் கொள்வதில்லை. இதற்கு பல காரணங்கள் அவ்வேளையில் காணப்பட்டன. ஆனால் 1995ம் ஆண்டு யாழ். குடாநாட்டிலிருந்து மக்கள், வன்னி பெருநிலத்திற்கு இடம் பெயர்ந்ததை தொடர்ந்து சிறிது சிறிதாக ஐ. நா வின் பார்வை சிறீலங்காவிடம் திரும்ப ஆரம்பித்தது. ஆனால் இவ் ஐ. நாவின் பார்வை, கடந்த 2005ம் ஆண்டுவரை சிறீலங்கா மீது ஒரு சர்வதேச நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்கவில்லை. ஆனால் சிறிது சிறிதாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஆரம்பிக்கப்பட்ட கண்டன உரைகள், அறிக்கைகள், மனுக்கள், காலப் போக்கில் பிரித்தானிய, பிரான்ஸ், சுவிற்சலாந்து, ஜேர்மனி, நேர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற மேற்கு நாடுகளின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்தது.

இதற்கு ஐ. நாவில் மேற்கொள்ளப்பட்ட பரப்புரை வேலைத்திட்டங்கள் மட்டுமல்லாது தமிழ் மக்கள் ஒன்று, பத்து, நூறு, என இருந்து கொலையின் விகிதாசாரம் ஆயிரக்கணக்கில் அதிகரித்துடன் இடப் பெயர்வு, உணவு, உடை, தங்குமிடம், மருந்து ஆகியவை மிகவும் அதிர்ச்சிக்குரிய நிலையை அடைந்து விட்டது. இறுதியில் அங்கு ஓர் இன அழிப்பை மேற்கொண்ட சிங்கள அரசுகள் சிங்களக் குடியேற்றங்கள், புத்த கோயில்கள், சிங்கள வர்த்தகங்கள் போன்று பலவற்றை தமிழர்களின் பூர்வீக நிலமான வடக்கு கிழக்கில் ஆரம்பித்து இப்பொழுது இவை குதிரை வேகத்தில் நடைபெறுகின்றன. தற்போதைய நிலை! கடந்த 2009ம் ஆண்டு மே மாதம் உலகத் தமிழினம் மட்டுமல்லாது மானிட சரித்திரத்திலேயே காணாத சந்திக்காத சாதனைகளுடன், வெற்றி நடைபோட்ட தமிழீழ ஆயுதப் போராட்டம், இன்று தற்காலிகமாக மௌனித்துள்ளதா? அல்லது நிரந்தரமாக மௌனித்துள்ளதா என்பதை யார் முடிவு செய்வேண்டும் என்பதையும் நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய காலமிது.

பிரித்தானியாவின் சனல் நாலினால் (04) ஆவணமாக்கப்பட்டு ஐ. நா மனித உரிமைச் சபையிலும் உலக மக்களுக்கும் காண்பிக் கப்பட்டு விட்டது. காண்பிக்கப்பட்டவை யாவும் நம்பத்தகுந்தவையென முழு உலகமே ஏற்றுக் கொண்டுவிட்டது.

அப்படியானால் இப்பொழுது தமிழீழ மக்களுடைய கடமை என்ன என்பதை நாம் ஆராய்வது மிக முக்கியமானது. இப்பொழுது நடந்து முடிந்த ஐ. நா மனித சபையின் 17வது கூட்டத்தொடரில் எந்தவித கண்டனப் பிரேரணைகளையும் சிறீலங்கா மீது நிறைவேற்றப்படவில்லை.

ஆனால் அமெரிக்கா தொடக்கம் கனடா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் யாவும், நடந்து முடிந்த மனித உரிமைச் சபையில் சிறீலங்காவை மிகவும் மோசமான முறையில் தமது வார்த்தைகளினால் கண்டித்து உரையாற்றினார்கள். இவற்றுக்கு உடந்தை யாக ஐ. நா மனித உரிமை ஆணையாளரின் உரையும் அங்கு அமைந்தது. மேற்கு நாடுகளும் அமெரிக்காவும், சிறீலங்கா மீது ஓர் கண்டனப் பிரேரணையை நிறைவேற்ற முன்வந்த பொழுதும், இவர்கள் இப் பிரேரணைக்கு ஒட்டுமொத்த ஆதரவும் இல்லாமல் முயற்சிப்பது, சிறீலங்காவிற்கு

## புலம்பெயர் வாழ் சங்கங்களும் அங்கத்தவர்களும்!

பலம் சேர்க்கும் நடவடிக்கையாக முடியுமென என எண்ணி கைவிட்டுள்ளனர். ஐ. நா 17வது கூட்டத்தொடரில் சில இராஜதந்திரிகள் புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் தமக்குள் சண்டையிடுவதில் காலத்தை கழிக்கிறார்கள். ஆனால். ஐ. நா அறிக்கை விடயத்தில் இவர்களது செயற்பாடுகள் மந்த நிலையில் உள்ளதாக பெரியதொரு குற்றச்சாட்டை புலம்பெயர் வாழ் சங்கங்கள் மீது சுமத்தியுள்ளனர். 17வது கூட்டத்தொடரில் தமது விடயம் ஆராயப்படலாம் என ஊகித்து சிறீலங்கா அரசு வேறுபட்ட நாடுகளுக்கு தமது அமைச்சர்களை அனுப்பி உரையாடி அவர்களது ஆதரவை பெற்றது மட்டுமல்லாது, ஜெனிவாவில் கூட்டத்தொடர் ஆரம்பிப்பதற்கு இரு வாரத்திற்கு முன்னரே,

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

# ஒன்ராறியோ மாநிலத் தேர்தல்!

ஒக்ரோபர் 6ந்தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு மூன்று அரசியல் கட்சிகளும் வரிந்து கட்டிக் கொண்டு தம்பட்டம் அடிக்கத் தொடங்கி விட்டன. மே 2ந்தேதி நடந்த நடுவண் அரசுத் தேர்தல் முடிவுகள் ஒன்ராறியோ மக்களின் கண்களைச் சிறிது திறக்க வைத்து விட்டன போலத் தெரிகிறது. அங்கே கூட குயூபெக் மாநில மக்கள் மிகவும் அகலமாகக் கண்களைத் திறந்தமையால் NDP எதிர்க் கட்சியாக மிளிர முடிந்தது. ஆனால் அத்தேர்தலில் NDP யினுக்கு ஏற்பட்ட அலை சுலபமாக இங்கு வீசுமா என்பது சந்தேகமே. இங்கு



ஆட்சி செய்த பொப்ரேயினது NDP அரசு தூக்கி எறியப்பட்டு 16 வருடங்கள் ஆகிய பின்னரும், பொப் றே NDP யினை விட்டோடி இப்போ லிபரல் கட்சிக்குத் தலைமை ஏற்று வழி நடத்துகின்ற போதிலும் மக்கள் அந்தக் கஷ்ட காலத்தினை இன்னும் மறக்க தயக்கம் காட்டுகிறார்கள் என்றே எண்ண வைக்கிறது. இன்னும் கருத்துக் கணிப்பில் NDP மூன்றாவது இடத்தில் அதுவும் நல்ல தூரத்தில் தான் உள்ளது. ஒரு மாதத்துக்கு முன்னர் 20% மக்கள்தான் ஆண்டிறியா ஹோவார்த் நல்ல முதல்வராக வருவார் எனக் கூறினார்கள். மக்குவின்ரியில் 25%த்தினரும் ரிம் ஹுடாக்கில் 31% த்தினரும் நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நிலை இப்போ மாற்றம் பெற்றுள்ளது. சென்ற வாரத்து கருத்துக் கணிப்பு ரிம் ஹுடாக் நிம்மதியாக பூரண பெரும்பான்மையுடன் முதல்வராவார் எனச் சுட்டுகிறது.

NDP ஜுன் 24ந்தேதி தனது தேர்தலுக்கு முன்னான சம்மேளனத்தினை நடத்தியுள்ளது. 107 தொகுதிகளில் இன்னும் பல தொகுதிகளுக்குப் போட்டியிட அபேட்சகர்கள் இல்லாமல் கட்சி தேடிக் கொண்டிருந்த நிலை மாறி அபேட்சகராவதற்கே போட்டியிடுகின்ற நிலமை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையே. மே 2க்குப் பிறகு NDP யின் மேல் மக்கள் கூடிய அக்கறை காட்டினாலும் ஆதரவு இன்னும் சொல்லும் தரத்திற்கு வரவில்லை எனலாம். அன்றைய தினமே கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தினைப் "மாற்றம் அங்கே மக்களை முதன்மைப் படுத்துகிறது" (Change That Puts People First) என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. மக்குவின்ரி இப்போதைக்கு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தினை வெளியிடமாட்டாராம். ஆகஸ்டு அல்லது ஜுலை மாதக் கடைசி யில் தான் வெளியிடுவாராம். இப்போதைக்கு மற்றைய இருவரும் சொல்வதில் பிழை கண்டு நேரத்தைப்போக்கிக் கொண்டிருக்கிறார்.

மூன்று தலைகளுமே மின்சாரம் எந்த அளவினுக்கு மக்களால் உபயோகிக்கப் படுகிறது என்பதை வைத்து அந்தப் பக்கமாக தாம் மக்களுக்கு உதவப் போகும் முறை பற்றித் தம்பட்டம் அடிக்கிறார்கள். NDP தலைவரும், கொன்சர்வேற்றிவ் தலைவரும் மின்சாரத்துக்கான கட்டண சிட்டைகளில் மாகாண அரசு பெறும் 8%த்தினைத் தாரை வார்ப்பதாக சொல்லியுள்ளார்கள். உங்களை விட்டேனா பார் என்று டால்ரன் மக்குவின்ரி Ontario Clean Energy Benefit எனும் திட்டத்தின் மூலம் மின்கட்டணத்தில் 10% மீளக் கொடுக்கப் போவதாகக் கூறியுள்ளார். ஒன்ராறியோவின் சூழல் ஆணையர் (Ontario's Environmental Commissioner) மில்லர் இந்த மூன்று பேருமே நாட்டின் நலன்கருதி இதனைச் செய்யவில்லை. வாக்குகளைப் பெறும் திட்டமே அன்றி வேறு இல்லை. சக்தியை விரயம் செய்யாமல் அதனைச் சேமித்து உபயோகிக்க மக்களுக்கு வழி காட்ட வேண்டியதே முறை. அதை விடுத்து இவர்கள் செய்யப் போவதை வைத்துப் பார்த்தால் யார் அதிகம் சக்தி செலவிடுகிறார்களோ அவர்களுக்குத்தான் அதிகமான பணம் மீளக்கிடைக்கவுள்ளது என்கிறார். உண்மையும் அதுதானே. சேமிப்பைப்பற்றி எவர் சிந்திக்கப் போகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சம்மேளனக் கூட்டத்திலே NDP தலைவி ஆண்டிறியா ஹோவார்த் தனது அரசு பதவிக்கு வருமானால் பெற்றோல் மீது எடுக்கப்படும் HSTயில் ஒவ்வொரு வருடமும் 1% தள்ளுபடி செய்யவுள்ளதாகக் கூறியுள்ளார். அப்படி செய்யும் பட்சத்தில் தமது ஆட்சிக்காலம் நான்கு ஆண்டுகள் முடிகின்ற பொழுது அந்தவருடம் ஒவ்வொரு குடும்பமும் சராசர-ியாக 135 டொலர் சேமிக்க முடியும் எனக் கூறியுள்ளார். இது ஒரு தேர்தல் தந்திரம் என எதிர்க்கட்சிகள் கூறிய போதும் அவர்கள் இங்கே கூறுவது ஓரளவுக்கு நியாயம் போலத் தெரிகிறது. ஆண்டிறியா ஹோவார்த் ஆரம்பத்தில் பெற்ரோலுக்கான HSTயில் மாகாணம் பெறும் 8% த்தினையுமே தள்ளுபடி செய்வேன் என்று கூறினார். இப்போ அதில் தடம் புரண்டு விட்டார். முதியோர் எப்பொழுதுமே தாம் செலவு செய்கின்ற அத்தனை காசினையும் கணக்குப் பார்த்தே செலவிடுகிறார்கள். முதுமை என்றதும் உடல் உபாதை அவர்களுடன் நெருங்கிய நட்பை ஏற்படுத்திக் கொள்ளும். ஆகவே வைத்தியசாலைகள் அவர்களது இன்னொரு ஆலயமாகவும் அமையும். வயதானோருக்குச் சக்கர ஊர்தி உதவி செய்வது அரசாங்கம். ஆனால் திடீரென தேவை ஏற்பட்டால் அப்புலன்ஸ் வண்டியை அழைக்க வேண்டி வந்து விடுவதும் உண்டு. அப்படி அழைத்தால் அதற்கான கட்டணமாக $45-00 கொடுத்தே தீரவேண்டும். தவிர்க்க முடியாது.

NDP அரசு பதவிக்கு வந்தால் இந்த அபத்தத்தினையும் நிறுத்துவதாகக் கங்கணம் கட்டி நிற்கிறார் அதன் தலைவி ஆண்டிறியா ஹோவார்த். அரசாங்கமே அம்புலன்ஸ் சேவைக்கான செலவினை ஏற்கும் என முதியோருக்கு ஆறுதல் கூறியுள்ளார். மக்குவின்ரி இதனை எள்ளி நகையாடியுள்ளார். அது பிழையானது எனக் கூறவில்லை மாறாக, NDP அரசு ஆட்சியில் இருந்த போதுதான் இந்தத் திட்டத்தினைப் புகுத்தியது. இப்போ அதே கட்சி அதனை நீக்குவோம் எனக் கூறுவது வேடிக்கையாக இல்லையா என்கிறார். உன்னால் முடியுமென்றால் செய் தம்பி அல்லது செய்பவனை ஏளனம் செய்யாமல், செய்யவிடு. அன்றைய NDP யில் அதிகாரத்தில் இருந்தவர்கள் பெரும்பாலும் எல்லோருமே ஒதுங்கி விட்டார்கள். அந்தப் பட்டியலில் கடைசியாக பீற்றர் கோர்மேஸ் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில்லை எனக் கூறிவிட்டார். ஆகவே முதலை குரங்குக்கு உன் அப்பன் இல்லாவிட்டால் பாட்டன் குற்றம் செய்துள்ளான் என்று கூறியது போல மக்குவின்ரி சொல்வதில் அர்த்தம் இல்லை. இம்முறை தேர்தலில் முக்கியத்துவம் பெறப்போவது உடநலச் சேவையில் கொண்டு வரவுள்ள



சீர்திருத்தங்களே. ஆனால் கட்சித்தலைமை-கள் அதனை பெரிது படுத்தாமல் அடக்கி வாசிக்கவே விரும்புகிறார்கள்.

புதிய கொன்சர்வேற்றிக் கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்தினால் அவர்கள் கட்டாயமாக உடநலசேவைச் செலவினத்தில் வெட்டுவார்கள். ஏறக்குறைய 3 பில்லியன் வெட்டு விழும் என்பது அவர்கள் ஊகம். ஆனால் ஹுடாக் என்ன சாமானியரா? இப்போ உடநலத்துறையினிலே ஏறக்குறைய 30% அனாவசியச் செலவு என்று சொல்லித்திரிந்தவர் பெரிய்யய குட்டிக்கரணம் ஒன்று அடிக்கிறார். உடநலசேவைகளுக்கான் செலவினத்தினை இப்போது உள்ளதிலும் பார்க்க 61 பில்லியன் அதிகரிக்கவுள்ளாராம். எப்படி இருக்கிறது கதை. Bolt from the blue என ஆங்கிலத்தில் சொல்வார்கள். மின்னாமல் முழங்காமல் வந்தது என்பது அதைத் தான். மக்குவின்ரி அரசுக்கு திடீரென ஒரு கரிசனம் ஏற்பட்டுள்ளது. ஒன்ராறியோவில் வீதிகள் எல்லாம் படு மோசமாக உள்ளன. இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஞானோதயம் கடந்த எட்டு வருடங்களும் இல்லாத சிந்தனை இப்போது ஏற்பட்டுள்ளது. தொகை கொஞ்ச நஞ்சமல்ல. 100 பில்லியன் டொலரினை அடுத்த 10 ஆண்டுகளில், வீதிகள், பாடசாலைகள், மற்றும் வைத்தியசாலைகளின் அகக் கட்டமைப்பினனைச் சீர்செய்வதற்காகச் செலவிடவுள்ளதாக மக்குவின்ரி அரசு தீர்மானித்துள்ளதாக அகக்கட்டமைப்புக்கான மந்திரி பொப் சியாறெல்லி (Bob Chiarelli) திருவாய் மலரந்தருளியுள்ளார். ஆனால் எதற்கெதற்கு எத்தனை தொகை என்பது பரம இரகசியமாம். கடந்த எட்டு வருடமும் ஏற்படாத ஞானோதயம் இப்போ ஏற்பட்டது என்றால் அது வெறும் புலுடா என்கிறது கொன்சர்வேற்றிவ் கட்சி. அடுத்த பத்து வருடங்களில் செய்யப் போவதாகச் சொல்வது இந்தத் தேர்தலில் தோல்வியைத் தவிர்ப்பதற்கே. கருத்துக்கணிப்பில் மக்கள் அபிமானத்தினை இழந்த லிபரல் கட்சி இப்படிப் புலுடா விடுவது எப்படியாயினும் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காகவே என்கிறது கொன்சர்வேற்றிவ் கட்சி.

சென்ற வாரம் வெளியிட்ட கருத்துக்கணிப்பின் படிக்கு புதிய கொன்சர்வேற்றிவ் கட்சியினுக்கு 41% ஆதரவும் லிபரல் கட்சியினுக்கு 26% ஆதரவும் NDPயினுக்கு 22% ஆதரவும் உள்ளதாகத் தெரிகிறது. சென்ற மாதத்தில் இருந்ததிலும் பார்க்க மிகச் சொற்ப அளவு ஆதரவு அதிகரித்துள்ளதைக் காண முடிகிறது. ஆனால் கொன்சர்வேற்றிவ் கட்சியின் ஆதரவு பெரும் அளவில் அதி-கரித்துள்ளது. எனவே அது பூரண பெரும்பான்மையைப் பெறுவது ஓரளவு உறுதியாகி விட்டது போலத் தெரிகிறது. இப்போதைய நிலவரத்தின் படி லிபரல் கட்சியினுக்கு 70 உறுப்பினர்களும், கொன்சர்வேற்றிவ் கட்சியினுக்கு 25 உறுப்பினரும் NDPயினுக்கு 10 உறுப்பினரும் சட்டசபையினில் உள்ளனர். அண்மைக் கருத்துக்கணிப்பின் படிக்கு நிலமை மாறி கொன்சர்வேற்றிவ் கட்சியினுக்கு 65 உறுப்பினர்களும், லிபரல் கட்சியனுக்கு 23ம் NDPயினுக்குப் 19 உறப்பினர்களும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாகக் கூறுகின்றனர். மே 02 ந்தேதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கொன்சர்வேற்றிவ் கட்சியினுக்கு 73 உறுப்பினர்களும் NDP



யினுக்கு 22 உறுப்பினர்களும், லிபரல் கட்சியினருக்கு 11 உறுப்பினர்களும் தேர்வு செய்யப் ஒன்ராறியோவிலிருந்து தேர்வு செய்யப்பட்டனர்.

ஆகவே ஆட்சி அமைக்கப் போவது கொன்சர்வேற்றிவ் கட்சி என்பதில் இரண்டாம் பேச்சுக்கு இடமில்லை. NDP கடினமாக உழைத்தால் இரண்டாவது இடத்தினைப் பிடிக்க முயலலாம் 1986ஆம் ஆண்டு நடை-பெற்ற தேர்தலின் பின்னர் லெஸ்ரர் பீற்றர்சன் லிபரல் கட்சியின் சிறுபான்மை அரசினை NDP யின் உதவியுடன் அமைத்தார். அதேநிலை இம்முறை வரக்கூடிய சாத்தியம் மிக மிகக் குறைவு. அப்படியாவது வரட்டும் என நாம் கனவு காண்போம், ஆனால் ஆட்சி அமைப்பது NDP யாக இருக்கட்டும். கடந்த எட்டு வருடமும் லிபரல் கட்சி ஆட்சியை நடத்தியது. அதற்கு முந்திய எட்டு வருடங்களும் கொன்சர்வேற்றிவ் கட்சி ஆட்சி அமைத்தது. இம்முறை அந்தப் பொறுப்பினை NDPயிடம் கொடுத்துப் பார்த்தால் என்ன என மக்கள் சிந்திப்பார்களா?



**பொ. கனகசபாபதி**

# 2012 ஒலிம்பிக் போட்டி

## விளையாட்டுத் தகவல்கள் 309

2012 ம் ஆண்டு உலக நாடுகள் கலந்து கொள்ளும் ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடைபெறுகிறது. 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த மகத்தான விளையாட்டு திருவிழாவை காண சர்வதேச நாடுகள் தயாராகி வருகின்றன. அடுத்த ஆண்டு லண்டனில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிக்கான விவரங்கள் தற்போது வெளியிடப்பட்டு உள்ளது. ஒலிம்பிக் போட்டி முறைப்படி துவங்குவதாக அறிவிக்கப்படும் தினத்திற்கு 2 நாட்கள் முன்பாக ஜீலை 25 ம் திகதி யன்று பெண்கள் கால்பந்து ஆட்டங்கள் கார்டிப் கிளாக்சோ மற்றும் காவென்டரியில் துவங்குகின்றன.




பிரிட்டனின் மூன்று நட்சத்திரங்களான ஜெஸிகா எனிஸ், கிறிஸ்டின் ஒகுருகு, பாவ்லா ராட்கிளிபே ஆகியோர் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கங்களை கைப்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உக்ரேனின் அதிவேக ஓட்டப்பந்தய வீர்ர் உசேன் போல்ட் ஒலிம்பிக்கில் அனைவருடைய கவனத்தையும் கவருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் 15 ம் திகதி யில் இருந்து ஒலிம்பிக் போட்டியை காண டிக்கெட்டுகள் விற்பனையாகின்றன. ஒலிம்பிக்கில் இடம் பெறும் 26 விளையாட்டுப் போட்டிகளின் விவரம் குறித்து, தகவல் கோரிய 22 லட்சம் மக்களுக்கு மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. லண்டன் ஒலிம்பிக் தலைவரான செபாஸ்டின்கோ கூறுகையில், ‘மிக சிறந்த நிகழ்ச்சிக்கான மிக சிறந்த டிக்கெட்டுகள்’ என்றார்.

### 2012 லண்டன் ஒலிம்பிக்கிற்கு சுவிஸ் கால்பந்து அணி தகுதி:

யுபா ஐரோப்பிய கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டத்தை சுவிஸ் அணி தவற விட்ட போதும் 2012 ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றது. அந்த அணியை சுவிஸ் பத்திரிகைள் புகழாரம் சூட்டி உள்ளன. டென்மார்க்கில் உள்ள ஆர்கஸ் நகரில் யுபா கால்பந்து இறுதிப்போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் ஸ்பெயின் அணி 2-0 கோல் கணக்கில் சுவிஸ் அணியை தோற்கடித்து சாம்பியன் ஆனது. இறுதிப்போட்டியில் சுவிஸ் அணி ஒரு கோல் கூட அடிக்கவில்லையே என்ற கோபம் ரசிகர்களுக்கும், பத்ததிரிகைகளுக்கும் கடுமையாக இருந்தது. இருப்பினும் சுவிஸ் அணி மிகுந்த உயரிய கவுரவத்துடனேயே நாடு திரும்பியது. அந்த அணி யுபா இறதிப்போட்டியில் ஆட தகுதி பெற்றதன் மூலம் 2012 ம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்று உள்ளது. யுபா ஐரோப்பிய கால்பந்து போட்டியில் இறதிபோட்டி வரை முன்னேறிய சுவிஸ் அணி துவக்க சுற்று மற்றும் அரை இறுதி ஆட்டங்களில் தன்னை எதிர்த்து எதிரணி ஒரு கோல் கூட அடிக்க முடியாத வலுவுடன் இருந்தது. இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி கடுமையாக ஆடி பலம் வாய்ந்த சுவிஸ் அணியை தோற்கடித்து உள்ளது. ஸ்பெயின் அணிக்கு இது 3 வது சாம்பியன் பட்டமாகும். இதற்கு முன்னர் உலக மற்றும் ஐரோப்பிய பட்டங்களை அந்த அணி தனது வெற்றி பாக்கெட்டிற்குள் வைத்துள்ளது. சுவிஸ் அணியினர் மிகவும் பொறுமை மிக்கவர்களாக உள்ளனர். மிக சிறிய தேசத்தின் கால்பந்து அணி என்ற போதும் அற்புதமாக ஆடி யுபா இறுதிப்போட்டிக்கு முன்னேறி சாதனை படைத்து உள்ளனர்.

### கோலூன்றிப் பாய்தலில் யாழ் மாணவி சாதனை

இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு தேசிய மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டிகளில் 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில்....அளவெட்டி அருணோதயா கல்லூரி மாணவி ச.தனுஷா அகில இலங்கை ரீதியிலான புதிய சாதனை-யொன்றை படைத்துள்ளார். தியகம மஹிந்த ராஜபகஷ மெய்வன்மை அரங்கில் நடைபெறும் இப்போட்டிகளின் முதல்நாளான இன்று வியாழக்கிழமை தனுஷா 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து இச்சாதனையை படைத்தார். இதற்குமுன் 2009 ஆம் ஆண்டு ஆன் பியுமாலி 2.90 மீற்றர் பாய்ந்தமையே முந்தையா சாதனையாக இருந்தது. தனுஷா , 2009 ஆம் ஆண்டு கொழும்பு சுகததாச அரங்கில் நடைபெற்ற போட்டியில் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் 2.81 மீற்றர் பாய்ந்து தேசிய சாதனையொன்றை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பெண்கள் உலகக் கோப்பை கால்பந்து போட்டி:

கனடாவை வீழ்த்தி வெற்றியுடன் தொடங்கியது ஜேர்மனி பெண்கள் உலகக் கோப்பை கால்பந்து தொடரை நடப்பு சாம்பியன் ஜேர்மனி அணி அமர்க்களமாக துவக்கியது. முதல் போட்டியில் கனடாவை சுலபமாக வீழ்த்தியது. ஜேர்மனியில் பெண்களுக்கான 6 வது உலகக் கோப்பை தொடர் நடக்கிறது. இதில், உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன. வரும் ஜூலை 17 ம் திகதி இறுதிப்போட்டி நடக்க உள்ளது. வண்ணமயமான துவக்க விழாவுடன் போட்டிகள் துவங்கின. ”ஏ” பிரிவில் நடந்த முதல் போட்டியில் ஜேர்மனி, கனடா அணிகள் மோதின. இதில், ஜேர்மனி அணி அபாரமாக ஆடியது. ஆட்டத்தின் 10 வது நிமிடத்தில் கெர்ஸ்டின் முதல் கோல் அடித்தார். முதல் பாதி முடியும் தருணத்தில் செலியோ இரண்டாவது கோல் அடிக்க, ஜேர்மனி 2-0 என வலுவான முன்னிலை பெற்றது. கனடா சார்பில் 82 வது நிமிடத்தில் சின்கிளேர் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார். இறுதியில் ஜேர்மனி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. கடந்த 2003, 2007 ல் கோப்பை வென்ற ஜேர்மனி, தற்போது ‘ஹாட்ரிக்’ பட்டம் வெல்ல காத்திருக்கிறது. இந்நிலையில் முதல் போட்டியில் அசத்தல் வெற்றி பெற்றதை, உள்ளூர் ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடினர். மற்றொரு போட்டியில் பிரான்ஸ் அணி நைஜீரியாவை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

### உலகக் கோப்பை வெல்வது எனது கனவு அல்ல: மெஸ்சி

அர்ஜென்டினாவின் முன்னணி கால்பந்து வீரரான லயோனல் மெஸ்சி, கோபா அமெரிக்கா கோப்பையை வெல்வதே தனது கனவு என்று கூறியுள்ளார். அர்ஜென்டினா அணிக்கு நீண்ட காலமாக கோபா கோப்பை கனவாகவே இருந்து வருகிறது. தனது நாட்டிற்கு கோப்பை வென்று பெருமை சேர்க்க வேண்டும் என்று மெஸ்சி கூறினார். 1993 ம் ஆண்டிலிருந்து அர்ஜென்டினா அணிக்கு கோபா அமெரிக்க கோப்பை கனவாகவே உள்ளது. கோபா அமெரிக்கக் கோப்பை போட்டி 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. உலக அளவில் பிரசித்தி பெற்ற இந்தப் போட்டியில் தென் அமெரிக்காவை சேர்ந்த 10 அணிகள் பங்கேற்கின்றன. கடந்த 1916 ம் ஆண்டு முதல் இந்த சர்வதேச போட்டி நடைபெறுகிறது. கோபா அமெரிக்காவில் அர்ஜென்டினா இறுதியாக 1993 ம் ஆண்டு தான் சாம்பியன் ஆகி இருந்தது. மெஸ்சி போன்ற உலகின் தலைச்சிறந்த வீரர்கள் இருந்த போதும், அர்ஜென்டினா அணி கோபா கோப்பையில் சமீப ஆண்டுகளாக வெற்றி பெற முடியாத நிலை உள்ளது.

அர்ஜென்டினா மக்களும், பார்சிலோனா மக்களும் தன்னை பெரிதும் போற்றுகின்றனர். இருப்பினும் துரதிஷ்ட வசமாக கோபா அமெரிக்க கோப்பை பெற முடியாத நிலை உள்ளது. எனது கனவு உலகக் கோப்பையை வெல்வது அல்ல. கோபா அமெரிக்க கோப்பையை வெல்வது தான் எனது லட்சியக் கனவு என்றும் மெஸ்சி தெரிவித்தார். ஒருநாள் கிரிக்கட் போட்டியில் புதிய விதிமுறைகளை கொண்டுவர ஐசிசி திட்டம் ஒருநாள் கிரிக்கட் போட்டியில் புதிய விதிகளைக் கொண்டுவர சர்வதேச கிரிக்கட் கவுன்சிலின் தலைமைச் செயற்குழு பரிந்துரை செய்துள்ளது. இதன்படி ஒருநாள் கிரிக்கட் போட்டியில் ஒவ்வொரு இன்னிங்ஸிலும் இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்தப்படவுள்ளன. இருவேறு முனைகளில் இருந்து பந்து வீச இருவேறு பந்துகள் பயன்படுத்தப்படும். பை ரன்னர் வைத்துக் கொள்வதும் நிறுத்தப்படும். இதேபோல பவர் பிளே 16 முதல் 40 ஓவர்கள் வரை பயன்படுத்த கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளன. இதன் மூலம் ஒருநாள் கிரிக்கட் போட்டிகளை மேலும் சிறப்பாக நடத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஒரு ஓவருக்கு ஒரு ஷார்ட் பந்து தான் வீச வேண்டும் என்பது 2 பந்துகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பவர் பிளே அல்லாத ஓவர்களில் 30 யார்டு வட்டத்துக்கு வெளியே 4 களத்தடுப்பாளர்கள் மட்டும் தான் இருக்க முடியும். ரன் அவுட்டின் போது பந்தைத் தடுக்கும் வகையில் துடுப்பாட்ட வீரர் ஓடினால் உடனடியாக அவுட் கொடுக்க முடியும். டெஸ்ட் போட்டிகளை பகல் - இரவாக நடத்துவது, போன்ற பரிந்துரை களையும் ஹாங்காங்கில் திங்கள்கிழமை நடைபெற்ற ஐசிசி தலைமைச் செயற்குழு கூட்டம் அளித்துள்ளது.

### டிஆர்எஸ் முறையை ஏற்றது பிசிசிஜ் மாற்றங்களுடன் அமல்படுத்த ஐசிசி முடிவு

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



# நிதி அமைச்சரின் அடமானக் கடன் மாற்றங்கள் ஆதன வியாபாரத்திற்கு நன்மை பயக்கும்!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 344

பாதை தெரியாதவன் வீடு வந்து சேரமுடியுமா? திசை தெரியாமல் திரிவது போல் தான் முடியும். இறுதியில் நிம்மதியற்ற முடிவாகத் தான் இருக்கும். சரியான பாதையை திட்டமிடுவதன் மூலம் தேடிய இடத்தைப் போய்ச்சேரமுடியும். அண்மையில் கனடிய மத்திய நிதி அமைச்சர் மாண்பு மிகு ஜிம் ஃபிளஹற்றி (Jim Flaherty), அடமானக்கடன் கொடுக்கும் முறையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருந்தார். அதன் தாக்கங்கள் சிறிது சிறிதாக தெரியவருகின்றது. தமது எல்லையைக் கடந்து அடமானக்கடன் பெற்றவர்களுக்கு புதிய அடமானக் கடன் மாற்றங்கள் தண்டவாளம் போட்டிருப்பதாகவே கொள்ளலாம். சரியான பாதை வகுத்தது தெரிகின்றது.

அடமானக்கடன் பெறுவது இன்றைய காலகட்டத்தில் இலகுவானதாக இருப்பதில்லை. அத்துடன் அடமானக்கடன் பெற்றுக்கொடுக்கும் பலரும், மெல்லமெல்ல இந்த தொழிலிருந்து காணாமல் போகின்றார்கள். புதிய மாற்றங்களை நிதி அமைச்சர் கொண்டுவந்ததன் நோக்கம் அடமானக்கடன்பெறும் தொகையில் அதிகூடிய கடன் எல்லையில் இருப்பவர்களை வீடுவாங்கும் சந்தையிலிருந்து அகற்றுவதே. அவ்வாறு செய்வதால், உண்மையில் அடமானக்கடனை ஒழுங்காக செலுத்தக்கூடியவர்களே ஆதனச் சந்தையில் இருப்பார்கள் என அவர் அண்மையில் கூறியிருந்தார். கனடிய மக்களின் கடன் அதிகரித்து வருகின்றது.



அத்துடன் வட்டிவீதம் குறைவாக இருக்கின்றது. எவ்வளவு காலம் இவ்வாறு தொடர்ந்து வைத்திருக்க முடியும் என்பது அவரின் விவாதம். இவ்வருடம் இல்லாவிட்டாலும் அடுத்த வருடம் வட்டிவீதம் அதிகரிக்கலாம்.

வட்டிவீதம் அதிகரிக்கும்போது அதிக கடன் பெற்றவர்கள் திண்டாட்டத்தை அடையலாம் என்பது அவரின் கணிப்பு. வீட்டின் சராசரி விலை அதிகரித்து செல்வதனைக் காணலாம். இருந்தபோதிலும் விற்கப்படும் மொத்த ஆதனத்தின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. வீடு ஒவ்வொருவரும் வாழ்வதற்கு தேவை. வீடு வாங்குவது நல்லது. தரமான முகவரைக் கொண்டு குறிப்பிட்டவரின் வருமானத்திற்கு ஏற்ப வாங்குவதே சிறந்தது. தவறான முடிவு பலத்த இழப்பை தேடித்தரலாம்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

HomeLife/GTA
Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"
5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

CONDO. FOR SALE

KENNEDY & HWY 401
2 Bedroom + 1 parking condo for sale. Asking Price $128,900.

HOUSE FOR SALE
MARKHAM & STEELES
4 Bedroom house for sale.
5 Years old. 5 Washrooms.
Asking price $639,000.

CONDO. FOR SALE

WARDEN & FINCH
3 Bedroom condo fer sale. Asking price $139,900

FOR LEASE

FINCH & MIDDLEFIELD
750 sq.ft, 1500sq.ft.
Above Embassy store.
$15 Gross Rent.

CONDO FOR SALE
MCCOWAN & ELLESMERE
Brand new 1 bedroom + den condo for sale.
Walking distance to Scarborough Town Center.
Immediate Occupancy.
Asking $249,900

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease.
Suitable For Various Kind Of Uses, Close To Kennedy Subway Station.

HOUSE FOR SALE
(HWY404 / MULLOCK).
3 Bedroom + walk-out house for sale. 2 Story house. New Market master bedroom + full washroom. Immediate occupancy. Asking only $369,900

FOR LEASE

FINCH & MIDDLEFIELD
Main Floor Unit In GTA Square Shopping Mall.
Renovated unit.

# நிதி அமைச்சரின்... 2012...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

நகரத்தின் சில பகுதிகளில், ஒரு வீட்டை வாங்குவதற்கு பலர் போட்டி போடுகின்றார்கள். புதிய அடுக்குமாடி மனைகளின் விலைகளும் அதிகரித்தே செல்கின்றது. இந்நிலைமை ரொறொன்ரோ பெரும்பாகத்தில் சகல பகுதிகளிலும் நடைபெறுகின்றது என்று கூறமுடியாது. சில பகுதிகளில் சந்தையிலுள்ள வீடுகள் விற்கப்படாமலே காணப்படுகின்றது.

அண்மையில் நிதி அமைச்சர் வீட்டு உரிமையாளர்களிற்கு ஒரு ஆலோசனை வைப்பதாகவே இருந்தது. அதாவது அடமானக்கடனை குறுகிய காலத்தில் செலுத்தும் முறையைக் கையாழுவது. அதாவது மேலதிக செலவுகளை கட்டுப் படுத்தி, அடமானக் கடனை கட்டுப்பாட் டிற்குள் வைத்திருப்பது. கனடியமக்கள், தொழிலிருந்து ஓய்வு பெறும் காலத்தில் (Retirement Time) அடமானக்கடனை பெரிதாக வைத்திருப்பது சிறந்ததல்ல என்ற தொனியில் விளக்கம் கொடுத்திருந்தார்.



கீழுள்ள நடைமுறை உதாரணத்தை நோக்குவோம்.

அண்மையில் ஒருவர் வீடு வாங்க வேண்டும் என்று எமது நிறுவனத்திற்கு அழைத்திருந்தார். அவரின் அதிக முதலீடு 5% மட்டுமே. அத்துடன் அவர் மட்டும் இரு தொழில் புரிகின்றார். மனைவி தொழில் புரியவில்லை. சிறுபிள்ளைகளும் உள்ளனர். அவரின் வருமானத்தின் மூலம் $300,000 இற்கு மேல் ஒரு மனை/வீடு வாங்க முடியாது. இருந்தபோதிலும் அவரின் எண்ணப்படி $400,000 இற்கு மேற்பட்ட விலையுள்ள வீடே வாங்க வேண்டும் என்பதே. நடைமுறையில் இந்த முடிவு புத்திசாலித்தனமானதல்ல.

எமது நிறுவன முகவர் அவரிற்கு எவ்வளவோ, உதாரணங்கள் மூலம் விளங்கப்படுத்தியும் அவரின் எண்ணத்தை மாற்றமுடியவில்லை. இறுதியாக எமது வீட்டு முகவர் அவரிற்கு ஆலோசனை கூறுவதை நிறுத்தி விட்டார்.

சிலகாலங்களின் பின்னர் குறிப்பிட்ட அவர் எமது நிறுவனத்து முகவரிற்கு கூறியிருந்தார் தான் வேறு வீட்டுமுகவரினூடாக $480,000 இற்கு வீடு வாங்கியுள்ளதாகவும் அடமானக் கடனும் பெற்றுவிட்டதாகவும் கூறியுள்ளார். இவ்வாறு வீடு வாங்குபவர்கள் பலர் இன்னமும் உள்ளார்கள்.

இவ்வாறாக வீடு வாங்குபவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். சரியென நாம் நினைக்கும் நியாயமான ஆலோசனையை மட்டுமே நாம் கொடுக்க முடியும். முடிவு வாங்குபவர்கள் /விற்பவர்களினுடையதே. அதிக முதலீட்டை ஆரம்ப முதலீடாக இட்டு வீடு ஒன்றை வாங்குவதால் பல எதிர்காலச் சிக்கல்கள், சங்கடங்கள் அதனால் வரும் பாதிப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது எனது ஆலோசனை. பலர் அண்மைக்காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளையும் மற்றையவர்களின் வார்த்தைகளும் மட்டும் பார்த்து ஆதனம் வாங்குகின்றார்கள். ஆதன விற்பனைக்கு நீண்டகால சரித்திரம் இருக்கின்றது. அதனையும் ஆராய்வது நல்லதாகலாம்.


## முன்னறிவித்தலை நம்பலாம்?

### *Condo. market will rise, report says*

REAL ESTATE Despite an unprecedented influx of new supply on the market, the Toronto condominium sector will continue to do well over the next five years, says a report released yesterday by the conference Board of Canada and Genworth Financial Canada.

The price of a condominium is forecast to rise from $239,816 to $292,077 in 2011, an increase of 4 per cent annually.

***TORONTOSTAR NEWS SERVICE JANUARY 31, 2007***


06ஆம் பக்கத்தொடர்ச்சி

கிரிக்கெட்டில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்திய நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் (டிஆர்எஸ்) முறையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) ஏற்றுக் கொண்டுள்ளது. பிசிசிஐ-யின் எதிர்ப்பை அடுத்து டிஆர்எஸ் விதிமுறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் பின்னரே பிசிசிஐ அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே இனி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் டிஆர்எஸ் முறை அமல்படுத்தப்படும். விதியில் ஏற்படுத்தியுள்ள மாற்றத்தின்படி எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தால், அதனை எதிர்த்து டிஆர்எஸ் விதியின் கீழ் முறையீடு செய்ய முடியாது. இதில் களத்தில் உள்ள நடுவரின் முடிவே இறுதியானது. எனெனில் எல்பிடபிள்யூ அவுட்டை முடிவு செய்ய, டிஆர்எஸ் விதியில் கடைபிடிக்கப்பட்ட 'பால்-டிராக்கர்' தொழில்நுட்பம் இனி இருக்காது. 'ஹாட் ஸ்பாட' தொழில்நுட்பம் மட்டுமே இருக்கும். ஹாங்காங்கில் திங்கள்கிழமை நடைபெற்ற ஐசிசி-யின் தலைமை செயற்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவு ஐசிசி-யின் ஒப்புதலுக்காக செவ்வாய்கிழமை அனுப்பி வைக்கப்படும். அதன் பின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் டிஆர்எஸ் மீண்டும் அமலுக்கு வரும்.

### பிசிசிஐ-க்கு வெற்றி:

டிஆர்எஸ் முறையில் மாற்றம் கொண்டுவர ஐசிசி ஒப்புக் கொண்டது பிசிசிஐ-க்கு கிடைத்த வெற்றியாகவே கருதப்படுகிறது. ஏனெனில் இந்தியா - இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் கிரிக்கெட்டில் டிஆர்எஸ் முறை கூடாது என்று பிசிசிஐ வலியுறுத்தி வந்தது. இதற்கு பல்வேறு தரப்பில் இருந்து எதிர்ப்பும் கிளம்பியது. முன்னதாக 'பால்-டிராக்கர்' தொழில் நுட்பத்தின் மூலம் எல்பிடபிள்யூ அவுட்டை முடிவு செய்வதை ஏற்க முடியாது என்று பிசிசிஐ கூறியது. இந்நிலையில் அந்த முறை திருப்பப் பெறப்பட்டுள்ளது. மாற்றங்களுடன் கூடிய டிஆர்எஸ் விதியை ஏற்றுக் கொள்வதாக பிசிசிஐ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இன்பிஃரா ரெட் கேமரா, ஆடியோ டிராக்கிங் போன்றவற்றையும் பயன்படுத்தலாம், கிரிக்கெட்டில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை ஏற்றுக் கொள்கிறோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்தியா- இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் போட்டியில் டிஆர்எஸ் விதி அமுல்படுத்தப்படும் என்று தெரிகிறது. முன்னதாக உலகக் கோப்பையின் போது டிஆர்எஸ் முறையால் பல்வேறு சர்ச்சைகள் கிளம்பியது. இந்த முறையால் சச்சின் உள்பட பல வீரர்கள் அவுட் ஆவதில் இருந்து தப்பினாலும், கேப்டன் தோனி உள்பட பலர் இந்த விதிக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். ஆனால், களத்தில் உள்ள நடுவர்களின் தீர்ப்பை எதிர்த்து, மூன்றாவது நடுவர்களிடம் முறையீடு செய்ய டிஆர்எஸ் விதி வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

2015 உலகக் கோப்பையில் 14 அணிகள் 2015 உலகக் கோப்பையில் 14 அணிகளை விளையாட வைப்பது என ஹாங்காங்கில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. முன்னதாக 2015 உலகக் கோப்பையில் 10 அணிகளை மட்டுமே விளையாட வைக்கப்போவதாக ஐசிசி அறிவித்திருந்தது. இதற்கு அயர்லாந்து, நெதர்லாந்து கிரிக்கெட் வாரியங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து 10 அணிகள் என்ற முடிவை கைவிட்டது ஐசிசி.

14 அணிகளை சேர்ப்பதால் உலகக் கோப்பை போட்டி நீண்ட நாள்கள் இழுப்பதாக எழுந்த புகாரை அடுத்து ஐசிசி அணிகளை குறைக்க முடிவு செய்தது.

2015-ல் நியூசிலாந்து மற்றும் அஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலகக் கோப்பையில் 14 அணிகளை விளையாட வைப்பது என ஐசிசி முடிவு செய்துள்ளதால், அயர்லாந்து, நெதர்லாந்து உள்ளிட்ட மேலும் 4 அணிகளுக்கு உலகக் கோப்பையில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும்.

### விம்பிள்டன் டென்னிஸ்:

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளின் ஆடவர் ஒற்றையர் 4 வது சுற்றிற்கு ரபேல் நடால், ரோஜர் பெடரர், நோவக் ஜோவிக் முன்னேறியுள்ளனர். 3 வது சுற்றுப் போட்டிகளில் உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ஸ்பெயின் வீரர் ரபேல் நடால், கில்லஸ் முல்லரை 7-6 (8-6), 7-6 (7-5), 6-0 என்ற நேர் செட்களில் தோற்கடித்தார். மற்றொரு போட்டியில், உலகத் தரவரிசையில் 3 வது இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர், 28 வது தரவரிசை வீரரான அர்ஜெண்டினாவின் டேவிட் நல்பேண்டியனை எதிர்கொண்டார். பெடரரின் சிறப்பான ஆட்டத்தால், 6-4, 6-2, 6-4 என்ற நேர் செட்களில் நல்பேண்டியனை வீழ்த்தி 4 வது சுற்றிற்கு முன்னேறினார். 2 வது தரவரிசை வீரரான நோவக் ஜோவிக், 32 வது இடத்தில் உள்ள மார்கோஸ் பக்டாடிஸை 6-4, 4-6, 6-3, 6-4 என்ற செட்களில் வென்றார். நேற்றைய 3 வது சுற்றுப் போட்டியில், உலகத் தரவரிசையில் 5 வது இடத்தில்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**

# Mike Srinathan B.Sc

**Sales Representative**

**Direct 416-276-1225**

**When you list your home with Mike, you receive these Guarantees**

* Your home advertised 24 hours a day until it is sold
* Your home advertised in full colour prints ads every week until it is sold
* Our Team of Specialists for the same price as hiring a single agent
* Your home sold in 90 days or we buy it *




## வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமென்றில்

**Mccowan/Ellesmere**



**$235,000**
Leve 6, Bedrooms 1+1
1 Washroom

**Salem Rd N/Gillette Dr**



**$365,000**
Bedrooms 3
3 Washrooms

**Wanless/Ching**



**419,000**
Bedrooms 3
3 Washrooms

**Markham/Steeles**



**399,999**
Bedrooms 3
2 Washrooms
Ceramic/Hardwood Floors

**Main St & 10th Line**



**$429,000**
Bedrooms 4
3 Washrooms

**Hoover Park/Reeves Way**



**$429,000**
Bedrooms 3
3 Washroom
Ceramic Floors

**Salem Rd N/Gillette Dr**



**$429,000**
Bedrooms 3
3 Washroom
Parquet Floors

**Mccowan/Dennison**



**439,000**
Bedrooms 4
4 Washroom
Hardwood Ceramic Floors

**16th And Cornell Centre**



**464,000**
Bedrooms 3
3 Washroom
Ceramic/Hardwood Floors

**10th/Mantle**



**$468,900**
Bedrooms 4
3 Washroom
Tile/Hardwood Floors

**Denison/Middlefield**



**473,000**
Bedrooms 3
3 Washrooms
Ceramic/Hardwood Floors

**Salem Rd N/Gillette Dr**



**$498,000**
Bedrooms 3+1
4 Washrooms
Ceramic/Broadloom Floors

**14th Ave/Box Grove Bypass**



**524,700**
Bedrooms 3
3 Washroom
Ceramic/Hardwood Floors

**Kennedy/16 Th Ave**



**538,000**
Bedrooms 3
4 Washroom
Ceramic/Hardwood Floors

**Main St & 10th Line**



**$559,000**
Bedrooms 3
3 Washroom

**9th Line/16th Ave**



**$559,900**
Bedrooms 4
3 Washrooms
Ceramic/Hardwood Floors

**14th Ave/Markham**



**$569,900**
Bedrooms 4+1
4 Washrooms
Centre Island/Hardwood Floor

**14th/Box Grove Bypass**



**$599,000**
Bedrooms 4
3 Washroom
Hardwood Floor/Ceramic

**9th Line And 14th Ave.**



**649,000**
Bedrooms 4
4 Washroom
Ceramic/Hardwood Floors

**Markham/Bur Oak**



**$675,000**
Bedrooms 5+2
5 Washrooms
Hardwood/Ceramic Floors

RE/MAX®

PH1-7800Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800 Fax: 905-470-7770
Email: esrinathan@trebnet.com

**I can also assist you Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**

Realtron Realty Inc, Brokerage
Each office independently owned and operated

# உடல் அங்கவீனமானவர்களின் சௌகரியமான இயக்கத்திற்கு கைகொடுக்கும் கனடாவின் தேசிய நன்கொடை நிறுவனம்

## கனடிய தகவல் தொடர் 151

***March of Dimes Canada***

**உடல் அங்கவீனமான அந்த மனிதனால் கால் அடி எடுத்து வைத்து தமது வீட்டு படிகளில் ஏறி இறங்க முடியாத நிலைமை.**

**ஏற்கெனவே வாகனம் ஓட்டித் திரிந்தவருக்கு எதிர்பாராத விதமாக சக்கர நாற்காலியின் உதவியுடன் வெளியே போக வேண்டிய நிலைமையினால் தமது வாகனத்தில் ஏறி தாமாக தமது வாகனத்தினை ஓட்டி செல்ல முடியாத இன்னொரு நிலைமை!.**



இவர்களின் சௌகரியமான செயல்பாடு களுக்காக அவர்கள் குடியிருக்கும் வீட்டில் செலுத்தும் வாகனத்தில்! ஏதாவது புனரமைப்புகள், வசதியான மாற்றங்கள் சில செய்தால் அவர்களினால் இன்னொருவரின் உதவியில்லாது ஓரளவேனும் இலகுவாக இயங்கமுடியும். ஆனால் அத்தகைய புனரமைப்புக்கும், மாற்றங்கள் செய்வதற்கும் பணம் தேவை!

எல்லோருக்கும் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கையில் பணம் இருக்குமா? என்ன? இத்தகைய நிலையில் இருப்பவர்களுக்கு அவர்களின் குடியிருப்பு வீட்டில், வாகனத்தில் அவர்களின் வசதிக்கு ஏற்றமாதிரி மாற்றங்கள் செய்வதற்கு ஒரு சிறுகைகொடுப்பதற்காக கனேடிய அரசு களின் ஆதரவுடன் ஒரு தேசிய நன்கொடை நிறுவனம் (National Charity) ஒன்று செயல்பட்டு வருவதனை அறிந்து கொண்டீர்களா? அதுவே **'மார்ச் ஒவ் டைம்ஸ் கனடா'** (March of Dimes Canada) என்னும் நிறுவனம் ஆகும்.

**உடல் அங்கவீனமானவரின் செயல்பாடுகளுக்கு வசதியாக வீடு களில் புனரமைப்பு** (Home Modification) **என்பதற்கு உதாரணமாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.**

• RAMPS on the steps and the paving of an access path between home to road.
வீட்டு வாசல்படிகளில் ஒரு சரிவான ஏற்ற இறக்கப் பாதை ஒன்றினை சீமெந்து அல்லது மரங்களினால் உருவாக்கி வீதி வரை சக்கர நாற்காலியிலிருந்து இலகுவாக போகும் வசதியினை உருவாக்குதல்.

• Stairway lifts & Lifting
ஆசனத்தில் உட்கார்ந்தவாறு ஏறி இறங்கும் இயங்குதாங்கியினை வீடுகளில் மேல் மாடிக்குப் போகும் படிகளின் ஓரமாக பொருத்தும் வசதியினை உருவாக்குதல்.

• Widening of doors or replacement of conventional door by sliding or folding doors.
தேவைக்கு ஏற்றமாதிரி கதவுகளை அகலமாக்கி இலகுவாக மடிக்கும் கதவுகளை உருவாக்குதல்.

• Rearrangement of bathrooms including installation of wheel in showers wall grab bars and bathtub safety rails.
குளியல் அறையில் சக்கர நாற்காலியிருந்தவாறு குளிக்கும் மாதிரியான வசதிகள், தாமாகவே பிடித்து எழும்பும் மாதிரியான வசதிகளை குளியல் அறையினுள் உருவாக்கி கொடுத்தல்.

• Rearrangement and lowering or raising of kitchen equipment and cupboards
தாமாகவே சமைக்கக் கூடியளவுக்கு சமையலறையினுள் புனரமைப்பு மாற்றங் களையும் வசதிகளையும் ஏற்படுத்துதல் போன்றவற்றினை உதாரணமாக குறிப்பிடலாம்.

உடல் அங்கவீனமானவர்கள் தங்கள் வாகனத்தினை சுயமாக/தாமாக செலுத்தும் நிலைமைக்கு வாகனங்களில் புனரமைப்பு (Vehicles modifications) என்பதற்கு உதாரணமாக பின்வரும் விடயங்களை குறிப்பிடலாம்.

• Specialized seating and related accessories required for transportation purposes.
விசேடமான ஆசன இருக்கைகளில் மாற்றங்கள் புனரமைப்புகளை ஏற்படுத்துதல்.

• Lowering of the floor at a vehicle.
சக்கர நாற்காலியுடன் வாகனத்தில் இலகுவாக ஏறி இறங்கும் வசதிக்காக நிலமட்டத்திற்கு சற்று பதிவு இறக்கம் செய்யும் மாற்றத்தினை ஏற்படுத்துதல்.

**உடல் அங்கவீனமானவர் குடியிருக்கும் வீடுகளில் அல்லது அவர்கள் உபயோகிக்கும் வாகனத்தில் புனரமைப்பு செய்வதற்கு எவ்வளவு தொகை வரை இத்தேசிய நன்கொடை நிறுவனம் உதவி செய்யும்?**

இக்குறிப்பிட்ட தேசிய நன்கொடை நிறுவனத்திலிருந்து புனரமைப்பு தேவை களுக்கு ஆக கூடுதலாக $15,000 வரையே பண உதவி பெறலாம். அதற்கு மேலால் ஏற்படும் செலவுகளுக்கு வேறுவழிகளில் பெறமுயற்சிக்கலாம். இதிலும் உடல் அங்கவீனமானவரின் வருட வருமானத்தினை அடிப்படையாக கொண்டு புனரமைப்பு செலவில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினை மட்டும் ஆக கூடுதலாக $15,000 டொலர்வரை வழங்குவார்கள்.

உதாரணமாக
• வருடவருமானம் $30,000 டொலருக்கு மேலாக இருப்பவர்கள் இந்நிறுவனத்தில் பண உதவி பெறமுடியாது.

• $15,000 - $20,000 க்கு இடையில் வருமானம் உள்ளவர்களுக்கு மொத்த புனரமைப்பு செலவில் 60% வீதம் வரை பெறலாம்.

• எதுவித வருமானமும் இல்லாதவர்கள் $15,000 டொலர்வரை புனரமைப்பு செலவினை பெறலாம்.

**நன்கொடைப்பணம் இந்நிறுவனத்தி லிருந்து பெறுவதற்குரிய தகைமைகள் யாவை?**
• விண்ணப்பிக்கும் உடல் அங்கவீனமானவர் நிரந்தரமாக ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
• ஒரு வருடத்திற்கு மேலாக உடல் இயங்கமுடியாத அங்கவீனமான நிலையில் இருத்தல் வேண்டும். அங்கவீனமான நிலைமை என்பது அன்றாட வாழ்வின் செயல்பாட்டுக்கு தடையாக இருக்கின்றது என்பது மருத்துவ அத்தாட்சிகளுடன் நிரூபித்தல் வேண்டும்.
• வருமானத்தினை நிரூபிக்கும் வகையில் கனேடிய அரசுக்கு சமர்ப்பிக்கும் பத்திரங்களின் பிரதிகளை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**இத்தேசிய நன்கொடை நிறுவனத்தில் இருந்து பண உதவி பெறுவதற்கு எப்படி அணுகுவது?**
www.marchofdimes.ca
என்னும் இணையத்தளத்தினுள் சென்றால் முழுத் தகவல்களையும் அறிந்து கொள்ளலாம். இவ் இணையத்தளத்தில் இருந்து விண்ணப்பப்படிவத்தினை பதிவு இறக்கம் செய்து நிரப்பி அதில் குறிப்பிட்டிருக்கும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்

Home & Vechile Modifications Program
March Of Dimes Canada
291, King Street, 3rd Floor
London, ON N6B 1R8

**தொலைபேசி** - 1.800.263.3463
**தொலைநகல்** - (519).432.4923
**மின்அஞ்சல்** - info@marchofdimes.ca
**(மின்அஞ்சல் மூலமாகவும் விண்ணப்பம் மனுச்செய்யலாம்)**

விண்ணப்பத்தில் கேட்கப்படும் கேள்வி களுக்குப் பூரணமாக பதில் வழங்குவதுடன் பின்வரும் பத்திரங்கள் ஆதாரபூர்வமாக இணைக்கப்படல் வேண்டும்.

• வருமானத்தினை நிரூபிக்கும் ஆதாரப் பத்திரங்கள் (Proof of income from a T(1) general or notice of tax assessment)

• ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவர் என்பதற்கான ஆதாரம்
(Proof of ontario residence)

• மருத்துவரின் அத்தாட்சியுடன் உடல் இயங்கமுடியாது என்பதன் நிரூபணம்.
(Proof of disability)

• படத்துடன் சேர்த்த அடையாள அட்டையின் பிரதி
(Proof of photo identification)

• புனரமைக்க வேண்டிய வீடு அல்லது வாகனத்தின் படங்கள் (Photographs of areas of home / vehicle to be modified)

• இரு தனித்தனி கம்பனியினால் வழங்கப்பட்ட உத்தேசிக்கும் புனரமைக்கும் நிர்மாண செலவுகள் எவ்வளவு வரும் என்ற விபரம் (Two Competitive Quotations) விண்ணப்பம் கிடைத்து 45 நாட்களுக்குள் பதில் கடிதம் இந்நிறுவனம் அனுப்பி வைக்கும். விண்ணப்பம் அங்கீகரிக்கப் பட்டால் அடுத்து 30 நாட்களுக்குள் பண உதவி வழங்கப்படும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தின் வேண்டுகோள்

உலகில் அநேகமானமொழிகள் எழுத்துருவம் பெறாதகாலம்தொட்டு இன்றுவரை எமது விலைமதிப்பற்ற பொக்கிசங்களாக விளங்கிக்கொண்டிருக்கும் கலைகலாச்சாரங்கள் அனைத்தையும் ஆத்மீக சிந்தனைகளையும் இறைவழிபாட்டுமுறைகளையும் கட்டிக்காக்கும் காவலரணும், எமக்குள்ளிருக்கும் வேற்றுமையனைத்தையும் அடியோடு அறுத்தெறிந்து ஒற்றுமையென்னும் ஒரு அசைக்கமுடியாத கோட்டையைக் கட்டியெழுப்பிக்கொண்டிருக்கும் இரும்புக்கரங்கமும், அன்றும் இன்றும் என்றும் சர்வதேசரீதியில் எம்க்குகென்றிருக்கும் ஒரே ஒரு அடையாளச்சின்னமும்தான் எமது அற்புதமானதும் புனிதமானதுமான இந்து மதம்.

1) தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற எமது திருநாட்களுக்கு மிகமுக்கியத்துவம் கொடுத்து கொண்டாடுங்கள். அதன் மூலமே எமக்குள் ஒரு வலுவான ஒற்றுமையையும் உறவையும் கட்டியெழுப்பலாம் என்பதை நம்புங்கள்.

2) உயிரிலும் மேலான இந்து தர்மத்தைப்போதிப்பதற்காக அமைக்கப்பட்ட புனிதஸ்தலங்களே நமது ஆலயங்களாகும். மக்கள் தரிசனம் செய்யும் நேரங்களிலும் மற்ற நேரங்களிலும் சரி ஆலயத்தினுள் தேவையற்ற சம்பாஷனைகளாலும் தற்பெருமைப்பேச்சுக்களாலும் ஆலயத்தின் புனிதத்தன்மையை கெடுத்துவிடாதீர்கள்.

3) அற்ப வியாபார நோக்கங்களுக்காக எமது வணக்கத்துக்குரிய தெய்வங்களின் திருவுருவப்படங்களைக் கொண்ட விளம்பரப்பலகைகளை சிலசாத்திரிமார்கள் ரொறன்ரோ மாநகர வீதியோரங்களில் உழைப்புக்காக வைத்திருக்கிறார்கள். இதுபோன்ற அநாகரிகமான செயல்களை தடுத்து நிறுத்துங்கள்.

4) திருக்குறள், பகவத்கீதை போன்ற எமது புனிதநூல்களின் மகத்துவத்தையும் பெருமைகளையும் இளம்தலைமுறையினருக்கு எடுத்துக்கூறுவதில் கிழமையில் சிறிது நேரத்தை செலவிடுங்கள். அதனால் ஒரு ஆரோக்கியமானதும் கட்டுக்கோப்பானதுமான தலைமுறையினரை உருவாக்க வழிவகுக்குமென நம்புங்கள்.

5) மேலைத்தேசங்களில் எமது மக்கள் நாளொன்றுக்கு இருபதுக்கு மேற்பட்ட சிசுக்கொலைகளை (Abortion) இன்றும் செய்துகொண்டே இருக்கிறார்கள். சிசுக்கொலைகளும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களும் அழிந்து மெலிந்து போயிருக்கும் எம்மினத்தை மேலும் நலிவடையச் செய்துவிடும்மென்பதை எடுத்துச்சொல்லுங்கள்.

6) நீங்கள் போகும் ஆலயங்களில் நடக்கும் சீர்கேடுகளையும் அநாகரிகச் செயல்களையும் ஆலயநிர்வாகிகளுடன் கதைத்து உடனுக்குடன் தவிர்க்க நடவடிக்கை யெடுங்கள். வெறும் பஜனையுடன் நின்றுவிடாமல் இந்துதர்மத்தின் பெருமைகள் பற்றிய சொற்பொழிவுகளையும் நடத்த வேண்டுமென வலியுறுத்துங்கள்.

7) ஆலயங்களுக்குச் செல்லும்போது போகவிரும்பியும் போக வாகன வசதியற்றவர்கள் யாரும் இருப்பின் அவர்களையும் உங்களுடன் கூட்டிச்செல்லுங்கள். அதனால் உங்களுக்கு நஷ்டங்களோ தீமைகளோ கிடையாது. ஆனால் நிச்சயம் பன்மடங்கு ஆசீர்வாதங்களும் நன்மைகளும் உங்களைத் தேடி வலியவரும் என்பதை நம்புங்கள்.

8) உலகின் பலபாகங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துக்கள் அனைவரும் ஒன்றுசேரும் நேரமும் தேவைகளும் இன்று எமக்கு உருவாகி இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள். எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி என்னமொழி பேசுபவர்களாக இருந்தாலும் சரி என்ன நிறத்தவர்களாக இருந்தாலும் சரி நாம் வணங்கும் ஈசனையே பிரார்த்திப்பவர்களும் அவர்களும் எமது உடன்பிறப்புக்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

9) எங்கும் எக்கணமும் நாம் இந்துக்கள் என்று பெருமையாக சொல்லும் அளவுக்கு கௌரவமாக வாழ்ந்துகொள்ளுங்கள். ஏனென்றால் உலகில் முதல் தோன்றியவர்கள் இந்துமதத்தவர் என்ற பெருமை மட்டுமல்லாது சீக்கிஷம், பௌத்தம், யேனிஷம் போன்ற மூன்று மாபெரும் மதங்களை இவ்வுலவுக்கு உருவாக்கிவிட்டிருக்கின்ற பெருமையும் எமது இந்து மதத்துக்கே உரியது என்பதை மறந்து விடாதீர்கள்.

10) அறிவு, அன்பு இவை இரண்டுமே எமது பலம்பொருந்திய கவசங்களாக இருக்கும்போது எம்மை உலகில் எந்த தீயசக்திகளாலும் அழிக்கமுடியாது என்பதை திடமாக நம்புங்கள். நாம் வாழ வேண்டியவர்கள், வளர வேண்டியவர்கள், எம்மை நாமே ஆள வேண்டியவர்கள் என்பதை எந்நேரமும் தாரக மந்திரமாகக் கொள்ளுங்கள்.

**ஒன்று சேர்! ஒற்றுமைப்படு! வேற்றுமையை வேருடன் அறு.**

நன்றி
வேலவன்

தொடர்புகொள்ள: ***shavayra@yahoo.com / WWW.MAHAHINDU.ORG 1989***
***Tel: 416 992 7882 / 416 551 4952***

*W.M.H.O*
*4 Vange Cre. , Etobicoke. ON M9V 3N7*

# நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி.......

## உங்கள் பணமும் நிதிச்சந்தையும்

இது தத்துவக் கட்டுரை அல்ல. என் நெஞ்சைத் தொட்ட செய்தியை அடிப்படையாகக் கொண்ட கட்டுரை. செய்தி இதோ. அஹமதாபாத்தில் IIMஇல் MBA பட்டம் பெற்ற இளைஞர் பன்னாட்டு நிறுவனங்கள் பலவற்றிடமிருந்து கிடைத்த வேலை வாய்ப்பை மறுத்து விட்டு, பலருக்கும் வேலைவாய்ப்பு மறுத்து விட்டு, பலருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உணவகத்துறையில் இறங்கினார். இன்று இவரிடம் கோடிகள் சேர்ந்து விட்டன. ஆனால் வாழ்வதோ இன்னும் தான் பிறந்து வளர்ந்த குடிசையிலும், குடிசைப் பகுதியிலும் தான். குடிசையில் வாழும் கோடீஸ்வரர்! இது சினிமாக் கதை அல்ல. உண்மை.

இவரின் கதை: இவரின் அம்மா சென்னைத் தெருக்களில் இட்லி விற்றவர். சத்துணவுத்திட்டத்தின் கீழ் கிடைத்த வேலையில் ஆயாவாகப் பணியாற்றிக் கொண்டே சென்னைத் தெருக்களில் இட்லி விற்றவர். குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பது அம்மாவின் ஆசை. அதற்கு அவரிடம் போதுமான பணம் இல்லை. நல்ல பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்த்தார். பணத்துக்காக அவர் பட்ட பாட்டில் ஒன்று தான் இட்லி வியாபாரம். வாழ்ந்ததோ குடிசையில். இவர் பத்தாவது படிக்கும்வரை இவர் இல்லத்தில் (குடிசையில்) மின்சார விளக்கு இல்லையாம்.



இந்தச் சூழ்நிலையில் பள்ளிப்படிப்புக்குப் பின் நடைபெற்ற கடுமையான போட்டித் தேர்வில் வெற்றி பெற்று பிலானியில் இருக்கும் Pits என்று சொல்லப்படும் இஞ்சினியரிங் கல்லூரியில் சேர்ந்தார். Scholarship லேயே தன் இஞ்சினியரிங் பட்டத்தைப் பெற்ற இவர் சென்னையில் இரு ஆண்டுகள் புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றினார். பிறகு வணிக நிர்வாகத்துறையில் (MBA) இந்தியாவின் உலகத்தரத்தில் உயர்நிலை வகிக்கும் IIM (Indian Institute of Management) அஹமதாபாத்தில் சேர்ந்து பட்டம் பெற்றார்.

அங்கு பட்டம் பெறும் மாணவர்களுக்கு உலகநாடுகள் முழுவதிலிருந்தும் வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. வேண்டியதை மாணவர்கள் தேர்ந்தெடுக் கின்றனர். இவருக்கும் அத்தகைய சிறப்பான வாய்ப்புக்கள் கிடைத்தன. எல்லாவற்றையும் உதறினார். அம்மா சென்னைத் தெருக்களில் இட்லி விற்ற நாட்களை இவர் மறக்கவே இல்லை.

பசி என்றால் என்ன என்று அவருக்கு குழந்தையாக இருக்கும் போதே நன்கு தெரியும். பசியைப் போக்க மக்களுக்கு வேலை கிடைப்பதில் இருந்த சிரமங்களும் நன்றாகவே தெரியும். எனவே இந்த இரண்டு நோக்கங்களையும் வேலைவாய்ப்பு மற்றும் பிறர் பசி போக்குதல் ஒரே முகமாக அடையும் நோக்கில் உணவகத் துறையில் (சிறு) தொழில் அதிபராக ஆசைப்பட்டார். 2006 ஆகஸ்ட்டில் அவரது கனவு நனவானது. சொந்தத்தில் பெரிய ஆசைகள் இல்லை. ஆனால் அம்மாவின் ஆசை வீடும், காரும் வாங்குவது. கார் வாங்கி விட்டார். வீடு வாங்குவதைத் தள்ளிப் போட்டு செய்யும் தொழிலில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். இனித்தான் புதிய வீடு வாங்க உள்ளார்.

இவருடைய உணவகத்தின் பெயர் உணவு அரசன் (Food King). இன்றைக்கு இவரிடம் ஆறு உணவகங்களும் (இரண்டு ஆண்டுகளுக்குள் வளர்ந்தது) 200 பணியாளர்களும் உள்ளனர். நிறுவனத்தின் மாத விற்பனை ரூபாய் 32இலட்சம். ஆனால் வளர்ச்சி ஒன்றும் மலர் படுக்கையாக இல்லை. முதலாண்டு முடிவில் இவர் பெரும் நட்டத்தை அடைந்தார்.

படிப்பு இருந்தாலும் அனுபவம் இன்மையை ஒரு காரணமாகக் கருதுகிறார். பன்னாட்டு நிறுவனங்களின் வேலை இன்னும் கிடைக்கும் என்றாலும், இவர் மனம் மாறவில்லை. தன்னுடன் MBA படித்த சகமாணவர்களின் ஒத்துழைப்புடன் நட்டங்களைச் சமாளித்து வெற்றிப் பாதையில் இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்தார். இன்றைக்கு இந்தியாவில் பலர் உயர்கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடையே பேச இவரை அழைக்கின்றன. தன்வெற்றியின் இரகசியத்தை அவர்களுடன் எல்லாம் பகிர்ந்து கொள்கிறார். அவரின் அனுபவம் தந்த படிப்பினைகளாக அவர் கற்றுக் கொண்டவற்றிலிருந்து சில இதோ:

• ஒரு கொள்கையை (Theory) நீங்கள் மற்றவர்களுக்குச் சொன்னால் நம்பமாட்டார்கள். ஆனால் அதை நீங்களே கடைபிடித்து வெற்றி கொள்ளும் போது நம்பாமல் எவரும் இருக்கமாட்டார்கள்.

• தடைகள் வந்து கொண்டேதான் இருக்கும். தயங்காது செய்த தவறுகளின் அடிப்படையில் படிப்பினை பெற்று தொடர்ந்து முன்னேறிக் கொண்டிரு. பின் வாங்காதே!

• என் நெஞ்சைத் தொட்ட இந்தக்கதை உங்கள் நெஞ்சையும் தொட்டிருக்கும். உலக அளவில் உணவு அரசனாக வேண்டும் என்பது இவரின் இப்போதைய கனவு. நல்ல கனவு. நனவாக நாமும் வாழ்த்துவோம்.

இந்தியாவை விட்டு கனடாவுக்கு இப்போது வருவோம். கனடா உலகில் உள்ள நாடுகளில் மிகவும் உன்னதமான நாடுகளில் ஒன்று. மேலை உலகத்தில் முதலாவது தமிழ் பெண்மணியை நாடாளுமன்றத்துக்கு வரவேற்ற நாடு.



பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளை உங்கள் கண்களாகக் கருதுங்கள். அந்தக் கண்களுக்குக் கல்விக் கண்ணைத் திறக்கும் பணியில் மட்டும் குறைவைத்து விடாதீர்கள். பத்துடொலர் மணிச் சம்பளம் பெறும் பெற்றோரும் தம் குழந்தையை உயர்நிலை யில் பார்க்க முடியும். உங்கள் குழந்தைகளின் படிப்புக்காகத் திட்டமிடுங் கள். சேமியுங்கள்! அரசாங்கம் உங்கள் குழந்தைகளின் படிப்புக்காக நீங்கள் சேமித்தால் இலவசமாகவும் பணம் தரத் தயாராக உள்ளது. பெற்றுக்கொள்ளுங்கள்.

இந்த இலவசப்பணம் உங்கள் வருமானம் எதுவாயினும் கூடவோ, குறையவோ எல்லோருக்கும் கிடைக்கும். உங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை என்றால் இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளுங்கள். தொலைபேசி எண்: 416.473.6100 இணையதள முகவரிகள்:
www.dreamsandmoney.com
www.perrii.com



**பெரி. முத்துராமன்**

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மனப்புற்று நோய்

## ஓடும் நீர் உறைவதில்லை 124

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதும் தனித்துவாழ்வது என்பது நவீன யுகத்தில் இயலாது என்பதும் நாம் ஏற்கனவே அறிந்துள்ள விடயம்தான். தனித்து வாழுதல் என்பது மற்றவர்களில் இருந்து முற்று முழுதாக விலகி வாழுதல் எனப்பொருள் கொள்ளப்படுவதும் உண்டு. அதாவது கூட்டுவாழ்க்கையல்லாத வாழ்க்கை எனவும் கூறப்படுவதும் உண்டு. ஆனால் சமூகப்பிராணி எனும்போது ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் இணைந்து செயற்படுவதையும் மற்றவர்களில் தங்கி வாழ வேண்டியிருப்பதும் அடிப்படையாகின்றது. இங்கு தங்கி வாழ்தல் என்பது பொருளாதார ரீதியாகத் தங்கியிருத்தல் என்ற பொருள்படக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பலரது ஒத்துழைப்பு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவசியமாகின்றது.

மனிதனுக்குக் கூட்டுவாழ்க்கையும், கூட்டுழைப்பும் அவசியமாக இருப்பது போல் விலங்குகளுக்கு இருப்பதில்லை. கூட்டு வாழ்க்கை விலங்கினங் களுக்குப் பொதுப்படையாக இருப்பினும் கூட்டுழைப்பு அவைகளுக்கு அவசியமாக இருப்பதில்லை. மனிதன் ஒருவன் தனது உணவுக்கு விவசாயிலிருந்து விற்பனையாளர் வரையான உதவிகள் தேவைப்படுவதுபோல் விலங்கு ஒன்றுக்குத் தேவைப்படுவதில்லை. இதனால் விலங்குகள் தனிமையும், தன்னிறைவும் கொண்டவையாக வாழ இயற்கை அதன் முழுப்பங்கையும் வழங்குகின்றது. இதே இயற்கை நமக்கும் தனது முழு ஒத்துழைப்பைத் தருகின்ற போதிலும் நாம் நிறைவாக வாழ முடிவதில்லை. இதற்குப் பலகாரணங்கள் அடிப்படையாக இருப்பினும் ஒரு சில முக்கியமானவற்றை இங்கு நாம் பகிர்ந்து கொள்வோம்.

KG Master-kgmaster@rogers.com

இயற்கையின் பிரதானமான பங்களிப்புகள், அவற்றின் விளைவுகள் என்பன பற்றி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நாம் கற்பனையில் கூட எதிர்பாராத அளவுக்கு விளக்கங்களைத் தருகின்றன. மிக இலகுவாக நம்மால் உணரப்பட்ட பல விடயங்கள் இப்போது பலதரப்பட்ட ஆராய்ச்சிகளுக்குட்படுவதால் பல்வேறுபட்ட விளக்கங்களைத் தருவதும் அதன் மூலம் எந்தக்கருத்து சரியானது என்பதைத் தீர்மானிப்பதில் பல தடுமாற்றங்களும் ஏற்படு கின்றன. ஒரு குறிப்பிட்ட உணவு சம்பந்தமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட நோய் சம்பந்தமாகவோ ஆய்வுகளின் ஆழம் அதிகமாக இருப்பதால் நாம் பலவழிகளில் தடுமாற்றங்களுக்கு உள்ளாகி விடுகிறோம். இவ்வாறான எதிர்பாராத அறிவியல் ஆராய்ச்சி வளர்ச்சிகள் தகவல் சார்ந்த மூலங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக அமைந்திருப்பதும் தகவல்களை இலகுவாகப் பெறக்கூடியதாக இருப்பதும் இவ்வாறான தடுமாற்றங்களுக்கு விடைகாண முடியாமல் நீண்டு கொண்டே செல்கின்றன.


அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி அறிவியல் துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதும் அந்த மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய அழுத்தம் நம்மீது திணிக்கப்படுவதும் அறிவியல் சார்ந்த அவசியமானதே. நாம் வாழும் சூழல்மாற்றத்துக்கு உள்ளாகும் போதும் அந்த மாற்றங்கள் எங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பால் இடம்பெறும் போதும் நாமும் அந்தமாற்றத்திற்கு துணைபோக வேண்டியதாகின்றது. அல்லது மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகின்றது. இந்த மாற்றத்தை விரும்பியே அல்லது விரும்பாமலோ நாம் ஏற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் நாம் ஒதுக்கப்படுவதும் ஓரங்கட்டப்படுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வே.

மாற்றத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு ஒரு மனிதனது பலவீனத்தை இரண்டு வகைப்படுத்தலாம். முதலாவது நமது கட்டுபாடுக்கப்பாற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்றவாறு நம்மை மாற்ற மறுக்கும் பலவீனம் உதாரணமாக நாம் வாழும் சூழல், காலநிலை என்பவற்றுக்கேற்ப நமது உணவுமுறை, உடை என்பவற்றை மாற்றி யமைத்து நோய்களில் இருந்து தப்பித்துக் கொள்ளத்தவறுவதைக் குறிப்பிடலாம். உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் உண்மையில் பொருத்தம் இல்லை என்பதை நன்கு உணர்ந்தும் மாற்றுவதை மறுப்பது. இரண்டாவது பலவீனம் நமது கட்டுப்பாட்டுக்குட்பட்ட நம்மால் மாற்றக் கூடியவற்றை மாற்றாமல் இருப்பது அல்லது மாற்றமறுப்பதான பலவீனம். இந்த இரண்டு வகையான பலவீனத்திற்கும் காரணம் உண்மை யில் அறியாமை அல்ல. அசட்டுத்தனம் தான்.

இப்போது நமது கட்டுபாட்டுகுட்பட்ட நம்மால் மாற்றப்படக்கூடியவைகளைக் கவனிப்போம். நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது முக்கியமாக மூன்று காரணிகளில் தங்கியுள்ளது. இதில் மிக முக்கியமானது நமது பேசும் வார்த்தைகள். இதனால்தான் நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் வாழ்கிறோம் என்பது எமது நாளாந்த வாழ்வில் நாம் வழமையாக பயன்படுத்தும் வார்த்தைகளால் தீர்மானிக்கப்படுகின்றது. நமது வார்த்தைகள் நமது சிந்தனைகளை நெறிப்படுத்துகின்றன. அவ்வாறு நெறிப்படுத்தும் போது அந்தச் சிந்தனை சார்ந்த செயற்பாடுகள் நமது வாழ்வில் சாதக மான அல்லது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே சொல், சிந்தனை, செயல் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டு நமது வாழ்வியல் நிலை நிர்ணயிக்கப்படுகின்றது. இங்கு ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிப்பது அவசியமாகும். நமது தற்போதைய வாழ்நிலைக்கு அது சாதகமாயினும் சரி, பாதகமாயினும் சரி நம்மால் மேற் கொள்ளப்படும் இந்த மூன்று நடவடிக்கைகளே முழுக்காரணம் என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். அதாவது பிறர் அல்லது புறக்காரணிகள் நமது இன்ப துன்பங்களுக்கு அடிப்படையாக அமையாமல் நமது சொல், சிந்தனை, செயல் என்பனவே காரணிகளாகின்றன.

நமது கட்டுபாட்டுக்குள் இருப்பவற்றில் நமது மனோபாவங்களையும் உள்ளடக்க வேண்டும். நாம் நமது மனோபாவத்தை நமக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கக் கூடிய வல்லமையைப் பெற்றுக்கொள்வோம். இங்கு மிக முக்கியமான விடயம் என்னவெனில் நமது மனோபாவம் ஒன்று நம்மையும், மற்றவர்களையும் துன்புறுத்துவதாக இருக்குமாயின் மிக இலகுவாக அந்த மனோபாவத்தை சொல், சிந்தனை, செயல் என்பவற்றின் மூலம் மாற்றியமைக்கலாம். இந்த வல்லமை நம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் மிகக்குறுகிய எண்ணிக்கை உடையவர்களே பயன்படுத்துகிறார்கள். இதனால்தான் நாம் அறிந்த சிலர் நாமே அதிசயிக்கத்தக்க வகையில் மாற்றம் அடைகிறார்கள். முன்னொரு காலத்தில் அதிக கோபம் கொண்டவராக இருந்த ஒருவர் இப்போது மிகவும் சாதுவானவராக இருப்பது போல் பலர் தங்களது மனோபாவ மாற்றங்கள் மூலம் இந்த வலிமையை நிரூபித்துள்ளார்கள்.

நாம் ஒவ்வொருவரும் நமது மனோபாவங்களை மாற்றியமைப்பதன் மூலம் சிறப்புமிக்க ஒரு வாழ்க்கையை வாழலாம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இருப்பினும் அதிபெரும்பான்மை யானவர்கள் இந்த நிலையை அடையமுடிவ தில்லை. இவ்வாறு தமக்குள்ள வலிமையை பயன்படுத்தித் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த முடியாமைக்குப் பல காரணிகள் இருப்பினும் ஒருவரது நேர்த்தியற்ற எதிர்மறையான மனோபாவம் அதிமுக்கியமான பங்கை வகிக்கின்றது. மனோபாவங்கள் மாற்றப்படக் கூடியவையாக இருப்பினும் அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சிறிய முனைப்பைக்கூட முன்னெடுப்பதற்குச் சில எதிர்மறையான குண இயல்புகள் சந்தர்ப்பம் வழங்குவதில்லை. இதனால் தான் எதிர்மறையான குண இயல்புகளால் பாதிக்கப்பட்டவர்கள் எப்போதும் இருட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவ்வாறு இருட்டுக்குள் வாழ்பவர்களால் எதையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியாமல் போய் விடுகின்றது. அதாவது ஒரு இருட்டறைக்குள் இருக்கின்ற அத்தனை பொருட்களும் உருவத்தால் வேறுபடுகின்றனவேயன்றி அவற்றின் உண்மையான நிறம், இயல்பு இருட்டினால் மறைக்கப்பட்டுவிடுகின்றது. இதனால் அப்பொருட்களின் உண்மையான அழகு மறைக்கப்பட்டு விடுகிறது.

இருட்டு எவ்வாறு ஒன்றின் அழகை மறைத்துவிடுகிறதோ அதேபோன்று மன இருட்டும் நம்மிடம் உள்ள அழகிய, சிறந்த உயர்வான குணங்களையும் மறைத்து விடுகின்றது. நமது உள்ளத்தின் ஒளியைப் படிப்படியாக மங்கவைப்பதிலும் இருட்டின் தாக்கத்தைக் கடுமையாக்குவதிலும் காமம், கோபம், பொறாமை, சுயஒழுக்கம் இன்மை, களவு, பொய் எனப்பல காரணிகள் செல்வாக்கைச் செலுத்துகின்றன. இவ்வாறான நேர்த்தியற்ற குண இயல்புகள் நம் எல்லோரிடமும் இருப்பினும் நமது மாற்றியமைக்கும் வல்லமையால் மீண்டும் ஒளியைப் பெருக்க வாய்ப்பு உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் ஒரே ஒருகுண இயல்பானது அதாவது நேர்த்தியற்ற குணஇயல்பானது அதனால் பீடிக்கப்பட்டிருப்பவரை பீடித்திருப்பதாக அறியாதவண்ணம் பீடித்திருக்கும். அந்தக் குணஇயல்புதான் மனப்புற்றுநோய்.

மனப்புற்றுநோய் என்றவுடன் இப்படியும் ஒரு நோயா என நீங்கள் ஆச்சரியப்படுவது எனக்குப் புரிகிறது. இங்கு புற்றுநோய் எனக்குறிப்பிடுவதற்கான காரணம் இந்த நோயின் ஆரம்பகால வளர்ச்சியானது இனங்காப்படுவ தில்லை. அதுமட்டுமன்றி புற்றுநோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்படும் போது அது ஏற்கனவே உயிர் ஆபத்துக்கான எல்லையை நிர்ணயித்து விடுவதுடன் உயில் எழுதுவதற்கான குறுகிய வாழ்நாளை மட்டும் கொடுக்கின்றது. அதாவது புற்றுநோய் கண்டறியப்பட்டதும் வாழ்காலம் வரையறுக்கப் பட்டு விடுகிறது. இது உடல் புற்றுநோய்க்கான விளக்கமாக இருப்பது போல் மனப்புற்று நோய்க்கும் இதுவே விதியாகின்றது.

இப்போது இந்த மனப்புற்றுநோய் எது என்பதையும் பார்ப்போம். மற்றவர்களது நலனை முற்றாகப் புறக்கணிக்கும் சுயநலனும், மனத்தின் அழுக்காறு எனப்படும் பொறாமையும் ஒன்று சேர்வதன் மூலம் உருவாகின்ற ஒரு கொடிய குணஇயல்பான 'நம்பிக்கைத் துரோகம்' தான் அந்த மனப்புற்றுநோய். இங்கே மிகவும் முக்கியமான விளக்கத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதாவது சுயநலனும் பொ-

தொடர்ச்சி 33ஆம் பக்கம்


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்



On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# குருவாசகம்

பக்குவத்தில் நிற்கும் பசுவுக் கருள்செய்யப்
பக்கம் வருமாம் பதி.

பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு அருள்செய்தற்பொருட்டுச் சிவபெருமான் அவர்கள் பக்கம் தோன்றியருளுவார்.
(பசு - ஆன்மா, பதி - இறைவன்.)

தெரியாமல் உள்நின் றருளும் சிவனே
உருவாகிச் செய்யும் உறவு.

ஆன்மாக்களுக்குத் தெரியாமல் அவர்களுடன் உறைந்து அவர்களுக்கு என்றும் அருள்பாலித்துவரும் சிவபெருமானே அவர்கள் காணும் வகையில் உருவந் தாங்கி அவர்களுடன் உறவாடுவார்.

தந்தைதாய் சான்றோர் தகைசால் குருவாக
வந்தமையும் ஏற்ற வடிவு.

இறைவன் ஆன்மாக்களை ஆட்கொள்ள அவர்கள் காணும்படியாகத் தந்தையாகவோ தாயாகவோ பிற பெரியாராகவோ ஆசிரியராகவோ வடிவந் தாங்கி வருவார்.

குருவின்றிக் கூர்ஞானம் கூடாது வீடும்
மருவாதிவ் வூனுறவும் மண்.

அவ்விதம் எம்மை நாடிவருகின்ற இறைவனை இனங்கண்டு அவரைக் குருவாகக் கொண்டு ஞானத்தைப் பெறுதல் வேண்டும். ஏனெனில் குருவின்றி ஞானம் வெளிப்படமாட்டாது. ஞானம் இன்றி மேலான வீடுபேறும் வந்து பொருந்தாது. அந்நிலையில் ஆன்மா உடம்பெடுத்த பிறப்பும் மண்ணாகிவிடும்.

(ஊனுறவு - ஆன்மா பெற்ற உடலுறவு. மண் - வீண், பயனின்மை.)

சீர்பரிகள் வாங்கவெனத் தென்னவனின் மந்திரியார்
பேர்துறைக்கு வந்தார் பெயர்ந்து.

சிறந்த குதிரைகளைத் தெரிந்து வாங்குவதற்கென்று பாண்டிய மன்னனுக்கு அமைச்சராக இருந்த வாதவூரர் மதுரைமா நகரை விட்டுநீங்கித் திருப்பெருந்துறைக்கு (பரிவாரங்களுடன்) வந்து சேர்ந்தார்.

குருந்தமர நிழல் குருவாகக் கூடி
இருந்தவரைக் கண்டார் இவர்.

திருப்பெருந்துறைக்குக் குதிரைகள் வாங்க வந்த மணிவாசகப் பெருமான் அங்கு குருந்த மரத்து நிழலில் அடியார்களுடன்கூடிக் குருவாக எழுந்தருளிய இறைவனைக் கண்டார்.

குருவென் றுணர்ந்திறைவர் கொங்குதாள் வீழ்ந்தார்
அரிதின் முயன்றதவத் தால்.

முற்பிறப்பிலே செய்த அரிய தவத்தின் பயனாக இறைவனே குருவாக வந்திருக்கின்றார் என்பதை உணர்ந்துகொண்டு, அவரது தேன்மலர்தாள்களில் வீழ்ந்து மாணிக்கவாசகர் வணங்கினார். (கொங்கு - பூந்தாது, தேன்.)

வீழ்ந்தவருக் கீந்தருளை மெய்ஞ்ஞான மந்திரத்தால்
ஏந்திநின்றார் எங்கள் இறை.

அங்ஙனம் வீழ்ந்து வணங்கிய அடியவருக்கு எங்கள் இறைவனாகிய சிவபெருமான் அருள்பாலித்து, உண்மையான ஞானத்தை ஊட்டவல்ல சிவாயநம என்னும் மந்திரத்தைப் புகட்டி அன்றுமுதலாக அவரைத் தாங்கி நின்றார்.

குருவா சகத்தால் குணமெல்லாம் மாறித்
திருவருளில் நின்றார் தெளிந்து.




குருவாக வந்தருளிய இறைவனது சிவாயநம என்னும் மந்திர உபதேசத்தால் தெளிந்த ஞானவிளக்கம் பெற்று மாணிக்கவாசகப் பெருமான் தமது இயல்புகள் யாவும் மாற்றம் பெற்றவராய் திருவருளிலே திளைத்து நின்றார்.

குருவின் அருளால்
கொழித்ததே இன்பத்
திருவா சகமாம் திரு.

குருவாக எழுந்தருளிய இறைவன் அளித்த தெளிந்த ஞானத்தால் மாணிக்கவாசகப் பெருமான் பொழிந்ததே படிக்கப் படிக்க இன்பந்தரும் திருவாசகம் என்னும் செல்வமாகும்.
(திருவாசகம் - தூய வாசகம். திரு - செல்வம்.)

கவிஞர் வி. கந்தவனம்



SEARCHING FOR FAMILY PHYSICIAN

To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.

EMR Ready
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

குடும்ப வைத்தியர் தேவை

புதிதான Medical கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.




Contact: Dr. Vukiet Tran
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

# நினைவாற்றல் - MEMORY - 12

அன்பான வாசகர்களே!

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை நேரம், வெள்ளை நிற முதியவரான பெண் ஒருவர் கைத்தடியுடன் யாருக்காகவோ தான் வசிக்கும் தொடர்மாடிக் கட்டிடத்தின் வாசலில் காத்திருந்தார். மிகவும் மெலிந்த உடல் கொண்டவர். எப்படியும் அவருக்கு 75 வயதிற்கு மேல் இருக்கும். வயதினை உய்த்தறியும் திறமை எனக்கு இருப்பதாக நான் எண்ணவில்லை. அதனால் அவருக்கு 80 வயதிற்கு மேலாகவும் இருக்கலாம். அவர் யாருடனோ சேர்ந்து பிரார்த்தனைக்குச் செல்வதற்குத் தயாராக நின்றிருந்தார் என்பது எனது ஊகம். அவர் முதியவராக இருந்தாலும் அவ்விடம் கடந்து செல்பவர்களுக்கெல்லாம் இன்முகம் காட்டி புன்னகைத்தவாறு நின்றார். வாசகர்களே! நினைவாற்றல் கட்டுரையில் சிறுகதை எழுதுகின்றேன் என்று குழப்பம் அடையாதீர்கள். நான் கண்ட சில சம்பவங்களுடன் எனது கட்டுரையை ஆரம்பிக்கின்றேன். எனது தலைப்பை மறந்து எழுதவில்லை. பொறுமையுடன் வாசியுங்கள். அந்த அம்மாவைப் பார்த்து புன்னகை செய்தவாறு நானும் கடந்து சென்றேன். சில நிமிடங்கள் நான் வெளியில் ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருக்கையில் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அந்த அம்மா கீழே விழுந்து விட்டார். அவரைப் பிரார்த்தனைக்குக் கூட்டிச்செல்ல ஒரு தம்பதியினர் வந்திருக்கின்றார்கள். அவர்களைக் கண்டதும் தடி ஊன்றி நடந்தவாறு அந்த அம்மா வெளியில் வந்திருக்கின்றார். அப்பொழுதுதான் கீழே விழுந்திருக்க வேண்டும். தெய்வாதீனமாக அவர் தலை அடிபடவில்லை. வேறு பாதிப்புக்கள் ஏதும் ஏற்பட்டதா எனத் தெரியவில்லை. இந்த சம்பவத்தைப் போல பல முதியவர்கள் கீழே விழுந்து விடுகின்றார்கள். அதன்பின்பு அவர்கள் பல சிரமங்களைச்



சந்திக்கின்றார்கள். குறிப்பாக விழும்பொழுது தற்செயலாக தலை அடிபட்டால் பாதிப்பு அதிகமாக இருக்கும். தலைக்காயங்கள் ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. இது பற்றி நான் முன்பும் குறிப்பிட்டிருக்கின்றேன். கடந்த சில நாட்களில் நான் கண்ட சம்பவங்களால் இந்த விடயத்தைப் பற்றி மேலும் ஒருமுறை அழுத்தமாகக் கூறவேண்டும் என நினைக்கின்றேன். எங்கள் நினைவாற்றலை எவ்வாறு வலுப்படுத்தலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். எவருக்கும் தலைக்காயங்கள் ஏற்படக்கூடாது, அத்துடன் எவரினதும் நினைவாற்றல் பாதிப்படையக்கூடாது என்ற அக்கறையினால் சில எச்சரிக்கைகளை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். கோடை காலம் பிறந்து விட்டது. குஞ்சு குருமன் எல்லாம் துவிச்சக்கர வண்டிகளுடன் வீதிகளில் ஓடித்திரிகின்றார்கள். யார் தலையிலும் தலைக்கவசம் (கெல்மெட் - Helmet) எதனையும் காணவில்லை. இவ்வாறு தலைக்கவசம் இன்றித் துவிச்சக்கர வண்டிகளை ஓடுவது பாதுகாப்பானதா என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறு தலைக்கவசம் இன்றிச் செல்லும் குழந்தைகளைக் காணும்போது என் தலைக்குள் ஏதோ செய்கின்றது. அதனால் என் கை இதனை எழுதுகின்றது. சும்மாவா ஓடுகின்றார்கள். குருவி போலல்லவா பறக்கின்றார்கள். தங்கள் பிள்ளைகள் பாதுகாப்பாகவும், தாம் தண்டப்பணம் செலுத்தும் நிலைக்கும் உட்படாது எவ்வாறு துவிச்சக்கர வண்டிகளை பிள்ளைகள் ஓட்டமுடியும் என்பதைப் பெற்றோர்கள் தங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இதுபற்றி அறிவதற்கு http://www.toronto.ca/cycling/safety/index.html என்ற இணையத் தளத்திற்குச் சென்று பாதுகாப்பு வழிமுறைகளையும், ஒன்ராரியோச் சட்டங்களையும் அறிந்து கொள்ளுங்கள். இந்த இணையத்தளத்தில் உள்ள தகவல் துவிச்சக்கர வண்டி ஓடும் பெரியவர்களுக்கும் உதவும்.



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

Be JOB Ready in 5 - 12 months

citi COLLEGE OF CANADIAN CAREERS

Get the skills you need to get the job

IT:
Network Engineering
Enterprise Network Eng.
Internetwork Specialist

Health Care:
Medical Office Assistant
Personal Support Worker

Business:
Business Administration
Computerized Accounting

CPA ACP
OACC PROUD MEMBER
Microsoft | IT Academy Program

You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours per week
Call us now for details 647-476-4148

Call Today:
(647) 476-4148
www.CitiCollegeINFO.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005



Second Career clients welcome
Financial assistance may be available for those who qualify

# நினைவாற்றல்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆகா! எப்படியோ நினைவாற்றலுக்கும் ஒன்றாரியோச் சட்டத்திற்கும் இடையில் ஒரு முடிச்சைப் போட்டுவிட்டேன். இனியாவது நிலைமை முன்னேற்றம் அடைகின்றதா என்று கவனிப்போம். மனிதர்களின் மிகப்பெரும் சொத்து மூளையேதான். வீடு, வங்கிக்கணக்கு எல்லாம் அதற்குப் பின்புதான். “நினைவாற்றல் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையேயில்லை” எனக் கூறப்படுகின்றது. மூளையைப் பாதுகாக்க முழுமையான முன்னுரிமையைக் கொடுங்கள் என்று கூறி என் கட்டுரையைக் கடந்த இதழில் விட்ட இடத்திற்கு என் சிந்தனையைச் செலுத்துகின்றேன்.

விட்ட குறை தொட்ட குறையாக நினைவாற்றல் விளையாட்டைப் பற்றிச் சிறிது கூறித் தொடரலாம் என நினைக்கின்றேன். பல நினைவாற்றல் விளையாட்டுக்களைப் பற்றியும், நினைவாற்றல் பயிற்சிகளைப் பற்றியும் பேசிக்கொண்டோம். இவை முற்று முழுதான பட்டியல் அல்ல. நாளுக்கு நாள் புதிய புதிய விளையாட்டுக்களும், பயிற்சிமுறைகளும் உருவாகின்றன. பல ஆய்வாளர்கள், மூளை விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள். நாம் நாளாந்தம் செய்யும் பணிகளுக்கேற்ப மாற்று வழிகளில் எமது மூளைக்கான பயிற்சிகள் அமைய வேண்டும். ஒரே விளையாட்டை அல்லது ஒரே பயிற்சியைத் திரும்பத் திரும்பச் செய்யாமல் வெவ்வேறு விளையாட்டுக்களையும், பயிற்சிகளையும் செய்வது இளகும் தன்மை கொண்ட மூளையை என்றும் இளமையாக



வைத்திருக்க ஏதோ ஒரு விதத்தில் உதவும். நம்பிக்கை இன்றி மருந்து உண்டால் சித்திக்காது என்பார்கள். இதிலும் நம்பிக்கையுடன் மூளைப்பயிற்சி பெறுங்கள். உங்கள் முயற்சிக்கான பலனை நீங்களே அறுவடை செய்வீர்கள் எனத் திடமாக நம்புவோம்.

மூளைக்குப் பயிற்சியைக் கொடுப்பதற்காக பல மென்பொருட்கள் (Softwares) உருவாக்கப்படுகின்றன. நூலாசிரியரும் ஆய்வாளருமாகிய கலாநிதி போல் பென்ட்கெம் அவர்களின் இணையத்தளத்தில் (www.brainsavers.com) பிரைன்சேவேர்ஸ் (Brainsavers) என்ற பெயருடன் மென்பொருள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் நினைவாற்றலை அதி-கரிக்கச் செய்வதற்காகப் பல வருடங்கள் செய்த விஞ்ஞான ஆய்வின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. புத்தகங்களை வாசித்தல், புதிய மொழியினைக் கற்றல், நினைவாற்றல் விளையாட்டுக்களை விளையாடுதல் போன்றவற்றால் நினைவாற்றல் கூடுவதுபோல் இந்த மென்பொருள் வழங்கும் பயிற்சிகளைக் குறுகிய நேரத்தில் செய்து வருவதன் மூலமும் நினைவாற்றலைக் கூட்டலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. இந்த மென்பொருளை குறுந்தட்டு வடிவில் பெற்று கணினியில் இலகுவாக பயிற்சியினைச் செய்ய முடியும். இதேபோல் கொக்னிபிற் (http://www.cognifit.com/) என்ற இணையத்தளத்தில் மைண்ட்பிற் என்ற பெயருடன் ஒரு மென்பொருள் அறிமுகம் செய்யப்படுகின்றது. இந்த மென்பொருளும் பல விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் உருவாக்கப்பட்டதோடு தொடர்ந்து பல மூளை விஞ்ஞான ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டும் வருகின்றது. இந்த மென்பொருள் மூலம் ஒவ்வொருவரும் தமக்குப் பொருத்தமான பயிற்சிகளை அறிந்து அதற்கேற்பப் பயிற்சிகளைச் செய்யத்தக்கதாக உள்ளது. மென்பொருள் மூலம் மூளைக்கான பயிற்சியைப் பெறுதலை கடுகதி ரயில் போல் இயங்கும் மனிதவாழ்வில் குறுகிய நேரத்தில் நினைவாற்றலை விருத்தி செய்வதற்குரிய ஒரு குறுக்கு வழியாக எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறான மென்பொருட்கள் மூளைக்குத்தான் பயிற்சிகளைக் கொடுக்கின்றன. ஆனால் உடற்பயிற்சியும் மூளையின் ஆரோக்கியத்திற்கு அவசியம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. 2007ம் ஆண்டு மார்ச் மாதம் அல்சீமர்ஸ் மற்றும் பாக்கின்சன் (Alzheimers/Parkinson) நோய்களுக்கான எட்டாவது உலக மாநாடு ஒஸ்ரியாவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில்தான் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களும் மூளைக்கான பயிற்சிகளை மென்பொருட்கள் மூலமும் கணினி விளையாட்டுக்கள் மூலமும் பெற்றுப் பயனடையமுடியும் என்பதை முதன்முதலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறியப்படுகின்றது. இதனை மருத்துவப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தினார்கள் என இக்கருத்துக்கு மேலும் வலுச்சேர்க்கப்பட்டது. நோய் காரணமாக நினைவாற்றல் குறைபாடு உள்ளவர்கள் உரிய மருத்துவ ஆலோசனையுடன் இவ்வாறான பயிற்சிகளில் ஈடுபடுவதே மிகவும் பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உயர்கல்வி, சவாலான தொழிலைச் செய்தல், விருப்பமான அல்லது புதிய தகவல்களைத் தரும் விரிவுரைகளைக் கேட்டல், சதுரங்கம் போன்ற நினைவாற்றல் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் போன்றவற்றால் கிடைக்கும் மூளைக்கான பயிற்சிகளுக்குச் சமமான பயிற்சிகளை குறுகிய நேரத்தில் வழங்குவதை நோக்காகக் கொண்டு இவ்வாறான மென்பொருட்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. நாளுக்கு நாள் புதிய புதிய மென்பொருட்கள் வெளி-வரலாம். சிறந்த ஆய்வுகளின் அடிப்படையில் உருவாகும் மென்பொருட்கள் அதிக பலனைத் தருவதாக இருக்கும் என்பது எனது கருத்து.

உடற்பயிற்சிகள் மூலமாக வயது முதிர்ந்து செல்லும்போதும் மூளையால் புதிய கலன்களை உருவாக்க முடியும். நியுரோன்களின் (Neurons) எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம். நியுரோன்களிற்கிடை-டயில் இணைப்புக்கள் அதிகமாக ஏற்படலாம். மடல்களின் (Temporal lobes, Frontal lobes) அளவும் பெரிதாகலாம். நடத்தல், நீச்சல், யோகா போன்ற உடற்பயிற்சிகள் மூலமாக இவ்வாறான வளர்ச்சிகளை வயதானவர்களும் பெற்றுக்கொள்ளலாம். போதிய உடற்பயிற்சி, மூளைக்கான பயிற்சிகள் என்பவற்றில் கவனம் செலுத்தி எமது மூளையை ஆரோக்கியமாகப் பேணுவதோடு, நினைவாற்றலையும் வலுவூட்டி வாழ்வோம். மேலும் பல தகவல்களுடன் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

தொடரும்.

TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks



★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்
Buy One Get One Free
Windows,Word,Excel,Power Point
Quick Books,Simply Accounting,Accpac
Week Ends
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.t-businesscollege.com t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
வருடாந்த கல்விசார்போட்டிகள் - 2011
(Educational Contest 2011 )

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்த கல்விசார் போட்டிகள்.

பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச்சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடை-பெற உள்ளன. அங்கத்தவர்களின் வாரிசுகளை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: St. Stephen’s Pressbyterian Church
3817 Lawrence Ave.East, Scarborough,Ontario, M1G 1R2

காலம்: ஜுலை 09, 2011 - சனிக்கிழமை - காலை 8:30 மணி
விண்ணப்ப முடிவுத் திகதி: ஜுலை 02, 2011

மேலதிக தொடர்புகளுக்கு : (416) 438-3440 / (416) 902-6600
(416) 431-1060 / (416) 721-9709


REAL TEAM
Thinking of selling? Think SOLD!
HOMELIFE Higher Standards
" Put our experience to work for you, and see the difference! "
Neilson/McLevin
$ 249,900
Detached,3 Bedrooms
close to all Amenities
Good Starter home
Newly Fin Basement
Call for more Details
McCowan/MajorMac
$ 620,000
5 Bedrooms Detached
4 Washroom,Hardwd floor
3 Years New,Appr 2800sf
Large Hfamily Home
Close To All Amenities
Markham/Ellesmere
$ 749,900
Custom Built 4 Bedrooms
Fully Upgraded
Detached Few Years Old
Prime Scarborough Lcation
Call More Details
Scarborough Town Ctr
Sale Or Lease
One Bedroom+ Dent
Scarborough Town Center
Brand New Condo
Available For Sale or Lease
Close To All Amenities
Hwy 10/Cresthaven
$371,900
Detached,4 Bedrooms
Finished Basement
Large Family home
Lovely Upgraded
Call for more Details
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Markham/14th Ave
$ 499,900
3 Bedrooms Detached
Finishe Basement
close to all Amenities
Newly Renovated House
Callfor More Details
Old Finch/ Morningside
$409,900
Semi Detached House
3 Washrooms
Walk- out Bsmt
Well Kept Home.
close to all Amenities.
Investment Property
$389,900
Great Investment Property
Restaurant With Three
Apartments. Good Return.
Anchored With Good
Tenants
Kennedy/Hwy7
$ 1.98 Million
Custom Built Home
5 Bedrooms Detached
& Huge House.
Upgraded Home
close to all Amenities
Bramalea/Bovaird
$ 329,900
3 Bedroom Semi
3 Washroom
Close to all Amenities
Finished Basement
Call for More Details
Ravi Raveendran
Real Estate Broker
416.817.8479
Markham/Passmore
$ 549,900
3 Bedrooms Detached
Over 2000sq feet
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Finch/Middlefield
$ 189,900
2 Bedroom Condo
well kept Unit
Laminate Floor
close to all Amenities.
Markham/Buroak
$619,900
4 Bedroom Detached
5 Washroom
Finished Bsmt
Over 2500 Sf
close to all Amenities.
Bovaird/Sandlewood
$379,900
Detached,4 Bedrooms
Few years Old
Close to all Amenities
Call for more Details
Yonge/Sheppard
$ 429,900
New Luxury Condo
Walk To Subway
close to all Amenities
call for More Det...
Kethees Seevaratnam
Sales Representative
416.275.5788
Weston/Majormac
$ 629,900
4 Bedrooms Detached
Finished Basement
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Birchmount/Sheppard
$279,900
4 Bedrooms Town House
Prime Agincourt Area
Short Walk To All
Amenities.
Call For More Info....
Finch/Valley Farm
$329,900
Freehold Town House
4 Bedrooms.
Large Corner Lot.
Close To All Amenities.
McLevin/Tapscott
$ 299,900
3 Bedrooms Feehold
3 WashroomTown House
Close to all Amenities
Call for More Details
HWY 7 / McVean
Brand New
$949,000
New Detached,5Bed Rms
Walk-Out Basement
Ravine Lot.
Hardwood Floor
Approx 4500 Sq Ft
Justin William
Real Estate Broker
416.803.7344
Midland/Lawrence
$129,900
1 Bedroom Condo
1 Washroom
Renovated Unit
Close to all Amenities
Great For First Timers.
Weston/ Hwy 7
$389,900
3 Bedroom Condo T/H
3 Washrooms
Finished Walk-Out Bsmt
Prime Vaughan Area
Close to all Amenities.
Lawrence/McCowan
$439,900
4 Self Contained Aptment
7 Bedrooms
Walk To Hospital
4 Parking Spaces
Very Good Investment.
Markham/Denison
$509,000
4 Bedroom House
3 Washroom
High Demand Area
Over 2000 Sf
Less Than 5 Years Old..
Hwy 401/McCowan
$218,800
2 Bedroom Condo
Luxury Building
Unobstructed View
Corner Unit
24 Hrs Security..
Wilton Gnanapragasam
Sales Representative
416.554.4747
9th Line/Hoover Park
$549,000
4 Bedroom Detached
3 Washrooms
Mattamy Home
Over 2500 Sf
Tastefully Decorated..
Blackwalnut/Terrager
$549,900
4 Bedroom Detached
3 Washrooms
Well Maintained.
Stainless Steel Appliances
Close To Go Station,
McCowan/Sheppard
$156,000
2 Bedroom Condo
Bright & Spacious
Corner Unit
New Hardwood Flooring
Convenient Location.
Brimley/Finch
$154,900
Daisy Mart With Lotto
Good Family Business
Good Sales
Good Lotto Commission
Reasonable Rent.
Kennedy/Ellesmere
$269,900
3 Bedroom Town House
Affordable Price
End Unit
Low Maintenance Fee
Great Location..
Balan Kanesapillai
Sales Representative
416.844.5401
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
*Each office Independently owned and operated
5215 Finch Ave, East, Toronto, ON. Tel: 416-321-6969 & 145 Traders Blvd. E, Mississauga,ON Tel: 905-712-2666

# முழங்கால் மூட்டுவலிக்கு முடிவுகட்ட

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

நம் முன்னோர்கள் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள். அதற்கு காரணம் அவர்கள் ஆரோக்கியம் தரும் உணவுகளை அளவோடு உண்டு மகிழ்ந்ததுடன் உடலுக்கும், மூளைக்கும் சமமாக போதிய அளவு வேலை கொடுத்தார்கள். ஆனால் இன்று மூளைக்கு மட்டுமே அசுர வேலை கொடுக்கப்படுகின்றது. உடல் அசையாமல் ஒரே இடத்தில் அமர்ந்தபடியே இருக்கும்படி வேலைகள் நடைபெறுகின்றது. உணவைக் கூட மறந்து உடற்பயிற்சி எதுவுமின்றி காலத்தை மறந்து பொருள்தேடி அலைகின்றனர்.

நோய்களில் நீரிழிவு, இரத்த அழுத்தம், இருதய நோய் என்பன உயிருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியன. இதனைக் கடந்து மனிதனை வாட்டி வதைத்து அனைத்து வேலைகளையும் முடக்கி நாளாந்தம் மனிதனுக்குத் தொல்லை கொடுப்பது மூட்டு வலிகள்தான். இவற்றுள் மனிதனை நிம்மதியில்லாது செய்வது முழங்கால் வலிதான். இது மனிதனை நடக்கவே இயலாது செய்வதுடன் கால் மூட்டுகளில் வீக்கத்தையும் வலியையும் உண்டாக்கும். இதற்கு பலர் மருத்துவமனை அறுவை சிகிச்சைகள் செய்தும் வருகின்றனர். இதன் மூலம் இதனை முற்றாக குணப்படுத்தியவர் எவருமில்லை.

மூட்டுவலி என்பது மூட்டின் தேய்மானத்தால் மட்டும் வருவதல்ல. மலச்சிக்கலாலும் இது ஏற்படும். வயது வந்த ஆண், பெண் இருபாலாரையும் பாதிக்கும். முழங்காலிலுள்ள இணைப்பிலும் எலும்புகளுக்கிடையிலும் ஒருவித சவ்வு



உள்ளது. இந்தச் சவ்வுதான் மூட்டுக்களின் அசைவுக்கு உதவுகின்றது. இந்த சவ்வுகளினால் வாய்வு சேர்ந்து அது வாத நீராக மாறி மூட்டுவலியை ஏற்படுத்துகின்றது. அது மட்டுமன்றி குடல் அழற்சி, பித்தம் அதிகரித்தல், நெஞ்செரிச்சல் இவற்றினாலும் வலி ஏற்படும். பொதுவாக பெண்கள் மாதவிலக்கு காலங்களில் அதிகமாக வேலை செய்வதாலும் மூட்டுவலி ஏற்படும்.

### முழங்கால் வலி ஏற்பட



### காரணங்கள்

நேரம் தவறி உணவை அருந்துவதாலும் ஒரே நேரத்தில் அதிக உணவை உட்கொள்வதாலும், நீண்டநேரம் பட்டினி இருப்பதாலும் அஜீரண கோளாறு உண்டாகின்றது. குடலிலிருந்து வெளியேறும் அபான வாயு கீழ்நோக்கி வெளியேறாது மேல் நோக்கி பாய்ந்து தலைப்பகுதியை அடைகின்றது. அங்கிருந்து பின் கழுத்து வழியாக கீழே இறங்கி உடலின் அனைத்து பகுதிகளுக்கும் பரவி தசை நார்கள் வழியாக கால் மூட்டுகளைச் சென்றடைந்து அங்கேயே தங்கிவிடுகின்றது. இந்த வாய்வு நீராக மாறி நரம்புகளைப் பாதிக்கின்றது. இதைத்தான் வாதநீர் என்று சொல்லுவதுண்டு. இது மூட்டுகளில் வலியாக மாறி வீக்கத்தை ஏற்படுத்துகின்றது.

### கால் மூட்டுவலி ஏற்படாமல் தடுக்க

(1) நேரம் தவறாமல் சாப்பிட வேண்டும்
(2) எளிதில் சமிபாடடைக்கூடிய உணவுவகைகளை உண்பது நல்லது.
(3) இரவு உணவு அரை வயிறு உணவாகவும் மென்மையாகவும் இருக்கவேண்டும்
(4) வாயுவை அதிகரிக்கச் செய்யும் அதிகமான மாப்பொருள் கலந்த உணவுகளை குறைக்கவும்.
(5) மனச்சிக்கலும், மலச்சிக்கலும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை.

### யோகாசனப் பயிற்சியில் தீர்வு




தினமும் 15 நிமிடங்களாவது ஒரு குறிப்பிட்ட யோகாசனப் பயிற்சியாவது செய்துவரவேண்டும். அதாவது மூட்டுவலியை முறியடிக்கக்கூடிய சில பயிற்சிகள் இருக்கின்றன. அவையாவன:

(1) உட்கட்டாசனம்
(2) விபரீதகரணி
(3) பாதஹஸ்தாசனம்
(4) பத்மாசனம்
(5) தனுராசனம்
(6) நாடிசுத்தி பிராணாயாமம்

மேற்கூறியவற்றை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் முறைப்படி பயிற்சி செய்து வரும்போது, சில நாட்களிலேயே கணிசமான முன்னேற்றத்தை காணமுடியும்.


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

# 2012...

08 ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ள சுவீடன் வீரர் ராபின் சோடர்லிங், அவுஸ்திரேலிய வீரர் பெர்னார்ட் டாமிக்கிடம், 6-1, 6-4, 7-5 என்ற நேர் செட்களில் தோல்வியைத் தழுவினார் என்பது குறிப்பிடத்தக்கது. விம்பிள்டன் கிராண்டஸ்லாம் டென்னிஸ் காலிறுதியில் விளையாட மரியா ஷரபோவா, சபைன் லின்சிகி, விக்டோரியா அசாரென்கா, பெட்ரா விட்டொவா ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர். நடப்பு சாம்பியன் செரினா வில்லியம்ஸ் 4 வது சுற்றில் தோல்வியடைந்து போட்டியில் இருந்து வெளியேறினார். ஆடவர் பிரிவில் அவுஸ்திரேலியாவின் பெர்னார்ட் டாமிக் காலிறுதிக்குள் நுழைந்தார். வெற்றி பெற்ற விக்டோரியா, காலிறுதிக்குள் நுழைந்த முதல் பெலாரஸ் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார். செக் குடியரசின் பெட்ராவும் காலிறுதிக்கு தகுதி பெற்றார். அமெரிக்க வீராங்கனையும், நடப்பு சாம்பியனுமான செரினாவை பிரான்ஸ் வீராங்கனை மரியோன் பார்தோலி தோற்கடித்தார். இந்த ஆட்டத்தில் மரியோன் 6-3,7-6 (8:6) என்ற செட் கணக்கில் வென்றார்.

மொறட்டுவ பல்கலக்கழகத்தின் பழைய மாணவர் ஒன்றியம் - கனடாக் கிளையின்

வருடாந்த கோடைகால ஒன்று கூடல்

மேற்படி அமைப்பின் வருடாந்த கோடைகால ஒன்று கூடல், ஜுலை மாதம் 3ஆம் திகதி (July 03, 2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை நடைபெறும்.

இடம்: NEILSON & FINCH சந்திப்பில் உள்ள Neilson Park இல் நடைபெறும். இவ் ஒன்று கூடலுக்கு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் வந்து கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு நிர்வாகக் குழுகேட்டு கொள்கின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு : 416.801.3863 / 416.618.5084
416.528.1407 இலக்கங்களை அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# Another New Project By ARGENTO

TRIDEL BUILT FOR LIFE



YORK MILLS & DON MILLS

For early reservation.

VIP price & selection.

HomeLife / GTA Realty Inc., Brokerage*

Please Call: 416.321.6969

* Exclusive Brokerage



# NEW PROJECTS

## MORNINGSIDE & MCNICOLL COMMERCIAL CONDO.



4 Building Available for

- Retail Stores
- Restaurants
- Pharmacy
- Professional Offices
- Food Outlet & More

## COMMERCIAL CONDO. WARDEN & EGLINTON



Available. for

- Retail Stores
- Food Court
- Office Space

70% Sold. Restaurant units sold. Good for end users.

Completion Summer 2012

HomeLife / GTA Realty Inc., Brokerage
GTA SQUARE
5215 Finch Ave. East #203

TEL: 416.321.6969

# கனடா தமிழ் இலக்கியத்தோட்டம் இயல் விருது - 2011

## எஸ். பொன்னுத்துரை

கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது விழா வழமைபோல ரொறொன்ரோவில் யூன் 18ம் தேதி ராடிஸன் ஹொட்டலில் நடைபெற்றது. இம்முறை வாழ்நாள் இலக்கிய சாதனைக்கான இயல் விருது







எஸ்.பொ என்று அறியப்படும் திரு. எஸ். பொன்னுத்துரை அவர்களுக்கு வழங்கப்பட்டது. கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், விமர்சனங்கள், மொழிபெயர்ப்புகள் என தமிழ் இலக்கியத்தின் பல துறைகளிலும் பங்களித்தவர் இவர். 25 க்கு மேலாக நூல்கள் எழுதியிருக்கிறார். இவருடைய 'நனவிடை தோய்தல்' நூல் மிகப் பரவலாக வாசிக்கப்பட்டு விமர்சகர் களால் பாராட்டப்பட்டது. இவருக்கு அதிக புகழ் தேடித் தந்த சடங்கு நாவல் 'Rituals' என்ற தலைப்பில் பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு சமீபத்தில் வெளியானது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் இயல் விருதை வழங்க எஸ்.பொ பெற்றுக்கொண்டார்.

இயல் விருதை தொடர்ந்து மற்றைய விருதுகளும் வழங்கப்பட்டன:

புனைவு இலக்கியப் பிரிவில் "பதுங்கு குழி" நாவலுக்காக பொ. கருணாகர மூர்த்திக்கும், 'காவல் கோட்டம்' நாவலுக்காக சு.வெங்கடேசனுக்கும், அபுனைவு இலக்கியப் பிரிவில் "பண்பாட்டுப் பொற்கனிகள்" நூலுக்கு சச்சிதானந்தன் சுகிர்தராஜாவுக்கும், 'இன்னும் பிறக்காத தலைமுறைக்காக' நூலுக்கு சு.தியடோர் பாஸ்கரனுக்கும், கவிதைப் பிரிவில் 'இருள் யாழி' தொகுப்புக்காக திருமாவளவனுக்கும், 'அதீதத்தின் ருசி' தொகுப்புக்காக மனுஷ்யபுத்திரனுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சுந்தர ராமசாமி நினைவாக நிறுவப்பட்ட 'கணிமை விருது' முத்து நெடுமாறனுக்கு கன்னியாகுமரியில் நடைபெற்ற சுரா 80 விழாவில் வழங்கப்பட்டது.

மாணவர் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றவர் சிரோதி இராமச்சந்திரன்.

இந்த விழாவுக்கு பல நாடுகளில் இருந்து எழுத்தாளர்களும், கல்வி யாளர்களும் ஆர்வலர்களும் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

# விருதுநகர் - 2 வரலாற்றுப்பயணமும் அருவிக் குளியலும்



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 92

சென்ற இதழ் தொடர்ச்சி...

விருதுநகரைச் சுற்றியும் ஒருநாள் பயணத்தில் சென்று திரும்பிவிடும்படி பல முக்கியமான இடங்கள் உள்ளன என்பதை சென்ற இதழில் பார்த்தோம். அந்த இடங்கள் என்னென்ன அவற்றின் சிறப்பு என்ன என்பதை இப்போது பார்ப்போம்.

### முதலில் அய்யனார் அருவி...

விருதுநகரில் இருந்து 12 கி.மீ. தொலைவிலும் ராஜபாளையத்தில் இருந்து 9 கி.மீ. தூரத்திலும் உள்ளது அய்யனார் அருவி. நீர்காத்த அய்யனார் கோவிலை ஒட்டி அமைந்துள்ளதால் அய்யனார் அருவி எனப் பெயர். அடர்ந்த காட்டின் இயற்கை அழகும் பதினைந்து அடி உயரத்தில் இருந்து விழும் அருவியும் இணைந்து பேரழகின் உச்சமாகத் திகழ்கிறது இந்தச் சிறு ஊர். மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பசுமையை ரசித்தவாறே அருவியில் குளிப்பது அலாதியான சுகம். ராஜபாளையத்தில் இருந்து காலை, மாலையில் பேருந்து வசதி உள்ளது. ஆனால், தங்குவதற்கு விடுதி வசதியோ, ஓட்டல்களோ இல்லை. எனவே, விருது நகரில் இருந்து வந்து செல்வதே புத்திசாலித்தனமானது.

**- வழிப்போக்கன் -**

இராஜபாளையத்திலிருந்து சத்திரப்பட்டி செல்லும் வழியில் உள்ளது, சஞ்சீவி மலை. விருதுநகர் மாவட்டத்தில், அய்யனார் அருவிக்கு அடுத்தபடியாக புகழ்பெற்ற சுற்றுலா ஊர் இது. இங்குள்ள அமைதியும் எழிலும்தான் பயணிகளை ஈர்க்கக் காரணம். இராமாயணத்தில் இலங்கைப் போரின் போது மயங்கி விழுந்த இலக்குமணனைக் காப்பாற்ற அனுமன் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்ததாகவும், பின்னர் இங்கு வீசியெறிந்ததாகவும் புராணக் கதைகள் கூறுகின்றன. ஆகவே, இங்கு உயிர்காக்கும் மூலிகைகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இராஜபாளையத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவில், தென்காசி செல்லும் வழியில் அமைந்துள்ள தேவதானமும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்துசெல்லும் இடம். இங்குள்ள, சாஸ்தாகோவில் ஆறு மற்றும் அணைக்கட்டுதான் இதற்குக் காரணம்.

மண மகரிஷி ஆசிரமம் என்றால் உடனே திருவண்ணாமலைதான் அனைவருக்கும் ஞாபகம் வரும். ரமண மகிரிஷி பிறந்த ஊர் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள திருச்சுழிதான். மானாமதுரை, விருதுநகர் சாலையில் உள்ளது இந்த ஊர். விருதுநகரில் இருந்து 35 கி.மீ தொலைவிலும், அருப்புக்கோட்டையில் இருந்து 16 கிமீ தொலைவிலும் அமைந்துள்ளது. ரமண மகரிஷி 1879ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி திருச்சுழியில் பிறந்தார். அவரது தாயார் அழகம்மாள், தந்தை சுந்தரம் ஐயர். அவர் வாழ்ந்த வீடு சுந்தர மந்திரம். இங்குள்ள சேதுபதி ஆரம்பப்பள்ளியில்தான் அவர் கல்வி பயின்றார். வாழ்ந்த ஊரில் ஆசிரமம் இருக்கும் போது, பிறந்த ஊரில் இல்லாமல் இருக்குமா? இங்கும் ரமண மகரிஷிக்கு ஒரு ஆசிரமம் உள்ளது. பிரசித்தமான ஆசிரமம் இது. அவருடைய பெயரால் 1988ஆம் ஆண்டு குண்டாற்றின் கரையில் ஆசிரமம் அமைக்கப்பட்டது. ராமேஸ்வரம், திருச் செந்தூர் சென்று திரும்பும் பக்தர்கள் இங்கு வந்து ரமண மகரிஷியின் இல்லத்தை பார்த்துவிட்டு செல்வது வழக்கம்.

திருச்சுழிக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அதாவது, 14 பாடல்பெற்ற பாண்டிய நாட்டுத் தலங்களில் திருச்சுழியும் ஒன்று. இங்குள்ள திருமேனிநாதஸ்வாமி கோயில், பாண்டியர்கள கட்டிய 14 கோயில்களில் 10ஆவதாகக் கட்டிய கோயில். புகழ்பெற்றது. இக்கோயில் 43,500 சதுர அடிகள் பரப்பளவு கொண்டது. இங்கு லிங்கத்தைச் சுற்றி 10 தீர்த்தங்கள் உள்ளன. திருமேனிநாதனை வழிபடுவது நல்ல அனுபவம் என்கிறார்கள்.

திருச்சுழியிலேயே இன்னொரு புகழ்பெற்ற பாண்டியர்கள் கட்டிய கோயிலும் உள்ளது. அது, பூமிநாத சுவாமி கோயில். பாண்டிய நாட்டின் புகழ்பெற்ற 14 சிவாலயங்களில் இதுவும் ஒன்றாகும். விருதுநகரில் இருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள கடவுள் பூமிநாதர், தாயார்

தொடர்ச்சி 39ஆம் பக்கம்


4th Annual
Summer Festival
2011
GTA SQUARE
INDOOR MALL
FREE ADMISSION
A SPRING IN SUMMER
FUN FUN FOR EVERYONE
AUGUST 6 & 7, 2011
12.00 Noon - 9.00pm
★ Live musical Show ★ Fashion Shows ★ Talent Shows
★ Dance Programs ★ Game and Play area for Kids
SIDE WALK SALE
5215 Finch Ave. East (@Middlefield) Scarborough, ON M1S 0C2
கோடையில் ஓர் வசந்தம்

# 2012 இல் உலகம் அழிந்துவிடுமோ?

## காரணம் மகா கதிரவப்புயல்! அஞ்சுகிறார்கள் அறிவியலாளர்கள்

சென்ற தடவையில் மகா கதிரவப்புயல் பற்றிய மனித குலத்திற்கான அச்சுறுத்தல் பற்றிப் பார்த்தோம். உண்மையிலேயே பலர் பயத்துடன் காலங்கழிக்கிறார்கள். நாசாவின் விஞ்ஞானிகளுடன் தொடர்பு கொண்டும் மகா கதிரவப்புயல் பற்றிக் கேட்கிறார்கள். சில இளைஞர்கள் இனி வாழ்ந்து என்ன பயன் என்றும் தாம் தற்கொலை செய்யப் போகிறோம் என்று விரக்தியாகவும் நாசாவின் விஞ்ஞானிகளிடம் கூறுகிறார்களாம். எங்களில் எத்தனை பேருக்கு இந்த விடயங்கள் தெரியுமோ எனக்குத் தெரியாது. ஆனாலும் எங்களிற் சிலரும் பயத்தினால் ஒருவித அருட்டப்பட்ட நிலையில்தான் இருக்கின்றார்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. எது எப்படியிருப்பினும், இன்று இந்த விவகாரம் தொடர்பாக இன்னமும் சில விபரங்களைத், தெளிவுபெறும் முகமாகப் பார்ப்போம்.

முதலில் கதிரவப் புயல் என்றால் என்னவென சற்று விபரமாகத் தெரிந்து கொள்வோம். வளிமண்டலத்தில் உள்ள பவனஅமுக்க வித்தியாசத்தின் காரணமாக, புயல், சூறாவளி போன்றவை தோன்றி புவியில் பெருத்த சேதத்தினை ஏற்படுத்துவது எங்களுக்குத் தெரியும். அது போன்றதுதான் இந்தக் கதிரவப்புயலும். அப்படியாயின் கதிரவனிலும் காற்று உள்ளதா? என நீங்கள் கேட்கலாம். ஒருவகையில் ஆம் என்றுதான் கூறவேண்டும். Solar wind எனக் கேள்விப்பட்டிருப்பீர்களே! அதுதான் கதிரவக்காற்று. வலிமையான கதிரவக் காற்றின் வெளிப்பாடுகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதிலும் கனடா நாட்டில் வாழுகின்ற எங்களுக்கு மிகவும் பழக்கமான ஒன்று. வட வெளிச்சம், தென் வெளிச்சம் என்று கூறுவார்களே, அவை இந்த வலிமையான கதிரவக் காற்றின் விளைவுகளே. இப்படியான கதிரவக் காற்றின் மிக வலிமையான ஒன்றுதான் கதிரவப்புயல் எனலாம்.

கதிரவன் மிகப் பெரிய வாயுப் பந்து. அதன் வெளிப்பகுதியின் வெப்பநிலை, 6000 பாகை சதமஅளவை. இந்த உயர்ந்த வெப்பநிலை காரணமாக கதிரவனின் வாயுக்கள் 'பிளாஸ்மா' என்ற நிலையில் காணப்படும். பிளாஸ்மா என்பது, திண்மம், திரவம், வாயு போன்று, சடப்பொருள் ஒன்று இருக்கும் நான்காவது நிலையாகும். பிளாஸ்மா நிலையில் எல்லாமுமே மின்ஏற்றம் உடைய அயன்களாகத்தான் இருக்கும். பொதுவாக அணுக்கள் இலத்திரன்களை இழந்து அல்லது பெற்று அயன்களாகின்றன. இதன்படி, கதிரவனில் உள்ள துணிக்கைகள் எல்லாம் அணுநிலையில் இருந்து அயன்களானவை என்பது உங்களுக்குத் தெரியும். இதற்குக் கதிரவனின் மிகப் பெரிய வெப்பநிலை காரணமாக இருக்கின்றது. இந்தப் பிளாஸ்மா நிலையில் இருக்கும் வாயுக்கள், அதாவது அயன்கள், கதிரவனின் சுழற்சியாலும், மத்தியில் நிகழும் அணுச் சேர்க்கையாலும், கதிரவனின் மேற்பரப்பில் இருந்து காலத்திற்குக் காலம் வெளியே தள்ளப்படும். அவை கதிரவனில் நின்றும் வேகமாக வெளியே வருகின்றன. இதனையே கதிரவக் காற்று என்கிறோம். புவியினைப் போல் கதிரவனும் தன்னைச் சுற்றிப் பெரிய காந்த மண்டலத்தைக் கொண்டுள்ளது. அக்காந்த மண்டலத்தின் தளம்பல்களும் கதிரவனின் மேற்பரப்பில் இருந்து துணிக்கைகள் வீசப்படுவதை ஊக்குவிக்கின்றன.

இக்கதிரவக் காற்று, வேகமாக எங்கும் பரவி, கதிரவனின் கோள்களைக் கடந்து செல்கின்றது. எமது புவியையும் கடந்து செல்கின்றது. கதிரவக் காற்றில் உள்ளவை சக்தி வாய்ந்த ஏற்றம் பெற்ற துணிக்கைகள் அல்லவா. அவை நேரடியாக எமது புவியை வந்தடைந்தால், புவியில் உள்ள உயிரினங்களை அழித்துவிடும். நல்ல காலமாக, புவியைச்



சுற்றியுள்ள காந்த மண்டலம், இந்தக் கதிரவக் காற்றில் இருந்தும் எம்மைப் பாதுகாக்கின்றது. கதிரவனில் இருந்து வருகின்ற அயன்கள் இந்தக் காந்த மண்டலத்தால் தள்ளப்பட, எமது புவி கதிரவக் காற்றின் ஆபத்தில் இருந்தும் காக்கப்படுகிறது.

சில சமயங்களில் கதிரவனின் வக்கிரமான நடவடிக்கைகளினால், அதிக அளவு அயன்கள் மிக வேகமாக வெளித்தள்ளப்படுகின்றன. இப்படியாக அதிக வேகத்துடனும் அதிக அளவிலுமாக வருகின்ற அயன்கள்தான் பிரச்சனையானவை. பெருந்தொகையாக, வேகமாக வரும் சக்தித் துணிக்கைகளை புவியின் காந்த மண்டலத்தால் சமாளிக்க முடியாது போய்விடும். இதனால் புவியைச் சுற்றியுள்ள காந்த மண்டலத்தின் கதிரவன் பக்கமாக உள்ள தூரம் குறைந்துவிடும். புவியினைச் சுற்றிக் காந்த மண்டலத்தின் உள்ளாக, 'வான் அலன் பட்டை' (Van Allen Belts) எனும் ஒரு பட்டை காணப்படுகிறது. இதில் ஏற்றம் பெற்ற துணிக்கைகள் காணப்படுகின்றன. உள்நோக்கி வருகின்ற காந்த மண்டலத்தின் காரணமாக இந்த வான் அலன் பட்டையானது அகற்றப்பட்டு விடும்.

சாதாரண கதிரவக் காற்றில் இருந்து இவ்விதம்தான் எமது புவி இயற்கையில் காக்கப்படுகிறது. கதிரவப்புயல் என வருகையில் பெருமளவு அயன்கள் வருகின்றன. இவை தம்முள் ஒரு காந்தப் புலத்தினைக் கொண்டிருக்கின்றன. கதிரவப்புயலிற் காணப்படும் காந்தப் புலமும் புவியின் காந்தப்புலமும் தத்தமது காந்தவிசைக் கோடுகளின் எதிர்எதிர்ப் போக்கால் ஒன்றிணைகின்றன. (காந்தப்புலங்களில் காந்தவிசைக் கோடுகள் வடமுனையில் இருந்து தென்முனைவாக ஓடுவதாலேயே காந்தப்புலம் காந்த இயல்பைக் காட்டுகிறது.) கதிரவனில் இருந்து வருகிற துணிக்கைகளின் காந்தப்புலமும், புவியின் காந்தப்புலமும் ஒன்றிணைய, புவியினது காந்தப்புலம் தற்காலிகமாக இல்லாது போகிறது. அத்துடன் பெருமளவு காந்தசக்தியானது வெளிவிடப்படுகிறது.

இந்தக் காந்த சக்தியானது கதிரவனில் இருந்து வந்து கொண்டிருக்கிற துணிக்கைகளின் வேகத்தை, சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. அதனால் அத்துணிக்கைகள் ஒளிர்வதுடன், வலிமையான மின்னோட்டத்தினையும் உண்டாக்குகின்றன. இத்துணிக்கைகள் புவியைக் கடந்து செல்கையில் கதிரவனின் மறுபக்கத்தில் இருட்டில் வெளிச்சமாகத் தெரியும். இதனையே துருவ வெளிச்சங்கள் என்கிறோம். சக்திமிக்க துணிக்கைகள் இருட்டில் செல்லுகையில் இந்த வெளிச்சங்கள் நெளிந்து நெளிந்து செல்வது ஒரு நாட்டியம் போல இருக்கும். உங்களில் சிலர் இதனை அவதானித்தும் இருப்பீர்கள்.

புவியைக் கடந்து செல்லும் துணிக்கைகளில் வலிமையான மின்னோட்டம் உண்டாகுமெனக் கூறினேன் அல்லவா. இம்மின்னோட்டமானது புவியில் உள்ள மின்உற்பத்தி நிலையங்களில் தூண்டல் முறையினால் ஒரு மின்னோட்டத்தினை உண்டாக்கும். இந்த வலிமையான தூண்டல் மின்னோட்டத்தினால், புவியில் உள்ள மின்நிலையங்கள் எல்லாம் பழுதடைந்து போய்விடும். அதனால், மின்சாரத்தை நம்பியிருக்கும் இடங்கள் எல்லாம் செயலிழந்துவிடும். இந்நாட்களில் அதிகமாக எல்லாமுமே மின்சாரத்தின் உதவியுடனேயே இயங்கிக் கொண்டிருப்பதால், மனித குலம் பெரிய சிக்கலுக்குள் தத்தளிக்கும். வைத்தியசாலைகள், தொழில்நிலையங்கள், பங்குச்சந்தைத் தொடர்புகள் முதல் சகலதுமே செயலிழந்து போகும். அத்துடன் வான்வெளியில் எங்களால் அனுப்பப்பட்ட செய்மதிகள் எல்லாம் பழுதாகிப் போய்விடும். வலிமையான எக்ஸ் கதிர்களும் கதிரவனில் இருந்து கதிரவப்புயலினூடு வருவதால், வானொலிச் சமிக்கைகள், GPS (Global Positioning System) என்னும் நிலைகளை அறிந்து கொள்ளும் செயற்பாடும் தடைப்பட்டுப் போகும்.

காந்த சக்தியினால் வலுப் பெற்ற துணிக்கைகள் புவியைக் கடந்து சென்றதும், புவியின் காந்த மண்டலம் மீண்டும் வந்துவிடும். துருவ வெளிச்சங்கள் இல்லாது போய் விடும். ஆனால், ஏனைய பழுதான பிரச்சனைகளுக்கு நாங்களே பரிகாரம் தேடவேண்டிய நிலை வருகிறது. இவைதான் கதிரவப்புயலால் வருக்கூடிய சிக்கல்கள். கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேலாக உலகின் பல பாகங்களும் இருளில்தான் மூழ்கியிருக்கும். வரப்போகும் மகா கதிரவப் புயலினாலும் இந்த ஆபத்துக்கள் வரவுள்ளன. அத்துடன் சென்ற தடவையில் கூறப்பட்ட அபாய விளைவுகளும் நேரலாம் என்கிறார்கள் சில விஞ்ஞானிகள்.

நாசாவின் பொதுசனத் தொடர்பாளரான டேவிட் மெரிசன் என்ன கூறுகிறார் என்றால் மகா கதிரவப்புயலையிட்டு யாரும் பயப்படத் தேவையில்லை. அது எமது புவியில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை, மாற்றியதாகச் சரித்திரமும் இல்லை என்கிறார். புவிக் காந்த முனைவுகள் இடம் மாறாது. பலநூறாயிரம் ஆண்டுக்கு ஒருதடவை அவை நிகழ்ந்திருந்தாலும், அதற்கான காரணங்கள் இன்னமும் அறியப்படவில்லை. பெருமளவில் திரண்டு வருகிற கதிரவத் துணிக்கைகள் கதிரவத் தொகுதியின் அமைப்பினை மாற்றிவிடும், அதனால் புவியின் உயிரினங்கள் அழிந்துவிடும் எனச் சிலர் கூறுவது பொருத்தமான ஒன்றல்ல என்பதும் மெரிசனின் கூற்றாகும். இப்பரபரப்பான செய்தியானது சில ஊடகங்களின், தமது தேவை கருதிய விசமத்தனமான செய்தி என்றும் அவர் கூறுகிறார். ஆனால் பயமுறுத்தும் கருத்துக்களையும் சில நாசாவின் விஞ்ஞானிகளும் கூறி இருந்தார்கள்.

காலத்திற்குக் காலம் விஞ்ஞான எதிர்வு கூறல்களின் மிரட்டல்கள் வந்து கொண்டேதான் இருக்கின்றன. உங்களது வாழ்நாளில் இப்படி எத்தனை பயமுறுத்தும் செய்திகளைக் கேட்டிருப்பீர்கள். ஒருவேளை விஞ்ஞானத்தின் உதவியுடன் வாழுகின்ற இந்நாட்களில் மின்சாரத்தின் தடையானது சில இடைஞ்சல்களைத் தந்தாலும், மனித இனத்தின் அழிவுக்கு இப்பிரச்சனை வழிகோலாது. இளையவர்களுக்கு இப்படியான செய்திகள் ஒருவேளை புதியனவாக இருக்கலாம். அனுபவசாலிகள் அவர்களைத் தைரியப்படுத்துங்கள்.

2013ம் ஆண்டை மகிழ்வொடு வரவேற்பதற்கு இப்பொழுது முதற்கொண்டே ஆயத்தங்களைச் செய்யத் தொடங்குவோம்.

(விஞ்ஞான விளக்கங்கள் மெதுமையாகவே கொடுக்கப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் இணையத் தளங்களிலும், விஞ்ஞானச் சஞ்சிகைகளிலும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# திரைவிமர்சனம் - அவன் இவன்

இயக்குனர் பாலா படம்! எதிர்பார்ப்புகளுக்கு நிச்சயம் குறைவிருக்காது. சச்சின் டெண்டுல்கர் மகத்தான கிரிக்கெட் வீரர்தான். சச்சின் 100 அடிப்பார் என்ற எதிர்பார்ப்போடுதான், ரசிகர்கள் ஒவ்வொரு போட்டியின் ஆரம்பத்திலும் சீட்டின் நுனியில் உட்கார்ந்திருப்பார்கள். ஆனால், எல்லா போட்டிகளிலுமா அவர் 100 அடிக்கிறார். பல போட்டிகளில் சொற்ப ஓட்டங்களில் அவுட் ஆகியிருக்கிறார். சில போட்டிகளில் டக்-அவுட்டே ஆகியிருக்கிறார். சச்சினுக்கு நேர்வது பாலாவுக்கு நேரக்கூடாதா என்ன? அவன் இவனில் பாலா சொற்ப ஓட்டங்கள் மட்டுமே அவுட் ஆகிவிட்டார். ஆம், பாலா படம் என்ற எதிர்பார்ப்போடு சென்றால், ஏமாற்றம்தான்.



**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

இப்படத்தில் கதை என்பதே இல்லை. சில சம்பவங்களின் தொகுப்புதான் மொத்தப் படமும். இது ஒருவகையில் சிறப்புதான் என்றாலும், அந்தச் சிறப்பை திரைக்கதையில் கோட்டை விட்டுவிட்டார்கள்! திருட்டு தொழிலையே குலத்தொழிலாகக் கொண்டிருக்கிற ஒரு கிராமம். இங்கே, திருட்டு தொழில் செய்யும் குடும்பத்தில், இரண்டு தாரத்திற்கு பிறந்த இரண்டு மகன் தான் நாயகர்கள். அப்பா: அனந்த் வைத்தியநாதன். அவருக்கு, அம்பிகா, பிரபா ரமேஷ் என இரண்டு பொண்டாட்டிகள். அம்பிகாவின் பிள்ளை விஷால் பிரபா ரமேஷோட பிள்ளை ஆர்யா. அண்ணன் - தம்பிகள் ஒரு வீடு இரு வாசல் என்கிற மாதிரி. வால்டர் வணங்காமுடி என்ற விஷாலுக்கு ஒன்றரை கண். அரவாணியாக வேறு வருகிறார். கும்புடுறேன் சாமி என்கிற பெயரில் ஆர்யா வருகிறார். சேது படம் தவிர, பாலாவின் எல்லாப் படங்களிலும் கதாநாயகர்கள் தலையில எண்ணெய் வைக்காத முடியோடதான் வருகிறார்கள். இந்த படத்தில் அந்தப் பாத்திரம் ஆர்யாவுக்கு.

இவர்கள் குடும்பத்தில் ஒருவராகப் பழகி வருகிறார் ஜமீன்தார் ஜரிஸ். தன் வயதுக்கு மீறி ஆரியா, விஷால் இருவரிடமும் நட்பு பாராட்டுகிறார். எல்லாவற்றையும் இழந்து நிற்கிற ஜமீனுக்கு காலம் முழுக்க விசுவாசமாக இருக்கிறார்கள் இரண்டு பேரும். இறைச்சிக்காக மாடுகளை கேரளாவுக்குக் கடத்தும் வில்லனை ஜமீன், தனது செல்வாக்கை வைத்து காவல்துறையில் காட்டிக் கொடுக்கிறார். அதற்காக பதிலுக்கு பழிவாங்க நேரம் பார்த்துக் காத்திருக்கும் வில்லன், கடைசியில் ஜமீனை மிகக் கொடுமையான முறையில் கொலை செய்கிறார். ஜமீன் கொலைக்குப் பழிக்குப் பழி வாங்குகிறார்கள் அவன் இவன் இருவரும்.

## இதுதான் கதை!

கதையில் பாலா ஏமாற்றினாலும், ஒரு விஷயத்தில் நிரூபித்துவிட்டார். ஒரு சாதாரண நடிகராக, வாய்ப்புகளே இல்லாமல் இருந்த விக்ரம், பாலாவின் 'சேது'வுக்குப் பிறகுதான் தமிழில் முன்னணி நடிகர்களில் ஒருவரானார். பிதாமகனுக்காக இந்திய அரசின் தங்கத் தாமரை விருது எல்லாம் வாங்கினார். சரியாக நடிக்கவே தெரியாமல் இருந்த சூர்யா, பிதாமகனிலும் நந்தாவிலும் பாலா கொடுத்த பயிற்சியில், இன்று இந்திய

தொடர்ச்சி 39ஆம் பக்கம்


மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி

ஜோதிடம்

பண்டித் மகேந்திரன் சுவாமிகள்





ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்

மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள் அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும் பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





100% உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.

மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

Tel: 647-919-5846 / 647-718-9555

5210 Finch Ave. East, Unit # 1, Scarborough

(Inside of Golden Bakery)

Beside the Meenadchi temple ON, M1S 4S4

# BASEMENT RENT

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to ttc, subway, school, church, bank, shopping, etc. Avail. immediately. No Pets & No Smoking
416.755.1334 / 416.903.9053 / 647.920.9466

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**NEILSON & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to 401, TTC, college, shopping. Avail. immediately.
416.283.8735 / 647.618.8735

**WARDEN & FINCH**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to school, mall, bus, doctors. Avail. immediately.
416.519.0505 / 416.886.8732

**MARKHAM & STEELES**
2 bedroom walk-out bsmt apt for rent. Parking, sep. entrance, own laundry. Close to all amenities all inclusive.
905.471.1527 / 416.509.2855
E-mail: babita.koulen@ca.pwc.com

**MCCOWAN & DENISON**
2 Big bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. July 05, 2011.
647.241.5756 / 647.706.4590

**BRIMLEY & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.961.5542

**MCCOWAN & HIGHGLEN**
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Parking, laundry, cable. Small family preferred. Close to Bus, stores, etc. Avail. July 15, 2011.
தொடர்புகளுக்கு : 416.409.5352

**BIRCHMOUNT & ST.CLAIR**
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, kitchen, one full washroom & living room. Close to TTC and other facilities. No smoking & No pets
Please Call: 416. 882.4532

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, Stores, etc. Avail. August 01, 2011.
416.686.8345 / 416.388.6603

**MARKHAM & ELSON**
1 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities.
905.472.1370 / 647.703.1343 / 647.500.4564

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.871.6149

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
416.431.2922 / 416.846.7973

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Living & Dining, kitchen. Very good for small families.
416.264.3899 (Please call after 6:00pm)

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking washroom, stove, kitchen. Very good for working couples.
தொடர்புகளுக்கு: 416.285.4695

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
1 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, fullwashroom, laundry, sep. entrance. Avail. July 30, 2011. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, mall. Small family preferred.
416. 464.4207 / 416.431.6349

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking,. Close to mall, school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.302.6930

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
416.438.5448 / 647.838.5448

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
647.285.9871 / 647.285.9861

**WARDEN & HWY 401**
2 Bedroom bsmt apt. for rent. Close to school, mall, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.889.2254

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, high school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.471.2987

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.287.2732 / 416.726.2472

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bank, school. Avail. July 01, 2011.
416.716.6422 / 647.427.5469

**MORNINGSIDE & SHEPPARD**
**ROUGH RIVER & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.220.5967

**MARKHAM & ELSON (STEELES)**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall, school, bank. Avail. July 01, 2011
தொடர்புகளுக்கு: 647.201.3528

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, TTC, YRT, tamil stores. Avil. immediately.
தொடர்புகளுக்கு: 647.203.3341

**9TH LINE & 16TH AVE. - MARKHAM**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT. Avail. July 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.864.3785

**BELLAMY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, go train, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.513.2339

**BIRCHMOUNT & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் சகல வசதிகளுடன் ஒரு அறை bsmt apt. வாடகைக்கு உள்ளது. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.291.5311

**BIRCHMOUNT & SHEPPARD**
Newly renovated 3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் உள்ள bsmt இல் அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.804.8435

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.896.7740

**NEILSON & FINCH / TAPSCOTT**
2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
வயதான தனியொருவர் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.802.6067

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TT, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.902.1758

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to kennedy subway, TTC. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.406.5749

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to plaza, school, TTC. Avail. immediatly.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**FINCH & BIRCHMOUNT**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Utilities included. Close to all facilities. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Each room $325. No Smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MORNINGSIDE & 401/MCLEVIN**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, wal-mart, nofrillslibrary, 4elementary school, University. Small family or seniors preferred.
தொடர்புகளுக்கு: 416.834.1081

# CONDO. FOR RENT

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom condo. for rent. Close to Scarborough Town Center, shoppers drug mart, Price Chopper. Avail. July 15, 2011
தொடர்புகளுக்கு: 416.704.7121

**MCCOWAN & FINCH**
2 Bedroom luxury condo. for rent. One Washroom, kitchen, parking, laundry. Close to TTC, mall. Avail. July 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.232.6472

# CONDO FOR SALE

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom + den condo. for rent. Never lived condo. Close to Scarborough Town Center. Excellent view. 1 Parking included.
தொடர்புகளுக்கு: 416.315.9397

# CONDO. RENT /SALE

**MCCOWAN & HWY 401**
**KENNEDY & HWY 401**
Brand new never lived 1+ den condo. for lease or sale. $1100 for lease. Close to s ubway, shopping, etc..
தொடர்புகளுக்கு: 416.315.9397

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

# WANTED

We buy used Toyota Camry, Corolla Civic cars wanted. 1994 - 2000 Only. Any condition.
Steeve - 416.832.1359

மேலும் பக்கங்கள் 25, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# ROOM RENT

**NEILSON & MCLEVIN**
1 Bedroom for rent. Sep. washroom, parking, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately. Working women or students preferred.
416.840.0891 / 647.890.4796

**KENNEDY & EGLINTON**
1Bedroom for rent. Close to all facilities. Avail. Anytime. Working Ladies or Students preferred.
647.339.4059 / 416.264.7628

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.703.1343

**BURNHAMTHORPE & Q.E.W.**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு.
**MARKHAM & LAWRENCE**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.875.4051

**KENNEDY & FINCH**
1 Bedroom with all facilities. Sep. entrance. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.779.3411

**MCCOWAN & ELLESMERE**
**SCARBOROUGH TOWN CENTER**
2 Bedroom for rent. Close to all facilities. Avail. Anytime.
416.786.3332 / 416.454.6360

**MORNINGSIDE & MILITARY DR**
2 Bedroom for rent. Laundry, parking. Close to TTC, mall. Avail. Anytime. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.833.3912

அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Close to all facilities. Students or ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.830.3932

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.495.9775

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopperhut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent. Close to all facilities. No smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

## TUITION

Pre-school - Grade12 all subjects.
Canada University பட்டதாரி மாணவனால் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.801.9144

## TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

## TUITION

***FINCH & MIDDLEFIELD***
***GTA Squre Unit #230***
***Chemistry, Physics, Math, English, French, Biology***
***Homework Help Kindergarten to Grade 12.***
***Space for rent.***
***416.497.7660 / 647.771.6237 / 416.889.3191***

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## மணமகள், மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து உயர் குலத்தைச் சார்ந்த ஆண் ஒருவருக்கும் பெண் ஒருவருக்கும் கனடாவில் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.554.4467

## காணி விற்பனைக்கு

வத்தளை அல்விஸ் டவுனில் லைசியம் International School க்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட 8.4 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 94.71.982.3310

# HOUSE FOR RENT

**MCCOWAN & DENISON**
3 Bedrooms mainfloor + 1 Bedroom bsmt house for rent. Close to school, TTC, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.670.8248

**NEILSON & FINCH**
3 Bedroom house for rent. 2 Car parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.802.7857

**MIDLAND & EGLINTON**
3 Bedroom house for rent. Close to Kennedy subway, Junior school, TTC. Avail. July 15, 2011.
905.201.8525 / 647.994.8525

**HWY 10 & BRISTOL - Hurontario**
3 Bedroom + bsmt semi detached house for rent. Close to 2 schools, bus, shopping, library. Avail. July 01, 2011.
905.502.6196 / 647.501.6196

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom house for rent. Parking avail. Close to university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.727.6525

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom + 2 washroom house for rent. Kitchen, living room உடன் Newly renovated bungalow house வாடகைக்கு உண்டு. Close to TTC, Cedarbrae mall, school, shopping.
647.857.9059 / 416.439.4076

## FHAMIE DAYCARE

2 வயதிலிருந்து 7 வயது உள்ள குழந்தைகளை பராமரிக்கப்படும். English & Tamil வகுப்பு நடத்தப்படும்.
416.502.3033 / 647.502.0151

## BUSINESS FOR SALE

**KENNEDY & FINCH**
தமிழ் வீடியோ கடை விற்பனைக்கு உண்டு. Tamil Video shop for sale.
தொடர்புகளுக்கு: 647.285.5006

## RULAW LEGAL SERVICES

***Indrajith Ratnalingam***
***(Indran Ratnam)*** Licensed Paralegal
***Member of Law Society of Upper Canada***
***Tel: 416.754.4LAW (4529)***
***Fax: 416.754.4519***
Email: rulawlegal@gmail.com
5200 Finch Ave. East Suite 300
Scarborough, ON M1S 4Z5

# JOB JOB JOB

## JOB WANTED

Video Editing இல் அனுபவமுள்ளவர்கள் தேவை. (விஷேடமாக Adobe Premier CS5 பரீட்சியமானவர்கள் வரவேற்கத்தக்கது) Full-Time or Part-Time.
416.455.7961 / 647.718.7294

## JOB

Kitchen, cabinet, bsmt renovation, deck, car port, painting, city approval plan for car port, carpentry works, flooring.
தொடர்புகளுக்கு: 416.802.6067

## COOK WANTED

Canadian Restaurant ஒன்றிற்கு cook தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.746.1295

**வேலைக்கு ஆட்கள் தேவை.**
***DANFORTH & DONLANDS***
Italian restaurant ஒன்றிற்கு Delivery driver & Cook தேவை. ஆங்கிலம் எழுத, வாசிக்க தெரிந்தவராக இருக்கவேண்டும். அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
amaropizza@gmail.com
தொடர்புகளுக்கு: 416.669.4559

## WANTED

Cleaning Company ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. • Marketing • Receptionist (Computer / accounting) • Painters • Office Cleaning (Ladies) • Restaurant Cleaning • Floor Waxing
தொடர்புகளுக்கு: 416.938.7510
moneytimes@rogers.com

## Computer Services

- **கணினித் திருத்த வேலைகள்**
- Compute upgrades
- Virus / Spy ware removal
- Net Working
- Multimedia Slideshows

***In Home Services. 15 Years experience.***
***Call Ram: 416.317.2358***

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

மேலும் பக்கங்கள் 24, 26

# BASEMENT FOR RENT

## BRIMLEY & STEELES

ஒரு பெரிய படுக்கை அறை உள்ள bsmt ஒன்று வாடகைக்கு உள்ளது. விசாலமான Hall, சமையலறை, washroom வசதி, Sep. entrance, TV, parking. தமிழ் Family, மருந்துக்கடை, தமிழ்க்கடை, தமிழ் சாப்பாட்டுக்கடை, பூங்கா, Bus Stand, 2 நிமிட நடை தூரம். No frills, பாடசாலை அருகில். புகை பிடிக்காதவர்கள் விரும்பத்தக்கது.
Avail. September 01, 2011. ***Pl. Call: 905.948.9887***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070**

## Answers TUTORIAL 281

(1) A plane parallel to the Y Z plane has direction vector a = (0, 1, 0) b = (0, 0, 1). This plane passes thro point (6, 4, 2).
Vector equation r = (6, 4, 2) + s (0, 1, 0) + t (0, 0, 1)

(2) A place containing the x-axis and the point A (-1, -4, -7). Two points on the x - axis are 0 (0, 0, 0) and B (1,0,0). Two directions are AO = (1,4,7) and OB = (1,0, 0). Equation is r = S(1, 0, 0) + t (1, 4, 7)

(3) The place 4x - 2y + 5z + 18 = 0 has normal n = (4, -2,5). A line through (6, -2, -2) with direction vector n has equation x = 6 + 4t, y = -2 - 2t, z = -2 + 5t.
Solving this 4 (6 + 4t) - 2 (-2 - 2t) + 5(-2 + 5t) + 18 =0
45t = -36 t =4/5 Point of unit = (14/5, -2/5, -6)

(4) Equation of family of planes passing through the line of intersection of the given places in 3x + 4y - 7z - 2 + k (2x + 3y - 4) = 0. Since the reg. planes contains the origin (0,0,0) substituting. x, y, z = (0,0,0) k = -1/2.
Reg. Equation is 3x + 4y - 7z - 2 - 1/2 (2x + 3y - 4) = 0
1p 4x + 5y - 14z = 0

(5) Distance from the point p (10, 10, 10) to the plane 3x + 2y - z - 14 = 0

$$d = \frac{|3 (10) + 2(10) -1(10) - 14|}{\sqrt{14}} = 26/\sqrt{14}$$

### Tutorial 282 Questions

(1) Two men and two boys wish to cross a river. Their small canoe will carry the weight of only one man or two boys. The minimum number of times the canoe must cross the river to get all four people on the opposite shore is
(A) 5 (B) 6 (C) 7 (D) 8 (E) 9. For Gr. (6 - 8)

(2) A dog and rabbit are 160 metres apart. The dog chases the rabbit. For every 9 metres that the dog runs, the rabbit jumps 7 metres. Find the distance, in metres, that the dog must run in order to overtake the rabbit. (For Gr. 8 & 9)

(3) The number 123456789 and 999 999 999 are multiplied. How many of the digits in the final result are 9' s? (For Gr. 8 & 9)

(4) Four switches each have these positions up, middle and down. How many different ways can the switches be arranged? (Gr. 11 & 12)

(5) For what value of k, if any, will the phone, 3x + ky + z - 6 = 0 and 6x + (1-k) y + 2z - 9 = 0 be paralled? (For Gr. 12)


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at **Scarborough & Stouffville**
**Contact: 647.340.9490 / 647.831.0363**


# புலம்பெயர் வாழ்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

இரு அமைச்சர்களும், சட்டமா அதிபரும் சென்று அங்கு தமது பரப்புரைகளை மேற்கொண்டு, வேறுபட்ட பிராந்திய நாடுகளின் ஆதரவை பெற்று விட்டனர் எனக் கூறினார்கள். ஆனால் புலம்பெயர் வாழ் சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் ஜெனிவாவுக்கு கூட்டத்தொடரின் இரண்டாம் வாரமே வருகை தந்துள்ளனர். அத்துடன் அங்கு முதல் வாரமே பிரசன்னமாயிருந்த சங்கங்களின் பிரதிநிதிகளில் சிலர் சர்வதேசமொழியில் பரப்புரை மேற்கொள்ளும் பக்குவம் அற்றவர்களாக காணப்படுகின்றனர்.

ஒரு சங்கம் ஒரு வெளிநாட்டவருக்கு பெருந்தொகையான பணத்தை செலவழித்து முதல் நாளே ஜெனிவாவிற்கு அனுப்பியிருந்த பொழுதிலும், அவர் ஜெனிவா செயற்பாடுகள் பற்றிய உண்மைக்கு புறம்பான விடயங்களை தனது தொடர்பாளர்களுக்கு தினமும் அனுப்பி வைப்பதை நாம் வாசிக்க கூடியதாக இருந்தது. உதாரணத்திற்கு சிறீலங்கா விடயத்தில் ஒரு விசேட கூட்டத்தை ஐ.நா மனித உரிமை சபை கூட்டமுடியும் என்பது உண்மையான தகவல் அல்ல! காரணம் விசேட கூட்டத்தொடரை போர் நடந்து கொண்டிருக்கும் வேளையிலேயே ஐ. நா மனித உரிமை சபையின் அங்கத்துவ நாடுகளினால் இப்படியான கூட்டத்தை கூட்டுவது வழக்கம். 2009ம் ஆண்டு மே மாதம் 25, 26, 27ம் திகதிகளில் சிறிலங்கா பற்றி கூட்டப்பட்ட விசேட கூட்டம், சிறிலங்காவில் போர் நடைபெறும் பொழுதே மேற்கு நாடுகளினால் அதற்கான அனுமதி ஏற்கெனவே பெறப்பட்ட காரணத்தினால், விசேட கூட்டம் அவ்வேளையில் நடைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 16வது கூட்டத்தொடரிற்கு, பிரித்தானியாவில் லண்டனிலிலுள்ள இரு தமிழ் சங்கங்களினால் பலர் ஜெனிவாவிற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். இம்முறை இவர்களில் ஒருவர் தவிர்ந்த வேறு யாரையும் நாம் அங்கு காண முடியவில்லை! அங்கு சமூகமளித்திருந்திருந்தவரையும் அந்த ஒருவரும் கூட இரு நாட்களின் பின்னர் காண முடியவில்லை. இப்படியாக வேலை திட்டங்களை செய்ய முடியாது. ஐ. நா. வேலை திட்டம் என்பது ஓர் தொடர்ச்சியான வேலை. யாரும் மின்னி மறைவது ஐ. நா. வேலை திட்டங்களுக்கு உகந்தது அல்ல. ஆகையால் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 18வது கூட்டத்தொடரில் சிறீலங்கா மீது ஓர் கண்டன பிரேரணையை நாம் நிறைவேற்ற விரும்பினால் - இந்தியா, மலேசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, போன்று மௌனம் சாதித்த நாடுகள் மட்டும் அல்லாது, மாலைதீவு, சீனா, ர'யா, கியூபா போன்று ஐ. நா அறிக்கைகக்கு எதிரான நாடுகளுடன் புலம் பெயர் வாழ் சங்கங்கள் உடன் தமது பரப்புரை வேலை திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். இவ் அறிக்கையை நாம் தவற விட்டால் வேறு வழிகளில் நாம் சர்வதேச சமுதாயத்தை நாடமுடியாது.

- ச. வி. கிருபாகரன்
நன்றி தமி வின்


**YOGA - MEDITATION CLASSESS**

# யோகா, தியான வகுப்பு

**Scarborough** இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது.
ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்:
**416.273.2200**



# தாரணி சட்ட அலுவலகம்

* சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்
* இலவச ஆரம்ப ஆலோசனை

- *Real Estate Law* வீடு, காணி, வர்த்தக நிலையம் உரிமைச் சட்டம்.
- *Family Law* குடும்பச் சட்டம்.
- *Wills & Estate* இறுதி விருப்பாவணமும், மரணச் சொத்தும் சட்டம்.
- *Power Of Attorney & Affidavit* தத்துவப் பத்திரம் & சத்தியக்கடதாசி
- *Immigration Law* குடிவரவுச்சட்டம்



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister Solicitor & Notarypublic

**GTA Square**
5215 Finch Avenue East ,
#213
Tel: 416.291.4900
Fax: 416.291.4901
Email: contact@tharanilawoffice.com

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# நாம் வாழும் நாடு கனடா




நாம் வாழும் நாடு கனடா. இது வடஅமெரிக்காவில் இருக்கிறது. அமெரிக்கா கனடாவின் பக்கத்து நாடு. எமது நாட்டின் 'கனடா - அமெரிக்கா' எல்லை தான் உலகத்தில் மிக நீளமான காவல் இல்லாத எல்லை!

கனடாவில் மொத்தமாக 13 அரசியல் பகுதிகள் உள்ளன. அவை 10 மாகாணங்களும், 3 பிரதேசங்களும் ஆகும். ஒவ்வொரு அரசியல் பகுதிக்கும் ஒரு தலை நகரம் உண்டு. கனடா முழுவதற்குமான தலைநகரம் ஒட்டாவா. கனடாவின் நாடாளுமன்றம் ஒட்டாவாவில் இருக்கிறது. 13 அரசியல் பகுதிகளும், 5 பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை அட்லாண்டிக் பிராந்தியம், மத்திய கனடா பிராந்தியம், பரந்த புல்வெளி பிராந்தியம், மேற்கு கரையோரம் பிராந்தியம், வடக்கு பிராந்தியம் ஆகும்.

யூலை 01, 1897 இல் கனடா ஒரு நாடானது. அப்போது 4 அரசியல் பகுதிகள் மட்டும் இருந்தன. மற்றைய 9 அரசியல் பகுதிகள் பின்னர் கனடாவுடன் இணைந்தன. கனடாவின் தேசிய கொடியில் ஒரு மேப்பிள் இலை உண்டு. கனடாவின் தேசிய மரம் மேப்பிள் மரம் ஆகும். கனடாவின் தேசிய நிறங்கள் வெள்ளையும், சிவப்பும். எமது நாட்டுக்கு 2 தேசிய மொழிகள் உண்டு. அவை ஆங்கிலமும், பிரஞ்சும் ஆகும்.

கனடா G8ஐ, சேர்ந்த ஒரு நாடு. 1976இல் கனடா G8 இல் சேர்ந்தது. 2010இல் G20, G8 மாநாடுகள் Toronto விலும் Huntsville விலும் நடைபெற்றன. கனடாவின் மிகப்பெரிய 3 நகரங்கள் ரொறொன்ரோ, மொன்றியல், வன்கூவர் ஆகும். கனடாவில் Europe, African, Asian, Aboriginal ஆகியோர் அதிகமாக இருக்கிறார்கள். கனடா ஒரு பல்கலாசார நாடு. கனடா ஒரு மிகவும் நல்ல மற்றையவர்களுக்கு உதவும் நாடு.

**இனி, கனடாவைப் பற்றி சில கேள்வி பதில்கள்.**

1. கேள்வி: கனடாவில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?
பதில். 33,000,000 க்கு மேற்பட்டவர்கள் வாழ்கிறார்கள்.

2. கேள்வி: உலகநாடுகளில் பரப்பளவில் கனடா எத்தனையாவது?
பதில். உலகில் 2வது பெரிய நாடு.

3. கேள்வி: கனடாவின் முதல் பிரதமமந்திரி யார்?
பதில். Sir. John Alexander Mcdonald.

4. கேள்வி. கனடா என்றால் என்ன?
பதில். Iroquis மொழியில், 'Kanata' என்றால் 'ஒரு கிராமம்'

5. கேள்வி: கனடாவின் வரலாற்றில் முக்கியமான மிருகம் எது?
பதில். Beaver.

6. கேள்வி: கனடாவில் எத்தனை நேரவித்தியாசங்கள் உள்ளன?
பதில். 6

7. கேள்வி: உலகில் மிக நீளமான தெரு எங்குள்ளது?
பதில். ஒன்ராறியோவில் உள்ள Younge St. தான் உலகில் மிக நீளமான தெரு.

8. கேள்வி: உலகில் மிக நீளமான பெருந்தெரு (Highway) எங்கு உள்ளது?
பதில். கனடாவில் உள்ள Trans-Canada Highway தான் உலகில் நீளமான பெருந்தெரு.

9. கேள்வி: கனடாவுக்கு, 'அதிகூடிய தங்கப் பதக்கங்கள்' எந்த குளிர்கால ஒலிம்பிக்கில் கிடைத்தன?
பதில். 2010 இல் வன்கூவரில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 14 தங்கப்பதக்கங்கள் கிடைத்தன.

10. கேள்வி: கனடாவை சுற்றி எத்தனை சமுத்திரங்கள் உள்ளன?
பதில். 3. அவையாவன அட்லாண்டிக், பசுவிக், ஆர்ட்டிக் ஆகும்.

11. கேள்வி: கனடாவின் அரசியல் பிரிவுகள் முதலில் எப்படி இருந்தன?
பதில். Upper Canada, Lower Canada என இரண்டாக இருந்தன.

12. கேள்வி: கனடாவின் ஒரு டொலர் நாணயத்திற்கு என்ன பெயர்?
பதில். அதில் Loon பறவை இருப்பதால் 'Loonie' என்ற பெயர் வந்தது.

13. கேள்வி: கனடாவின் 2 தேசிய விளையாட்டுக்கள் எவை?
பதில். Lacrosse, Hockey கனடாவின் தேசிய விளையாட்டுக்கள்.

14. கேள்வி: கனடாவின் இலட்சினையில் உள்ள வசனம் என்ன?
பதில். From Sea to Sea

15. கேள்வி: கனடா நாணயங்களில் காணப்படும் படங்கள் எவை?
பதில். Polar Bear, Loon, Caribou, Blue Nose (கப்பல்), Beaver, Maple Leaves. ($2, $1, 25¢, 10¢, 5¢, 1¢ )



ஞா. ஆரணி
அகவை 12




**RESTAURANT FOR SALE**
**MARKHAM & STOUVILLE**
நல்லநிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் கனேடிய Breakfast உணவகம் ஒன்று விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: **416.737.9167**

**COTTAGE FOR RENT**
**HWY 400 & HWY 12**
2 படுக்கை அறைகள், சமையலறை, Living room சகல வசதிகளுடனும் உள்ள Cottage ஒன்று வாடகைக்கு உள்ளது. *Weekdays or Weekends.*
தொடர்புகளுக்கு: **416.818.5493**



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

மேலும் பக்கங்கள் 24, 25

# யாழ்தேவி தொடர்வண்டிச் சேவை

## மின்வலையில் வந்தவை - 17

யாழ்தேவி என்றதும் அந்நாட்களில் யாழ். குடாநாட்டில் வாழ்ந்தவர்களுக்குப் பல பழைய நினைவுகள் ஞாபகத்துக்கு வரும். மூலை இருக்கை பிடிப்பதற்காகக் காங்கேசன்துறைக்குப் போனவர்களும், வண்டி யாழ்ப்பாணம் நிலைய மேடைக்கு வந்து நிற்பதற்கு முன் பாய்ந்து ஏறிக் கால்களைக் காவுகொடுத்தவர்களும், காயப்பட்டவர்களும் ஏராளம். அநுராதபுரம் வரைக்கும் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டு தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்தவர்கள், அங்கு ஏறிய சிங்களவர்கள் அதட்டியதும் வாரிச்சுருட்டிக் கொண்டு எழும்பியதும் நினைவுக்கு வரும் நித்திய நிகழ்வுகள். பெண்களும் பிள்ளைகளும் இடமில்லாமல் நின்று கொண்டிருந்த போது இவர்கள் அநுராதபுரம்வரை நீட்டி நிமிர்ந்து கிடந்தவர்கள் என்பதை இங்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என நினைக்கிறேன். இருக்கைக்காக ஏற்பட்ட கைகலப்புகளும் வாய்ப்பேச்சுகளும் அநுராதபுரம் வரைக்கும் ஒரே கலகலப்பாக இருக்கும். அதன்பின்னர் சிங்களம் மட்டுமே பெட்டி முழுவதும் கேட்கும். தமிழ் எங்காவது ஒரு மூலையில் மெதுவாகக் கேட்கும். இவை போன்று இன்னோரன்ன கால்சேட்டைகள், கைச்சேட்டைகள், களவுகள், தாலியறுப்புக்கள் எனப்பல நிகழ்வுகளுக்குப் பெயர்போன வண்டி யாழ்தேவி. இரவு வண்டி என்பது யாவருமறிந்த விடயம். இந்த வண்டியின் வரலாற்றுப் பின்னணி பற்றிப் பார்ப்போம்.

இலங்கையில் புகையிரத சேவையைப் பிரித்தானியர் 1864 இல் ஆரம்பித்தனர். யாழ்தேவி தொடர்வண்டிச் சேவை 1956 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் இயந்திரப் பகுதி கனடாவிலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது பேரிரைச்சலுடன் கிராமங்கள், நகர்களுக்கூடாகச் சென்ற ஆரம்பநாட்களில் பலர் வெளியே ஓடிவந்து பார்த்ததையும், தூரத்திலிருந்தவர்கள் பாதைக்கு அண்மையில் வந்து காவலிருந்து பார்த்ததையும் பலர் மறந்திருக்கமாட்டீர்கள். இத்தொடர்வண்டிச் சேவை அப்போது புகையிரதச் சேவைத் திணைக்களப் பொதுமுகாமையாளர் திரு.G.D இறாம்பாலா என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இவர் மருதானையில் அமைந்திருந்த கட்டுப்பாட்டு அறையில் இருந்து சேவைகள் சீராகவும் நேரத்துக்கும் நடைபெறுவதைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். இவருக்கு உறுதுணையாக பிரதம எந்திரிகளான திரு. வைத்திலிங்கமும், திரு. இராஜகோபாலும் இருந்தார்கள். இவர்கள் மூவரும் நாடு முழுவதுமுள்ள புகையிரத சேவைகள் சீருஞ்சிறப்புமாக நடைபெறுவதில் கண்ணுங்கருத்துமாய் இருந்தார்கள். திரு. இறாம்பாலாவின் பிரியாவிடை வைபவத்தில் பேசிய ஒரு நிலைய அதிபர் இவரது நாடித்துடிப்பில் புகையிரதங்களின் நாதம் கேட்குமென்றும், இந்நாட்டு மக்களின் வாழ்வோடு புகையிரதச்சேவை ஒன்றறக் கலந்திருக்க வேண்டுமென்றும் உழைத்து வெற்றி பெற்ற பெருமகன் என்றும் புகழாரஞ் சூட்டினார். இவரது காலத்தில் வடபகுதி மக்களின் நேரத்தை அறிவிக்கும் சாதனமாகப் புகையிரதங்கள் சேவையாற்றின என்றால் மிகையாகாது. வண்டிகளின் சத்தத்திலிருந்து எப்போது எத்தனை மணி என மக்கள் கூறக் கூடிய வகையில் அவை நேரத்திற்கு ஓடின. அந்நாட்களில் விமலதர்மா என்ற நிறுவனம் கொழும்பில் மணிக்கூடுகள் விற்பனையில் பெயர் பெற்ற நிறுவனமாகும். புகையிரத சேவையால் அவர்களுக்கு விற்பனை குறைந்து போயிற்று. இறாம்பாலாவுக்கு முன்னர் அவரது பதவி வகித்தவர் கனகசபை எனப்பட்ட தமிழர். இவரை GMR கனகசபை என்றே அழைத்தனர். அப்போது முதன்மை எந்திரியாக இருந்தவர் S. பஞ்சலிங்கம். இவர் ஓய்வு பெறுவதற்கு முன்னரே பப்புவா நியூகினி அரசாங்கத்தில் அனைத்துலக நாடுகள் நிறுவிய செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளராகப் பதவி பெற்றுச் சென்றார்.




வடமாகாண மக்களின் சமூகப்பொருளாதார நிலைமையில், யாழ்தேவி தொடர்வண்டிச் சேவை பாரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தியது. இலங்கையின் இருபெரும் இனங்களுக்கிடையில் ஒரு சகோதர பிணைப்பையும், ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தியது. இறாம்பாலா இச்சேவையால் வடபகுதி மக்களுக்கு உலக அரங்கில் பல வாய்ப்புக்களை ஏற்படுத்தி வழிகாட்டினார். தொடர்வண்டிகள் ஆரம்பத்தில் காங்கேசன்துறை சீமெந்துதொழிற் சாலைக்கு வேண்டிய முருகைகற்களை கொண்டு வந்தன. பின்னர் இலங்கையின் பிறபகுதிகளுக்குத் தேவையானவற்றை அனுப்பி வைத்தன. தொழில்புரிவோர், அரசியல்வாதிகள், மாணவர், வியாபாரிகள் எனப் பலதரப்பட்டடோர் வடபகுதியிலிருந்து கொழும்புக்கும் பிறநகர்களுக்கும் பெருமளவு சென்று பொருளீட்டினர்.

1977 ஆம் நடந்த தேர்தலின் பின்னால் நாட்டில் இனக்கலவரம் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்தேவியில் கொழும்பு சென்ற தமிழர் யாவரும் அநுராதபுரத்தில் நையப்புடைக்கப்பட்டனர். அப்போது பலருக்குப் பலத்த காயங்களும் ஏற்பட்டன. யாவரும் யாழ்ப்பாணம் திரும்பி வந்தனர். தற்போது யாழ்தேவி சேவை மீளவும் ஆரம்பிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது உற்சாகமளிப்ப தாய் உளது. ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு மேலாக இச்சேவை இல்லாதிருந்ததால் இளஞ்சந்ததியின ருக்குத் தொடர் வண்டியைப்பற்றி எதுவும் தெரியாது. தொடர்வண்டிப் பாதைகள் இருந்த இடமே மறைந்து போய்விட்டன. புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் தனியார் வீடுகளும் கடைகளும், சில கோவில்களும் கட்டப்பட்டுள்ளன. பாதைகளுக்குப் போடப்பட்ட மரப்பலகைகளும் தண்டவாளங்களும் மறைந்து போயின. ஆரம்பத்தில் இலங்கைப் படைவீரர்கள் காவலரண்கள் ஏற்படுத்துவதற்கு அவற்றைப் பயன்படுத்தினர். அதன்பின் படிப்படியாக யாவும் மாயமாய் மறைந்து போயின. இவ்வாறான கதி A9 பாதைக்கும் ஏற்பட்டு மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகினர் என்பது மறக்கமுடியாத பல சம்பவங்களில் ஒன்று.

அக்கால யாழ்தேவியில் பிரயாணஞ் செய்தவர்கள் U.K எட்மண்ட் நிறுவனத்தால் நடத்தப்பட்ட போசனசாலையையும் அதிலிருந்து கிளம்பிய முட்டைப் பொரியல் வாசனையையும் நினைத்தால் இப்பொழுதும் வாயூறும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் தயாரித்தபிற உணவுகள் இக்காலக் KFC, மக்டொனால்ட் நிறுவன உணவுகளைக் காட்டிலுஞ் சிறந்தவை என்பதை அதை ருசித்தவர்கள் ஏற்றுக்கொள்வர். அந்நாட்களில் ஹம்பேகர் பற்றித்தெரியாது. ஆனால் பேகர் எனப்படும் பறங்கியர் பற்றி நன்கு அறிந்திருந்தோம். இயந்திர ஓட்டுனர்களாகவும், தொடர்வண்டி நடத்துனர்களாகவும் பலர் வேலை பார்த்தனர். போசனசாலை நடத்திய நிறுவனம் தயாரித்த 'திரீக்கொயின்ஸ்' பியரை குடித்துவிட்டு வண்டியில் குத்துச் சண்டைகளும் கூக்குரல்களும் போட்டவர்கள் அந்நாட்களில் நிறையவே பிராயாணஞ் செய்தனர்.

அரசாங்கத்திலும் தனியார் நிறுவனங்களிலும் இலங்கையின் பலபாகங்களில் பணியாற்றிய வடபகுதி உத்தியோத்தவர் தமது குடும்பத்தை குலைக்காமல் வடமாகாணத்தில் வாழவிட்டனர். காரணம் அப்போது அங்கிருந்த சிறப்பான கல்வி புகட்டும் பாடசாலைகளில் தமது மக்களைப் படிக்க விடுவதே பிரதான நோக்கம். இதனால் இவர்கள் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போயினர். இதற்கு அப்போதைய தொடர்வண்டிச் சேவை கொடுத்த இலவச பிரயாணச்சீட்டுகள் (வருடத்திற்கு 3 அரசாங்க உத்தியோத்தருக்கு) வாரஇறுதி விசேட சீட்டு, ஆயன பெரும் உதவின. வாரஇறுதியில் குடும்பத்தவரையும் பார்த்து, வீட்டுக்குள் இருந்து உடன் 'கள்' வாங்கிக் குடித்து கலவாய் மீன், நண்டு, இறால் வாங்கிச் சாப்பிட்டு விட்டு மனைவியுடன் உறவாடி விட்டு, ஞாயிறு இரவு வண்டியேறிக் கொழும்பு சென்றோர் ஏராளம். சிலர் கொட்டிலுக்குப் போய் பிளாவில் கள் குடித்த நாட்களையும் மறப்பதற்கில்லை. இதனால் யாழ்தேவி வார இறுதி நாட்களில் பிராயாணிகளால் வழிந்து கொட்டியது என்பது கூறாமலே விளங்கும். தொடர்வண்டித் திணைக்களத்துக்கு இதனால் வருமானமும் நிறைந்து வழிந்தது எனலாம்.

இதுமட்டுமன்றிக் காதலில்தோல்வியுற்றோர் பரீட்சையில் சித்தியடையாதோர், குடும்பச்சச்சரவால் விரக்தியடைந்தோர், மிதமிஞ்சிக் குடித்தோர் யாவருக்கும் உயிர்போக்கும் மருந்தாகவும், யாழ்தேவி பயன்பட்டது. இத்துடன் அடிக்கடி பிராயணஞ்செய்த வாலிபர், கன்னிகளுக்கும் காதலிக்க, யாழ்தேவி உதவியது. இதில் எத்தனை கலியாணத்தில் முடிந்ததென்றால் அது இறைவனுக்குத்தான் வெளிச்சம். கால் நூற்றாண்டுக்குப் பின் ஆரம்பிக்கப்படவுள்ள இச்சேவை புதிய அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கு உதவி புரியுமா? எனப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தனி நாடுகேட்டவரும், ஈழங் கேட்டவரும் அடங்கியும், அடக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் இருக்கும் இத்தருணத்தில் அக்கால ஒற்றுமையையும் சுபீட்சமும் இனி வருமா? என்பது ஒரு பெருங் கேள்விக்குறியாகும். இராஜபக்சாவும் சகோதரர்களும் யாழ்தேவியை ஆரம்பித்து வைத்து உறவுப்பாலத்தை மீண்டும் உருவாக்குவார்களா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போமாக.

பிற்குறிப்பு
மின்வலையில் வந்த ஒரு கட்டுரையை அடிப்படையாக வைத்து எனது பிரயாண அனுபவங்களையும் சேர்த்து எழுதியுள்ளேன். வாசித்துக் கனவுலகில் சஞ்சரிக்கவும்.

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3 பகுதி 20**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

**◊ சி.வி. நாதன் ◊**

“நாங்கள் இருவரும் ஆச்சிவீட்டுக்கு வெளியே வந்தோம். நாங்கள் வெளியாலை வந்ததும் எங்கள் இருவரையும் ஏதோ இழுப்பது போல இருந்தது. நான் பலமாக இன்பனைப் பிடித்துக் கொண்டு திரும்பிப் பாத்தேன். எதுவும் தெரியவில்லை, அந்த இழுப்பில் இருந்து இருவராலும் தப்பமுடியவில்லை. நிலத்தில் இருந்தும் எங்களை மேலே அந்த இழுவையானது இழுத்துக் கொள்ள, இழுப்பின் வழியே நாங்கள் அந்தரத்தில் இழுபட்டுக் கொண்டே போக..” என்றவன் அவ்விடத்தில் கொஞ்ச நேரம் நிறுத்தி, பின்னர் “இனி எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. நாங்கள் இருவருமே சில கணங்களுக்குள் எமது பிரபஞ்சத்தை விட்டு, இன்னொரு பிரபஞ்சத்துக்குள் போய் விட்டோம்”

“என்னது எங்களது பிரபஞ்சம் விட்டு இன்னொரு பிரபஞ்சத்துகுள்ளா” ரேவதி ஆச்சரியத்துடன் கேட்டாள். “ரீவியில் சில விஞ்ஞான நிகழ்ச்சிகளில் பிரபஞ்சங்கள் பற்றி சில விஞ்ஞானிகள் சொல்லியிருக்கிறார்களே! அதுபோல ஒன்றா” என்ற கேள்வியும் ரேவதிக்கு மனதுக்குள் வந்தது. அதனால் வியப்புடன் அவர்களைப் பார்த்தாள். தொலைக்காட்சிகளை அதிகம் பார்க்காத இனியனுக்கு பல்பிரபஞ்சம், இன்னொரு பிரபஞ்சம் என்பதெல்லாம் இப்பதான் கேட்பது போல இருந்தது.

“போச்சுடா” என்றான் இனியன் சிரிப்புடன். “இவங்கள் என்ன சொல்லுறாங்கள் புதுசா!. இதுக்கு அவங்கடை பெயருகளே பரவாயில்லைப் போலையிருக்கு” என முணுமுணுத்தான் இனியன். “உங்களுக்கு சிரிப்பாகத்தான் இருக்கும். உங்களின்ரை இடத்திலை நாங்களும் இருந்தால் சிரிச்சுப் போட்டு, சொன்னவங்களை விசருகள்தான் எண்டு சொல்லுவோம். உங்களின் இல்லையில்லை, எங்களின் பெரும் விஞ்ஞானிகளுக்கே சிரிப்புத்தான் வரும், நம்பமாட்டார்கள், என்ன இன்னொரு பிரபஞ்சமா என ஏளனமாகத்தான் பாப்பார்கள். ஆனால் எல்லாத்தையும் நேரில் பாத்து அனுபவிச்சு வந்த எங்களுக்குத்தான் அந்த உண்மை தெரியும்” இனியனுக்கு என்ன ஏதென்று விளங்கவில்லை. இப்படியும் இருக்குமா என்று எண்ணினான், கொஞ்சம் இளகியவன், “உங்களை ஏதோ இழுத்துக் கொண்டு போன தெண்டால் எப்படி ஆச்சிவீடு எரிந்தது. ஆச்சிவீடு எரிஞ்சதில் இருந்துதானே இன்பனும் நாகராசு மாமாவும் காணாமல் போனார்கள்?”

“ஆச்சிவீடு ஏன் எரிஞ்சது எண்டு எங்களுக்குத் தெரியாது. வேறு யாராவது நெருப்பு வைச்சிருக்கலாம். அல்லது பெரும்பாலும் அந்தப் பிரபஞ்ச விபத்தின் காரணமாகவும் எரிஞ்சிருக்கலாம். “சரி, நீதான் இன்பன் எண்டால், எனது இடது பக்க மார்பில் இருக்கும் ஒப்பரேசன் தழும்பைப் போலை உனக்கும் வலது மார்பில் இருக்க வேணும் எங்கை காட்டு பாப்போம்” என இனியன் கேட்டான். கேட்டவன் தனது சட்டைப் பொத்தான்களைக் கழட்டி, மேற்சட்டையைக் கழட்டி, இடது கையை உயர்த்தி இடது மார்பைக் காட்டினான். அங்கே அந்தத் தழும்பு பெரியதாக, இடது கையின் சற்றுக் கீழாகத் தொடங்கி, இடது பக்க மார்பில் பெரியதாக காணப்பட்டது.

தழும்பினைச் சுட்டிக்காட்டியவன், “நீ என்னோடை ஒட்டிப் பிறந்தவனெண்டால், இதைப் போலை உன்ரை வலது மார்பிலை ஒரு தழும்பு இருக்க வேணும் எங்கை காட்டு பாக்கலாம்?” என்றான் இனியன். சின்னவன் தனது வலது மார்பினைத் தொட்டுக் கொண்டான் இயல்பாக. ஆனாலும் திலகத்தை அணைத்துக் கொண்டுதான் நின்றான். “என்ன பேசாமல் நிக்கிறாய்? நீ சொல்லுறது உண்மையெண்டால் காட்டு பாப்போம்” என்றான் மீண்டும் இனியன். “இப்போது அந்தத் தழும்பைக் காட்டித்தான் என்னை இன்பன் எண்டு நிரூபிக்க வேணும் எண்டு இல்லை. உனது உணர்வுகள் உனக்கு அதைக் கூறவேண்டும், இனியன். அதுமாத்திரமல்ல, என்ரை தாயை, என்னுடன் ஒட்டிப் பிறந்த உன்னைக் காணவேண்டும், கதைக்க வேண்டும் எண்டுதான் ஆசைப்பட்டுக் காண வந்தனான். கண்டிட்டேன், கதைச்சும் போட்டேன். என்னை இன்பன் எண்டு இனம் காட்டுவதில் என்ன பிரயோசம்? சிக்கல்கள்தான் கூட வரும். எனக்கில்ல, உனக்குத்தான்.” என்றான் சின்னவன். இன்னமும் திலகத்தைக் கட்டியணைத்தபடிதான் இருந்தான். திலகம் தவிப்புடன் இருந்தாள். தன்னை அணைத்துக் கொண்டிருப்பவனை அவளால் காணமுடியவில்லை. ஆனாலும் அவன் தன் மகன்தான் என்று அவளது உள்ளம் சொல்லிக் கொண்டிருப்பதை அவள் தெரிந்து கொண்டிருந்தாள். ஆனால் இனியன் இல்லை என்டு சொல்லுறானே! கண்களால் பார்த்துக் கொண்டிருக்கும் இனியன் ஏன் அப்படிச் சொல்லவேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு வரவில்லை. அவளின் தாயுள்ளம், தன்னைக் கட்டியணைத்துக் கொண்டிருப்பவனை மகனென்றே கூறிக் கொண்டிருந்தது.

இனியனுக்கோ கோபம் மீண்டும் தலைக்கேறியது. “உங்கள் ரண்டு பேரையும் ஏதோ பைத்தியங்கள் எண்டு நினைச்சுப் பரிதாபப்பட்டனான். அது எவ்வளவு மடத்தனம் எண்டு இப்பதான் தெரியுது. இப்பவே போலிசைக் கூப்பிடுகிறேன் பார்” என்றவன் கைத்தொலைபேசியை எடுத்து இலக்கங்களை அழுத்தினான்.

(இன்னமும் வரும்)


HOUSE FOR SALE - PRIVATE SALE





MARKHAM AND STEELS
SEASONS DR. (NEAR STAINS ROAD)

PREMIUM / LOT RAVINE WITH BEAUTIFUL VIEW. NEWLY RENOVATED FULLY DETACHED AND CLOSE TO, TTC, SCHOOL, SHOPPING LIVING (OPEN TO ABOVE), DINING, FAMILY WITH FIRE PLACE, F.FAST, KITCHEN, 3 BD RMS+ LIBRARY, MASTER BEDROOM WITH ON SUITE AND JACUZZI FINISHED WALKOUT BASEMENT ALL SEPARATE (RENTED FOR $ 675 + UTILITIES)

OPEN HOUSE ON THE 10TH SUNDAY OF JULY 2011

PLEASE CALL 416-274-3050

# பழங்களின் பலாபலன்கள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### பலாப்பழம்

இதில் இனிப்புச்சுவையும், குளிர்ச்சியை உண்டாக்கும் தன்மையும் சிறந்த மணமும் உண்டு. இதன் சுளையை நாம் சாப்பிடும் போது நன்கு துப்பரவு செய்து விதையை நீக்கிப் உண்ணுகின்றோம். ஆனால் இதனை



நன்கு பழுத்த பின்புதான் சாப்பிடுவது பயன் தரக்கூடியது. அளவுக்கு மிஞ்சி எடுப்பது நன்றன்று. சிலருக்கு வயிற்றுவலி சமிபாடின்மை ஏற்படும். பலாப்பழச்சுளைக-ளை எடுத்து பற்களினால் நன்குமென்று உண்டால் சமிபாட்டில் குறைபாடு ஏற்படாது. இப்பழத்தில் உயிர்ச்சத்து 'A' செறிந்து காணப்படுகின்றது. இதன் பொருட்டு நரம்புகளுக்கு வலுவை ஏற்படுத்துகின்றது. இப்பழம் காலநேரத்திற்கு அமைய பாவிப்போரின் உடல் நிலை நன்மைக-ளையும், தீமைகளையும் ஏற்படுத்தும். வாதம், உடல் உளைவு, நாரிப்பிடிப்பு ஏற்பட்டிருப்போர் இப்பழத்தை உண்பது தவிர்க்கப்பட வேண்டும். கூந்தல் போன்ற பகுதி உண்ணும் போது உள் செல்லாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிலருக்கு உள்சென்றால் 'தொங்கல்' தன்மையுடன் வயிற்றோட்டம் ஏற்படலாம். எனவே தவிர்ப்பது நன்று.

### எலும்மிச்சம்பழம்

இதனை தேசிக்காய்பழம் எனவும் கூறுவார் உளர். சுவையில் புளிப்புத்தன்மையானது. நோயகற்றும் தன்மையுடையது. C உயிர்ச்சத்து நிறைந்து காணப்படுகின்றது. பெரும்பாலும் நாம் இதனை பயன்படுத்துவது அதிகம். இதனை சர்வரோக நிவாரணியாகவும் கூறலாம். இப்பழமானது நோய் வருவதற்கு முன் அதனைத்தடுக்கவும் நோய்வந்தபின் தடுக்கவும் வலுவுள்ளது. இரத்தக்கொதிப்பு வியாதியுள்ளோருக்கு உறுதுணையானது. இப்பழத்தின் சாற்றால் சுரம் இருமல் வரும்போது ஓரளவு தேன் சேர்த்துப் பாவித்தால் நற்பயன்கிடைக்கும். மண்ணீரல் வியாதி, பித்தப்பை சம்மந்தவியாதி போன்றவற்றுக்கு இப்பழச்சாறு பயன்தரவல்லது. இப்பழத்தில் உள்ள காரத்தன்மையால் கிருமித்தொற்றைத் தடுக்க முடியும். கல்சியம் சத்தும் இப்பழத்தில் செறிந்து காணப்படுவதினால் எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவக்கூடியது. மஞ்சள் காமாளை வியாதி உள்ளவர்கள் சாப்பிட்டு வந்தால் குணம் கிடைப்பதைக்காண முடியும். மூலவியாதி யினால் பீடிக்கப்பட்டவர்கள் இப்பழச்சாற்றில் இந்துப்பு என்ற உப்புடன் சேர்த்து பாவித்தால் நற்பயன்கிடைக்கும். இந்துப்பு இங்கு கிடைப்பது கஸ்டம் இலங்கையில் உண்டு. மூலவியாதியினால் இரத்த ஒழுக்கு நிலை இருந்தால் பசுப்பாலுடன் + இச்சாற்றையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நன்மையுண்டு. மேலும் இப்பழத்தில் இரும்புச்சத்து, புரோட்டீன்,



சுண்ணாம்புச்சத்து, பொஸ்பரஸ், காபோவைதரேட் போன்றவையும் காணப்படுகின்றன. எனவே உறுப்புகளுக்குத் தேவையானவற்றைப் பெறக்கூடியதாக காணப்படுகின்றது. நமது நாட்டில் சித்த வைத்தியர்கள் பெரும்பாலும் இரத்தபேதி, கிராணி (வயிற்றுப்போக்கு) என்ற வியாதிகளுக்கு பழச்சாற்றில் தயாரிக்கப்பட்ட மருந்துகளினால் குணப்படுத்தி சுகம் பெற்றோர் பலர்.

உடல் உஸ்ணமான சிறுவர்களுக்கு இப்பழத்தின் சாற்றை வெந்நீரில் கலந்து கொடுத்து வந்தால் உஸ்ணநிலைமாறி வளர்ச்சியடைந்து வருவதை நன்கு அறியமுடியும். ஒரு காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்தநிலையில் இருந்தால் பழச் சாற்றை ஓரளவு விட உடன் இரத்தம் வடிவது நின்று விடும். இரத்தக் குழாய்களில் படிந்த நிலையில் உள்ள அழுக்குகளை இலகுவில் அகற்றக்கூடியது. இதனால் இரத்தமும் தூய்மையடைகின்றது. ஈரல் பகுதியையும் வலுவுள்ளதாக வைத்திருக்க உதவக் கூடியது. இவ்வுறுப்பில் ஏதும் வியாதி தென்பட்டால் இச்சாற்றுடன் + தேன் + தக்காளிப்பழச்சாறு மூன்றையும் சமனாக எடுத்து கலந்து காலை + மாலை வயதிற்கு ஏற்ப 1, 2 மேசை கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் எதுவித நிலைமையையும் மாற்றும் தன்மை உடையது.

அஜீரணம், வயிறு ஊதல், பொருமல் தன்மை, வாயுக்கோளாறு போன்ற நிலையில் வெந்நீருடன் + தேசிப்புளிச்சாறும் கலந்து 1அவுண்ஸ் அளவு குடிக்க கூடிய விரைவில் பயன்பெற்றுவிடுவீர்கள்.

தாகம் தணியாமல் களைப்புநிலை ஏற்படின் தேசிப்புளிச் சாற்றுடன் + வெந்நீர்சேர்த்து ஓரளவு சீனியோ அல்லது கற்கண்டோ அல்லது வெல்லமோ சேர்த்துப் சாப்பிட்டு வந்தால் யாவும் படிந்து காணப்படும். இப்படியான பல ரோகநிலைகளை அதன் வீரியத்தன்மையால் நிவர்த்தி செய்யக் கூடியதாக அமைந்துள்ளது. பழங்களில் நோய்களை வராது காப்பதும் வந்தபின் படியச்செய்வதும் இதன் விசேட தன்மையாகும். வருமுன்காப்போம் என்பதை ஞாபகப்படுத்தலாம் எனக் கருதுகின்றேன்.

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.718.3909*



Ontario Vegetarian Food Bank
**Employment Training & Skills Resource Centre**
**Certified Food Handlers**
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



**Food Handler Training available for:**
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
**CALL TO REGISTER:**
**(416) 744 (HELP) 4357**
**Winter Food and Fund Drive** Started from Nov.15, 2010 Mar.15, 2011
"No One Should Go Hungry"
**HELP US TO HELP THE HELPLESS!**
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

**விற்பனையாகின்றது!**
Dr. **கோபால் அவர்களின்**
எம்மை நாம் பாதுகாப்பது
எப்படி? மருத்துவ கைநூல்.



**கிடைக்கும் இடம்:** விளம்பரம் பத்திரிகை அலுவலகம்
*5215 Finch Ave. E, #201*

**ELECTRICAL WORKS**



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

# எழுதரும் அழகு மிக்க முழுதுக்கும் முதல்வியை தொழுதால் விழுமிய வாழ்வளிப்பாள்

நீலத் திரைக் கடல் நித்தமும் முத்தம் தரும் பக்திவளம் மிக்க சக்தி பீடமாக விளங்குவது நயினாதீவு. வரலாற்றுச் சிறப்பும் வற்றாத அருள்வளமும் உடையது இச்சிறுதீவு. சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் இத்தீவில் சர்ப்பம் தொழுதேற்றி சர்வ வல்லமையுடை சக்திபீடம் அமைந்துள்ளது. கடல் சூழ் நயினையில் காக்கும் தெய்வமாக அருள்மழை பொழிகின்றாள் அம்மை நாக பூசணி. நாகம் பூசனை புரிந்ததால் அம்மை நாகபூசணி ஆயினள். ஆடிவரும் ஓடமதில் நாடி வரும் பக்தர்களுக்கு தேடிடும் சுகம் பெற, வளம் பெற கூடி நின்று அருள் சுரப்பவள் அன்னை. பயத்தினாலும் பக்தியினாலும் பராபரையின் பாதார விந்தங்களை பரவுவதற்கு பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் ஆனி மாதத்து ஆண்டு மகோற்சவத்தில் அன்னையின் ஆலயம் அணைந்து தொழுதும், அழுதும், பாடியும், ஆடியும் கூடிநிற்பர். அன்னையின் அருள் மழையில் நனைந்து மருள் நீங்கி ஆனந்தக் கூத்தாடுவர்.

சர்வமும் சக்திமயம். 'எங்கெங்கும் காணினும் சக்தியடா' என்று பாடினான் பாரதி. உலகங்களும், உயிர்களும் ஊழி முதல்வனும் கூட சக்தியைச் சார்ந்தே தொழிற்படுவனவாகும். 'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்' என்பது திருவருட்பயன். பரம சிவன் கூட பராசக்தி இன்றி செயற்படமுடியாது. பாரொடு விண்ணாய் பரந்த எம்பரற்கு பாகமாய், பாதியாய் உடையவள் சக்தி.



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

சக்தி என்றால் ஆற்றல், வல்லமை, இயக்கம், உந்துதல், செயல்திறன் சாமர்த்தியம் என்று பொருள்படும். சக்தியின் இயல்பிற்கேற்பவே செயல் திறனும் அமைகின்றது. சக்திமிக்கவன் வல்லவன். சக்தி மிக்கநாடு வல்லரசு. சக்திக்கு வல்லவாம்பிகை என்ற பெயரும் உளது. சக்தியை முழுமுதலாகக் கொண்ட சமயம் சாக்தம். சக்தியை வழிபடுவோர் சாக்தர்கள். சக்திவழிபாடு மிகவும் தொன்மையானது. நமது வழிபாட்டிற்குரிய கடவுள் வடிவங்கள் எல்லாவற்றிலும் மிகவும் தொன்மை யானது சக்திவடிவம் தான். சக்திக்குரிய ஆலயங்கள் பலவுண்டு. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் இலங்கையின் சக்திபீடமாக இலங்குவது நயினை நாகபூசணி அம்மை ஆலயம். புவனேஸ்வரி பீடம் என இது அழைக்கப்படுகின்றது. ஏக சக்தியை இவ்வாறு பாடியுள்ளார் சுந்தானந்த பாரதியார்.

ஏக சக்தி இன்ப வரம் தரும்  
யோக சக்தி உயிர்க்குயிராகிய  
போக சக்தி புனித பராசக்தி  
நாக பூசணி நாரணி அம்மையே!

அல்லலை நீக்கி அருள் பாலிக்க வேண்டும் என்று பராசக்தியிடம் விண்ணப்பம் செய்கின்றார் பக்தர் ஒருவர்.  
தெய்வீகமே அன்பருளச் சீர்கோயில் வாழ்விளக்கே  
பொய் தவிர்ந்த மெய்ஞ்ஞானப் பூரணமே - செய் சிறந்த  
நல்ல நயினைப் பதியில் நாகராசேஸ்வரியே  
அல்லலை நீக்கியருள்



நா. க. சிவராமலிங்கம்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall)

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi, English, Telugu & Other indian languages

# இராஜ பூக்கள் - கலை விழா 2011

சிவத்தமிழ்வாணி திருமதி கோதை அமுதனின் 'இராஜ பூக்கள்' தமிழ்க்கலைக்கல்லூரி தனது 13 ஆவது ஆண்டு கலைவிழாவை யூன் 18, 2011 ஆம் நாள் கனடா கந்தசாமி கோவில் அரங்கில் கொண்டாடியது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக தமிழ்நாட்டு இராமகிருஷ்ண மடம் சுவாமினி தியானந்த சரஸ்வதி அம்மையார் வந்திருந்தார். சிறப்பு விருந்தினராக Toronto Collegiate Institute அதிபர் சிவாஜி (திரு. சிவம் மகாலிங்கம்) அவர்கள் அவரது பாரியார் சகிதம் வந்திருந்தார்.



கலைவிழா மாலை 5.30 மணியளவில் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் திருமதி. விஜய குமாரகுருக்கள், திரு ஜெயானந்தசர்மா தியாகராஜாஐயர் அவர்கள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து தமிழில் கனேடிய தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் அமைதி வணக்கம் நடைபெற்றன. பத்மினி சசிகுமார் தனது வரவேற்புரையில் பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்கள், சபையோர்களையும் வரவேற்றார். இவ்விழாவை பிரியா சிவானந்தன் மற்றும் சுமங்களா சண்முகநாதன் தொகுத்து வழங்கினார்கள்.

கலைநிகழ்ச்சிகள் ஐடிலா யோகேஸ்வரனின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமானது. அதைதொடர்ந்து பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் நாடகம் நடைபெற்றது. நாடகத்தை தொடர்ந்து மூன்று வயதுச்சிறுமி கவிநயா அருளானந்தன் திருக்குறளை மனனம் செய்து ஒப்புவித்தார். அடுத்து திரு. ஜெயானந்தசர்மா வரசித்தி விநாயகர் ஆலயத்தின் சார்பில் ஆசி உரை வழங்கினார். அதில் அவர் திருமதி. கோதை அமுதன் தனது இராஜபூக்கள் தமிழ் கலைக்கல்லூரியில் மூன்றுவயது தொடக்கம் பதினெட்டு வயது வரை சிறுவர்களுக்கு தமிழ் கற்பிப்பது மட்டும் அல்லாமல் அவர் ரொறொன்ரோவிலுள்ள மற்றைய கல்லூரிகளிலும் தமிழ் படிப்பிக்கின்றார் என்றார். ஆசி உரையைத் தொடர்ந்து பத்து சிறுவர்கள் தங்களது வாழ்க்கையை 'எங்கள் வாழ்க்கை' என்ற தலைப்பில் காலையில் எழும்புவது முதல் இரவு படுப்பது வரை நடைபெறுவதை அபிநயத்துடன் பாடினார்கள். தொடர்ந்து நடைபெற்ற முத்தமிழ் குவியலான 'தமிழர் வாழ்வெல்லாம் இசையே' என்ற நாடகத்தில் அரச அவையில் தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து மரணம் வரை இசை எவ்வாறு இரண்டறக் கலந்துள்ளது என திரையிசை பாடல்களுடன் விபரிக்கப்பட்டது. இதில் அரசனாக வந்த திவ்யா பிரபாகரனின் நடிப்பும் பேச்சும் வழமை போல மிகவும் சிறப்பாக இருந்தது. கன்னிப்பெண்ணாகி, காதலியாகி பின்னர் மணப்பெண்ணாக வந்த சகானா ஞானசேகரத்தின் உடைய நடனம் மிகவும் நன்றாக இருந்தது. 'ஆத்திசூடி, திருக்குறள் மற்றும் கொன்றைவேந்தனை நான்கு சிறுவர்கள் கூறினார்கள்.

சிறப்பு விருந்தினர் சிவாஜி அவர்களது உரை அடுத்து நடை-பெற்றது. அதில் அவர் தமிழர் வாழ்வெல்லாம் இசையே என்ற நிகழ்வு மிகவும் அருமையாக இருந்தது. தன்னை மெய்சிலிர்க்க வைத்தது என்றார். அந்த நிகழ்வில் வந்த திரையிசை பாடல் ஒன்றின் வரியான 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே' என்பதை சுட்டிக்காட்டிய சிவாஜி அவர்கள் குழந்தைகள் எப்படி வளர்கிறார்கள் என்பது நாம் எவ்வாறு வழிகாட்டுகிறோம் என்பதில் தங்கியுள்ளது என்றார். அவரது உரையை தொடர்ந்து அவர்களது Toronto Collegiate Institute இல் 'தமிழ்' திருமதி கோதை அமுதனிடம் பயின்று சிறப்பு சித்தி பெற்ற மாணவர்களுக்கு சிவாஜி அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார்.

கலை நிகழ்ச்சிகளில் தொடர்ந்து 'சிங்கமும் முயலும்' என்ற கதையுடன் கூடிய நடிப்பும், திரையிசை நடனங்கள், பாரதியாரின் பாடல்கள் நடைபெற்றன. திருமதி. கோதை அமுதனிடம் எட்டு ஆண்டுகளாக தமிழ் பயிலும் தாட்சாயினி மணிவாசகன் உடைய தாயார் உரை நிகழ்த்தும் போது தனது மகள் தமிழ்மொழியை ஆரம்பத்திலிருந்தே கோதை அமுதனிடம் பழகி தற்போது தமிழில் ஒரு சிறந்த பேச்சாளராகவும் பாடகியாகவும் உள்ளார் என்றார்.

TVI தொலைக்காட்சியில் 'மலரும் மொட்டுக்கள்' நிகழ்ச்சி தயாரிப்பாளர் திருமதி. வாசுகி நகுலராஜா நடுவராக இருக்க 12 மாணவர்கள் பங்குபற்றிய விவாத அரங்கு அடுத்ததாக நடைபெற்றது. இவ்விவாதம் 'பெற்றோர்களா அல்லது பிள்ளைகளா கனடாவில் அதிகம் பிழைவிடுகிறார்கள்' என்ற தலைப்பில் இடம்பெற்றது. பிள்ளைகள் தான் அதிகம் பிழைவிடுகிறார்கள் என்று பவித்திரா, அபிஷா, மதுஷா, தாரணி, கம்சிகா மற்றும் தீபிகா வாதிட்டார்கள். இவர்கள் பிள்ளைகள் விடும் பிழைகளாக பின்வருவனவற்றை கூறினார்கள்.

பெற்றோர் பாட வகுப்புக்களுக்கு என்று பிள்ளைகளை கூட்டிக் கொண்டு போய்விட அவர்கள் அங்கிருந்து காதலருடன் புறப்பட்டு பல இடங்கள் சுற்றிவிட்டு பெற்றோர் கூட்டிக்கொண்டு போக சற்று முன்னர் அவ்விடத்திற்கு திரும்ப வந்து நிற்கிறார்கள். ஆண்பிள்ளைகள் 1820 இல் அமெரிக்க கலாசாரத்தில் கொள்ளையடிக்கச் சென்ற குழுக்கள் (Gangsters) போல உடையணிந்து திரிவதை கலாசாரம் எனக் கொண்டுள்ளார்கள். தமிழ் பிள்ளைகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் என்று இரட்டைக் கலாச்சாரத்தைக் பின்பற்றுவது மட்டுமல்லாமல் அக்கலாசாரத்திலுள்ள நன்மையானவற்றை எடுப்பதும் இல்லை என்று, ஆங்கிலேய கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தவறாது தேவாலயம் சென்று அமைதியாக வழிபடுவதையும் தமிழ் பிள்ளைகள் கோவில் செல்வது குறைவு அவ்வாறு சென்றாலும் மற்றையவர்களுடைய உடைகளைப் பற்றி விமர்சிப்பதும் மற்றும் தேவையற்ற கதைகள் கதைப்பதும் போன்றவற்றையே செய்கிறார்கள் என்ற உதாரணம் மூலம் எடுத்துக் காட்டினார். வளர்ந்த தமிழ் பிள்ளைகள் பெற்றோரை மதிப்பது இல்லை, பெற்றோரிற்கு சுகவீனம் எனில் வீட்டில் நின்று உதவி செய்யாமல் அன்று தனது பரீட்சைக்கு படிக்க வேண்டும் எனக்கூறி சென்று நண்பர்களுடன் வீண் பொழுது போக்குகிறார்கள். அல்லது அவர்கள் உழைத்தாலும் அதனை வீண் செலவு செய்கிறார்கள்.

மேலும் பிள்ளைகள் தமது காலத்தை செல்போனிலும் Text Messages அனுப்புவதி லும் வீணாக்குகிறார்கள். பெற்றோர் பிள்ளைகளின் நன்மைக்காக வகுக்கும் விதிகளை பின்பற்றாமல் தவறான வழியில் சென்று பின்னாளில் கவலைப்படுகிறார்கள். பெற்றோர் பிள்ளைகளை நம்பி நடக்கும் போது பிள்ளைகள் பாடசாலை முடிவடைந்ததும் வீடு வராமல் கூடாத நண்பர்களுடன் சேர்ந்து மது, போதைவஸ்து பழக்கங்களுக்கு ஆளாகிறார்கள்.

பெற்றோர்கள் தான் பிழைவிடுகிறார்கள் என்று ரம்யா, டிலக்ஷன், சஞ்ஜீவ், நிவேதன், டக்ஷன் மற்றும் கோகுலன் வாதிட்டார்கள். இவர்கள் பெற்றோர் விடும் பிழைகளாக பின்வருவனவற்றை கூறினார்கள். பெற்றோர் பிள்ளைகளுக்கு சாதி வேற்றுமையை சொல்லிக் கொடுக்கிறார் கள். பிள்ளைகளின் நண்பர்களை கறுவல், சப்பட்டை மற்றும் இலங்கையில் பின்பற்றப்பட்ட சாதிமுறைகளை கூறி பெற்றோரே தங்களுக்கு தகுந்தவர்களாக தெரிவு செய்ய முற்படுகிறார்கள். தொடர்ந்து படிக்கும்படி வற்புறுத்துகிறார்கள். விளையாட்டு மற்றும் பொழுது போக்கில் நேரம் செலவழிக்க விடுவதில்லை. மேலதிக பாடசாலை வேலை செய்து பிந்தி வீட்டிற்கு வந்தால் சந்தேக கண்கொண்டு பார்க்கிறார்கள். பெற்றோர் பிள்ளைகளுடன் கதைப்பதற்கு போதிய நேரம் ஒதுக்கிறார்கள் இல்லை. பெற்றோரிற்கிடையில் ஏற்படும் சண்டைச்சச்சரவால் பிள்ளைகள் விரக்தி அடைகிறார்கள். பெற்றோர் 2 அல்லது 3 வேலை செய்வதால் பிள்ளைகளின் பிரச்சினைகளை அமைதியாக இருந்து கேட்பதில்லை. பெற்றோர் எப்பொழுதும் Report Card ஐ மற்றைய மாணவர்களுடன் ஒப்பிட்டு பார்த்து குறை கூறுகின்றார்கள். விவாத இறுதியில் நடுவர் இருபகுதியும் விடும்பிழைகளை சுட்டிக்காட்டி விவாதத்தை நிறைவு செய்தார்.

பிரதம விருந்தினர் சுவாமினி தியானந்த சரஸ்வதி அம்மையார் தமது பிரதம விருந்தினர் உரையில் எவ்வாறு உபகரணங்களை பாவிப்பதற்கு Catalogue இருக்கிறதோ அதேபோல் எமது மனம் உடம்பு என்பவற்றை பாவிப்பதற்கும் இறைவனால் வழங்கப்பட்ட வேதங்கள் மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றை உபயோகிக்க வேண்டும் என்றார். Catalogue இன்படி பாவிக்கப்படாத உபகரணம் எவ்வாறு விரைவில் பழுதடைகிறதோ அதேபோல் வேதங்கள் சொன்னபடி பயன்படுத்தப்படாத உடம்பும், மனமும் விரைவில் வியாதிகள் வந்து பழுதடைந்து விடும் என்றார். திருக்குறள் எமது வேதங்கள் சொன்னவற்றை அழகாக இலகுநடையில் சுருக்கமாக கூறியுள்ளது. திருக்குறள் புத்தகம் அதன் உரை தமிழிலும் ஆங்கிலத்துடனும் ஒவ்வொருவருடைய வீட்டிலும் கட்டாயம் இருக்க வேண்டும். பெற்றோர்கள்



பிள்ளைகளுடன் திருக்குறள் பற்றி ஒவ்வொரு வாரமும் ஒருநாளாவது கதைக்க வேண்டும். இதனால் பெற்றோரும் பிள்ளைகளும் நல்ல பழக்கம் பழகலாம். காலையில் பெற்றோரும் பிள்ளைகளுடன் சேர்ந்து கடவுளை வணங்க வேண்டும்.
சற்றுமுன்னர் நடைபெற்ற விவாதத்தில் பெற்றோர்தான் முழுப் பிழையும் விடுகிறார்கள் என்பது தான் எனது தீர்ப்பு. பிள்ளைகள் Gangsters, Drug addicts மற்றும் Alcoholics ஆகவருவதற்கு காரணம் அவர்களுக்கு பெற்றோருடைய அன்பு கிடைக்காததே. உதாரணம் வேண்டுமா? மகாபாரதத்தை பாருங்கள். துரியோதனனையும் அவனது நூறு சகோதரர்களையும் பாருங்கள். தகப்பனிற்கு பார்வையில்லை, தாயாரோ தனது கண்களைக் கட்டிக்கொண்டு விட்டார். பிள்ளைகளை கண்களால் பார்த்து அன்பை காட்டாமல் அந்த நூறு பிள்ளைகளும் கெட்டவர்களாக மாறி விட்டார்கள் என்றார் சுவாமி



அருந்ததி ஞா.

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

# இராஜ...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

தியானந்த சரஸ்வதி அம்மையார். அவர் மேலும் தெரிவிக்கையில் தான் ஆவணிமாதம் முடியும்வரை கனடாவில் இருக்கப்போவதாகவும் தனது அறிவுரையை (ஆங்கிலம் அல்லது தமிழில்) கேட்க விரும்புகிறவர்கள் திருமதி. கோதை அமுதனுடன் தொடர்புகொள்வதன் மூலம் ஒழுங்கு செய்யலாம் என்றார்.

பிரதம விருந்தினர் உரையை தொடர்ந்து நடனம், திரையிசை நடனங்களும் அவற்றை தொடர்ந்து யாழ்ப்பாணத்தை கடைசியாக ஆண்ட சங்கிலி மன்னன் உடைய கதை வரலாற்று நாடகமாக நடைபெற்றது. இந்நாடகத்தில் சங்கிலி மன்னனாக நடித்த தனுஷியா ஜெயகாந்தன்



சங்கிலி மன்னனாக மாறி உணர்ச்சி பூர்வமாக பேசியும் நடித்தார். இந்நாடகத்தை தொடர்ந்து திருமதி கோதை அமுதன் 'இராஜபூக்கள்' தமிழ்க்கலைக் கல்லூரியின் 13வது ஆண்டு கலைவிழா சிறப்பாக நடைபெற உதவிய எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார். இதை தொடர்ந்து மாணவர்களுக்கு பரிசளிப்பு நடைபெ-ற்ற துடன் விழா இரவு 11 மணியளவில் நிறைவு பெற்றது.

விழா நிகழ்ச்சிகள் யாவும் தரமாக இருந்தன. பெண்பிள்ளைகளின் மனனம் செய்யும் திறனும், பேச்சுவன்மையும், நடிப்பும் பங்குபற்றிய ஆண்பிள்ளைகளுடன் ஒப்பிடும் போது மிகவும் திறமையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று வயது பெண்பிள்ளை மனனம் செய்து திருக்குறளை ஒப்புவித்த அளவிற்கு கொன்றை வேந்தன் ஒப்புவிக்கப்படவில்லை. விவாதத்தில் கலந்துகொண்ட பெண்கள் பேசிய தமிழிற்கு முன்னால் ஆண்களால் பத்திரத்தை பார்த்தும்கூட தமிழில் நன்றாக பேசமுடியவில்லை. இரண்டு முக்கிய ஆண் அரசர் வேடங்களுக்கும் (தமிழர் வாழ்வெல்லாம் இசையே, சங்கிலி மன்னன்) ஆண்கள் தெரிவு செய்யப்படாமையும், தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் மிகவும் திறமையாக இந்தப்பாத்திரங்களை ஏற்று நடித்ததும் இவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு. இனிவரும் நிகழ்வுகளில் ஆண்கள் தங்களாலும் தமிழில் திறம்பட பேச, நடிக்க முடியும் என எடுத்துக்காட்டுவார்கள் என நம்புவோம்.

# மனப்புற்று...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

றாமையும் ஒன்றிணையும் போது இந்தத் துரோக மனப்பான்மை உருவாகின்ற தேயன்றி உருவாக்கப்படுவதில்லை. இதனால்தான் இந்தக் கொடிய குணம், அசிங்கமான குணம் என்ன வேகத்தில் எந்த அளவில் வளர்ந்து வருகின்றது என்பதை அதன் உரிமையாளனாகிய துரோகியால் கூட உணர முடிவதில்லை. ஆனால் ஒரு கட்டத்தில் அது எல்லை மீறி வெளிப்படும்போது அல்லது மற்றவரால் உணரப்படும்போது அதிகளவு பாதிப்பை அதனால் பாதிப்படைபவருக்கு உருவாக்கி விடுகிறது. அதுமட்டுமன்றி அந்தத் துரோகிக்கும் தான் எந்த அளவு தூரம் பாதிப்பை உண்டாக்கி விட்டேன் என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்தத் துரோக மனப்பாங்கு அதன் உரிமையாளரால் ஒரு நிலை வரை மிகச் சாதுர்யமாகக் கையாளப்படு வதையும் நாம் கவனித்தல் வேண்டும். அதாவது இந்தச் சுயநலமும் பொறாமை யும் பொதுநலமும் பொறுமையும் எனும் போர்வையால் மறைக்கப்பட்டிருப்பதை பாதிப்புள்ளாகுபவர் குறிப்பிட்ட நிலை வரை இனங்கண்டு கொள்வ தில்லை. ஆனால் அது உணரப்படும் போது பெரும்பாலானவர்களால் உடனடியாக அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஏனெனில் நம்பிக்கைத் துரோகம் என்பது நேருக்கு நேர் மோதுவதைத் தவிர்த்து நண்பன் அல்லது நலன் விரும்பி என்ற பாணியில் உறவை அல்லது நட்பை நீடித்துக் கொள்வதாகும். இந்த வகையான உறவு அல்லது நட்புக்காலம் நீண்டு போகப்போக பறிக்கப்படும் குழியின் ஆழமும் அதிகமாக இருக்கும். ஆனால் அந்தக்குழியுள் விழுபவர் துரோகம் இழைத்தவர் மட்டுமே. ஏனெனில் மனித இயல்பிலிருந்து மாறும் ஒருவரது சுயதண்டனை என்பது தவிர்க்கமுடியாததும் மற்றவர்களால் அளவிடமுடியாததுமாகும்.

ஆம் வாசகர்களே!

மனப்புற்றுநோயாகிய நம்பிக்கைத் துரோகம் என்பது மனித விலங்கைத் தவிர வேறு எந்த விலங்கினத்திலும் இருப்பதில்லை. இந்த மன இயல்பு என்பது மிகவும் அசிங்கமானதும் மானிடத்துக்குச் சாப்கேடானதுமான இயல்பு. இதன் விளைவு இதை விதைக் கின்ற ஒவ்வொருவரையும் அடியோடு அறுத்துவிடுவது தான். எனவே மனிதன், மனிதத்துவம் என்பது இந்த மனப்புற்றுநோயற்ற உறவும் நட்பும்தான் என்பதை நாம் இதயத்தால் ஏற்பதும் நடைமுறைப்படுத்துவதும் ஆகும்.


Summer Tutoring



(Grade 1-12, College, & University)

* English * French *Math * Science * Engineering *

Starting from July 4th

❖ Prepares the students for next grade they enter in September

❖ Systematic Plan for Each Student to Help Build Strong Base in Core Subject Areas

❖ Strictly Follows Ontario Curriculum

❖ Ontario School Teachers, College Professors, and Graduate Students take Classes

GTA Academy

Ph: (647) 705 0725

Register Early to get Our Special Summer Rates

*Serving the GTA over 10 Years -Scarborough, North York, Mississauga, and Brampton*

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது










Niru Niru
நிரு பிராண்ட்

# நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

# நுண்ணுலகியல் 13

சென்ற தடவையில் மாக்ஸ்வெலின் சமன்பாடுகள் பற்றியும், அதனைத் தொடர்ந்து மின்காந்த அலைகள் செல்வதற்கு நியூட்டன் கூறியிருந்த ஈதரையும் மாக்ஸ்வெல் கூறிய தைப் பார்த்தோம். மாக்ஸ்வெல் இன்னமும் பல விடயங்களை மின்காந்த அலைகளின் ஊடாகத் தெளிவுபடுத்தினார். நாம் காணும் சாதாரண வெள்ளொளி ஏழு நிறங்களினால் ஆனவை என்பதனை நியூட்டன் காட்டியது உங்களுக்குத் தெரியும். அந்த ஏழு நிறங்களின் வித்தியாசமான தன்மைகளுக்கு அவற்றின் வித்தியாசமான அதிர்வெண்களே காரணம் என 'யங்' கூறினார். அன்று ஐகனும் இப்படித்தான் கூறியிருந்ததை நினைவு படுத்துங்கள். அதிர்வெண் கூடிய அலையாக ஊதாவும் அதிர்வெண் குறைந்த அலையாக சிவப்பும் இருப்பதைக் காட்டினார். இவற்றின் அதிர்வெண்கள் (ஒரு செக்கனில் நிகழும் அதிர்வுகளின் எண்ணிக்கை) நூறு பில்லியன்கள் வரிசையில் காணப்படுகின்றன. அலைநீளங்கள் அதிர்வெண்களுக்கு மறுதலையான எண்ணிக்கை வரியைக் கொண்டவையாக இருக்கின்றன. அதன்படி, செந்நிறக் கதிருக்கு கூடிய அலை நீளமும், ஊதாக் கதிருக்குக் குறைந்த அலை நீளமும் இருக்கும். மின்காந்த அலைகள் என்பது ஒரு பெரிய நீண்ட அலை வரிசை எனக் கூறிய மாக்ஸ்வெல் நமது கண்களுக்குப் புலப்படும் சாதாரண ஒளியானது அந்த அலை வரிசை யில் மிகவும் சிறிய ஒரு பகுதியினுள் வருகின்றது என்றார். அதிர்வெண் வரிசை யில் இறங்கு வரிசைப்படி இந்த மின்காந்த அலைகளை ஒழுங்குபடுத்திப் பார்த்தால், சாதாரண ஒளியில் உள்ள நிறங்களின் அதிர்வெண்கள் ஒரு சிறிய இடத்தையே பிடித்துக் கொள்ளும். அதிர்வெண் வரிசை




யில் ஊதா நிறத்திற்கு மேலாகவும், சென்னிறத்திற்குக் கீழாகவும் அதிர்வெண்களைக் கொண்ட மின்காந்த வலைகள் இருக்கின்றன என்றார் மாக்ஸ்வெல் எந்த மின்காந்த அலையாக இருந்தாலும் அதன் கதி (வேகம்) செக்கனுக்கு 300,000 கிலோ மீற்றர்கள்தான். சாதாரண ஒளியின் அதிர்வெண் வரிசையின் கீழாகவும் (அதாவது செந்நிறக்கதிருக்குக் கீழாகவும்), மேலாகவும் (அதாவது ஊதா நிறத்திற்கு மேலாகவும்) மின்காந்தவலைகள் இருக்கின்றன என்பதையும் மாக்ஸ்வெல் கூறினார். செந்நிறத்தின் கீழாக செந்நிறக் கீழ் கதிர்களும் தொடர்ந்து மைக்கிரே அலைகள் என்கிற வெப்பக்கதிர்களும், அதன்கீழாக வானெலியின் மின்காந்த அலைகளும் அறியப்பட்டன. இன்று நாம் கேட்கும் வானொலியின் சேவைகள் இந்த வானொலி அலைகளாகவே, மின்காந்த அலைகளாகவே தூர இடங்களில் இருந்து வருகின்றன. ஆனால் 'காற்றலைகளில் மிதந்து வரும்..' என்ற அடைமொழியினை சில அறிவிப்பாளர்கள் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். உண்மையில் ஒலிபரப்பு நிலையங்களில் இருந்து காற்றில் மிதந்து வருவதில்லை. அலை மின்காந்த அலைகளாகவே எடுத்து வரப்படுகின்றன. அவற்றை எமது காதுகள் உணர முடியாது. மின்காந்த அலைகளாக வரும் வானொலி அலைகளை ரேடியோக்கள் உள்வாங்கி பின்னர் ஒலியலைகளாக வெளிவிடுகின்றன. ரேடியோவில் இருந்து வரும் ஒலியே காற்றில் ஒலியலையாக வந்து எங்களுக்கு கேட்கின்றது. அதேபோலவே ஊதாக்கதிரின் மேலாக (அதிர்வெண் வரிசையில்) புறவூதாக் கதிர்களும் எக்ஸ் கதிர்களும் முடிவில் காமாக் கதிர்களும் இனம் காணப்பட்டன. இந்த எக்ஸ் கதிர்களும், புறவூதாக் கதிர்களும் மற்றும் காமாக் கதிர்களும் மிகவும் சக்தி வாய்ந்தவை. அதிக அளவில் எமது உடலின் ஊடாகக் கடத்தப் பட்டால் ஊறு விளைவிக்கக் கூடிய அளவிற்குச் சக்தி வாய்ந்தவை.

இந்த இடத்தில் மாக்ஸ்வெல் பற்றிய இன்னொரு தகவல். இவர் சிறந்த ஒரு கவிஞர். தன்காலத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான விஞ்ஞானக் கவிதைகளை எழுதியிருந்தாராம். இவரது கவிதைகள்தான் இவரது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பலரிடம் எடுத்துச் சென்றது என்கின்றார்கள். (எமது கவிஞர்கள் விஞ்ஞானம் பற்றி அதிகம் சிந்திப்பதில்லையோ, தெரியவில்லை) இவை இவ்விதம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் அதே 19ம் நூற்றாண்டில் பொருட்கள் பற்றிய புதுவிளக்கமும் வந்தது. அதனைக் கொண்டு வந்தவர் ஒரு இரசாயனவியலாளராகிய யோன் டால்ரன். மிகவும் பரபரப்பாக அந்நாட்களில் பேசப்பட்ட அதனை அடுத்த தடவையில் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 92



# அபாயம் வரும்போது அபயம்!

வாழ்க்கையில் தொலைந்து தடுமாறித் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றும் தெய்வீகத் தொண்டர் குழுவினருடன் இணைந்து பயமின்றி நம்பிக்கையுடன் இப்போ நானும் செயல்படுகிறேன்.

அபாயம்! அபாயம்! அபாயம்! தொலைந்தவற்றை தேடிக்கண்டுபிடித்து காப்பாற்றும் நேரம் இது. எங்கே தொலைந்துவிட்டது உனது சுயம்? உனது சுயத்தை இரகசியமாகத் திட்டமிட்டு நாச-மாக்கும் அந்த அச்சம், சந்தேகம் போன்றவற்றுடன் சேர்ந்திருக்கும் சகல-தையும் சலித்துத் தேடிக் கண்டுபிடிக்கும் நேரம் இப்போ வந்தே விட்டது. நீ கைநழுவவிட்ட உனது வாழ்வின் குறிக்கோளை மீண்டும் எட்டிப்பிடிக்கும் நேரம் இது. இழந்த உனது தன்னம்பிக்கையை நீ மீண்டும் பெற்றிட இதுதான் நல்ல தருணம். உனது பக்தியைப் பெருக்கிடும் நேரமும் இது.

அபாயம்! அபாயம்! அபாயம்! உனக்குள் குடிகொண்டிருக்கும் எதிரிகளை அழிக்க உனக்கு உதவிட மன்னிப்பு, நம்பிக்கை எனும் ஊசி மருந்துகளுடன், தெய்வீகக் காப்பாற்றும் குழு இதோ வந்துவிட்டது. உனது சுயமதிப்பைக் குறைத்திடும் இந்த எதிரிகளை நீ வென்றதும் உனது தெய்வீகத்தன்மையை மீண்டும் நீ பெறுவாய். அதோ அந்த மூலையில் இருக்கும் எதிரி அச்சம் இல்லையா? எங்கே? ஒரு உறவு முறிவினடியில் பயம் பதுங்கியிருக்கிறது. அந்த எதிரி வெறுப்பா? எங்கே? அதோ அங்கேதான்! உனக்கெதிராக என்ன செய்யப்பட்டது, எப்படிச் செய்யப்பட்டது என்ற ஞாபகத்துடன் அது இணைந்திருக்கிறது. மன்னிப்பு என்ற மாபெருங் கருணையால்



அந்த ஞாபகங்களைத் தவிடுபொடியாக்கி விடு. குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் எதிரியாகிய மன வருத்தத்தைப் பார்க்கிறாயா? எங்கே? அங்கேதான். பிறருடன் உன்னை ஒப்பிட்டுக் கொண்டிருக்கும் எதிரிக்குப் பக்கத்தில் சும்மா வழிந்து கொண்டிருப்பதற்குக் கீழே என்ன ஒளிந்திருக்கிறது? பிறரின் நன்மதிப்பைப் பெற்றிடும் அவாவா! உன் முறியடிப்புச் சேனைகளைத் திரட்டு. சுய அங்கீகரிப்பும் சுய அன்பும் உனக்கு அவசரமாகத் தேவைப்படுகிறன.

அபாயம்! அபாயம்! அபாயம்! உனது சுயமதிப்பு எங்கே? தோல்வியின் தாக்கத்திலிருந்து அதைப் பிரித்து எடுத்துக்கொள். உனது சுயமரியாதை எங்கே. நான் சக்தியற்றவன், தாக்கப்பட்டவன் என்ற சுய பரிதாப உணர்விலிருந்து அதைப் பிரித்துக் கைப்பற்றிக்கொள். உனது வாழ்வின் குறிக்கோளைத் தேடிக் கண்டுபிடி, நம்பிக்கையின்மையிலிருந்து அதை மீண்டும் பெற்றுக்கொள். உன் வாழ்வின் முன்னேற்றம் உனது கைகளில்தான் தங்கியிருக்கிறது, மறக்காதே! உனக்கு என்னதான் நடந்து முடிந்தாலும் நீ ஒருபோதும் தோல்வி அடையமாட்டாய் என்ற நம்பிக்கையை மீட்டெடுத்துக் கொள். உனது சிந்தனைக்குள் உனது சுயத்தையும் நம்பிக்கையையும் அழிக்கும் எதிரிகள் குடிகொண்டிருப்பதை இன்று வரை நீ உணராது இருந்திருக்கலாம். இன்று உனக்குள் புகுந்து சுய அலசல் செய்து உன் எதிரிகளை முதல் அடையாளங்கண்டு கொள். உனது எதிரிகளுக்கு ஏற்ற தண்டனை என்ன என்பதைத் தீர்மானித்து அவர்களைத் தண்டித்து விடு.

**எனது மனதிலும் உணர்விலும் ஒளித்திருக்கும் எனது எதிரிகளைத் தேடிப்பிடித்து எனது சுயத்தை மீண்டும் பெற்றுப் போஷிப்பதில் இன்றுமுதல் நான் மும்முரமாக ஈடுபடப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 191

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# இலங்கையில்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால் அவரது கூற்றின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும், தமிழ் மக்களும் நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு ஜேவிபி போன்ற அரசுக்கு எதிரான கட்சிகளும் விலக்கில்லை. தமிழ் மக்களின் விவகாரங்கள் குறித்து அக்கறை கொள்கின்ற அரசியல் கட்சிகள் அனைத்தினதும் அரசியல் செயற்பாடு களுக்குப் பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி முட்டுக்கட்டை போட்டு வருகின்றது. காணாமல் போயுள்ள தமிழ் இளைஞர்களின் இருப்பிடத்தை அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும் எனக்கோரி பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்ற ஜேவிபி. அண்மையில் கிளிநொச்சியில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, அதில் முக்கிய பங்குவகித்தவர்களை இராணுவத்தினர் வந்து கைது செய்து, எச்சரிக்கை செய்து பின்னர் அவர்களை விடுதலை செய்திருந்தனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் செயலாளர் ரமேஷ் அளவெட்டி சம்பவத்திற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றபோது, பட்டப்பகலில் ஆட்கள் நடமாட்டம் மிகுந்த வீதியொன்றில் வேறு மோட்டார் சைக்கிள்களில் வந்த தலைக்கவசம் அணியாத குண்டர்கள், அவரைத் துரத்தித்துரத்தி தாக்கினார்கள். அடிபட்ட நிலையிலும், தெய்வாதீனமாக அந்த வழியாக வந்த பேரூந்து ஒன்றில் ஓடிச் சென்றதால் அவர் உயிர் தப்பினார். இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என இராணுவ தரப்பில் உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும் எதுவுமே நடக்கவில்லை.

இதுபோன்ற சம்பவங்கள் அரசியல் செயற்பாடுகளில் மட்டுமல்லாமல், இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள், அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள், போரினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் பொது அபிவிருத்தி என பல்வேறு விடயங்களிலும் நியாயமற்ற முறையில் நாட்டின் உண்மையான ஜனநாயக நடைமுறைகளுக்கு தமிழ் மக்கள் திட்டமிட்ட முறையில் பாதிக்கப்படத்தக்க வகையில் அரசாங்கம் இராணுவத்தினரின் ஊடாகச் செயற்பட்டு வருகின்றது.

மொத்தத்தில் தமிழ் மக்களை இறுக்கமான ஓர் இராணுவ பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே அரசாங்கம் - குறிப்பாக வடபகுதியில் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினரைக் குவித்து அவர்களின் ஊடாக அந்த மக்களின் சிவில் மற்றும் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் அளவுக்கு அதிகமாகத் தலையிட்டு தொல்லை கொடுத்து வருகின்றது.

Sitham Sam Shanmugam (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

Detached home for sale. Sheppard & Meadowvale with Basement. 8 years old. Price $475,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 Condo. in Toronto. Near University of York. $130,000

# இலங்கையில்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

யுத்த காலத்திற்கு முன்னர் ஒரு மாவட்டத்தில் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், கிராமசேவையாளர் என்ற அடிப்படையில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பே இருந்து வந்தது. ஆனால் இறுதி யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், மாவட்டம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட முக்கிய இராணுவ கட்டமைப்புக்கள் இப்போது நிறுவப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், சிவில் நிர்வாகத்தைப் போன்று கிராம சேவை அலுவலர் மட்டத்தில் இராணுவ உத்தியோகத்தர் ஒருவரும் செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் சமாதான குழு அல்லது பாதுகாப்புக் குழு என்ற பெயரில் பொலிசாரின் முக்கிய பிரசன்னத்துடன், கிராமசேவை அதிகாரி மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவொன்று கிராமசேவகர் பிரிவு தோறும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் உள்ள சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் தலைமையில் நான்கு பொலிசார் அந்தந்த கிராமசேவகர் பிரிவுகளின் செயற்பாடுகள் அனைத்துக்கும் பொறுப்பாக இருப்பார்கள். சிறுகுற்றங்கள், அசம்பாவித சம்பவங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்று சகலவற்றிற்கும் இவர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.

இந்தக் குழுவைச் சேர்ந்த பொலிசாருக்கு மேலதிகமாக பொதுமக்களினால் இராணுவ விதானையார் என்றழைக்கப்படுகின்ற இராணுவ சிப்பாய் ஒருவர் அந்தப் பிரதேசத்தின் கிராமசேவை அலுவலருக்கு ஒப்பாகத் தகவல்கள் திரட்டுவது, இராணுவம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருப்பார். இவர் அந்தந்த கிராமசேவகர் பிரிவைச் சொந்த இடமாகக்கொண்ட, புனர்வாழ்வுப் பயிற்சிகளை முடித்து சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பார். இத்தகைய முன்னாள் போராளிகளின் செயற்பாடுகளை இவர் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருவதுடன். பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவர்களுடன் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்துவதிலும் ஈடுபட்டிருப்பார். இவரது அனுமதியின்றி இத்தகைய முன்னாள் போராளிகள் தமது இருப்பிடங்களைவிட்டு எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாது.

இத்தகைய ஒரு வலைப்பின்னல் அமைப்பிலேயே இராணுவம் வடபகுதியில் தமிழ் சமூகத்தில் ஊடறுத்துச் செயற்பட்டு வருகின்றது.

இரண்டு குடும்பங்களுக்கிடையிலான சாதாரண சண்டை சச்சரவு ஏற்பட்டால்கூட, அதுபற்றி அயலவர்களுக்குத் தகவல் எட்டுவதற்கு முன்னர், இந்த இராணுவத்தினரும், பொலிசாருக்கும் தகவல் எட்டிவிடும். அவர்களும் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்துவிடுவார்கள். ஆனால் குறிப்பிடத்தக்க கொள்ளைகள், கொலைகள், கடத்தல்கள் இடம்பெறும்போது இவர்களுக்கு நேரடியாகப் பொதுமக்களினால் அறிவிக்கப்பட்டாலும், அவர்கள் அந்த இடங்களுக்குத் தாமதித்தே வருவார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில்தான், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளவெட்டி மகாஜன மண்டபத்தில் கூடி கூட்டம் நடத்தியபோது, மேஜர் தரத்திலான ஓர் இராணுவ அதிகாரியின் தலைமையில் இராணுவக்குழுவொன்று சம்பவ இடத்திற்குச் சென்று அனுமதி பெறாமல் எவ்வாறு கூட்டம் நடத்த முடியும் என கேள்விகேட்டு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கியபோது, அவர்களின் மெய்ப்பாதுகாவலர் இருவர் காயமடைந்தனர்.




அரைசிவில் உடையில் வந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், கூட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டதா என்று சீருடையில் வந்திருந்த மேஜர் தரத்திலான ஓர் இராணுவ அதிகாரியும் மற்றுமொரு இராணுவ அதிகாரியும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சுமந்திரனுடன் கதைத்துக் கொண்டிருந்த போது அந்த மண்டபத்தில் திடீரென புகுந்த அரைசிவிலுடையில் இருந்த இராணுவத்தினர் பொதுமக்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தாக்கியுள்ளார்கள்.

கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த பெண்களும் வயோதிபர்களும்கூட, இந்தச் சம்பவத்தில் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார்கள். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருந்தவர்கள் மண்வெட்டி பிடிகளுக்கு ஒப்பான கொட்டன்களைத் தம்முடன் கொண்டு வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு ஏற்பட்ட கலவரத்தில் இருந்து தப்பி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்குத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் (மாவை சேனாதிராஜா, சுமந்திரன், சுரே' பிரேமச்சந்திரன், சிறிதரன், சரவணபவன் ஆகியோர்) சென்றிருந்தபோது, யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுக்கு அடுத்த நிலையில் உள்ள இரண்டு உயர் இராணுவ அதிகாரிகள் அங்கு சென்று பாராளுமன்ற உறுப்பினர்களிடம் மன்னிப்பு கோரியதுடன், இதனைப் பெரிதுப்படுத்த வேண்டாம், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டாம் என வலியுறுத்தி கேட்டுக்கொண்டார்கள். இருப்பினும் நடந்த சம்பவம் குறித்து தமது பாதுகாப்பிற்காக தாங்கள் முறைப்பாடு செய்யப்போவதாகக் கூறி சுமந்திரனும், இராணுவத்தின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் தப்பிய சரவணபவனும் முறைப்பாடு செய்திருந்தார்கள்.

இந்த முறைப்பாட்டில் நடந்த சம்பவத்தை விலாவாரியாக இருவரும் விபரித்து, இராணுவத்தினரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டார்கள் என்றும், அவர்களைத் தங்களால் அடையாளம் காணமுடியும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். ஆயினும் இந்தச் சம்பவம் குறித்து மல்லாகம் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த பொலிசார் இனந்தெரியாதவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தத் தாக்குதலை இராணுவத்தினர் நடத்தவில்லை என்று முதலில் மறுத்திருந்த யாழ். இராணுவ கட்டளைத் தளபதி, பின்னர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அதற்காக வருத்தம் தெரிவித்திருந்தார். இத்தகைய சம்பவங்கள் இனிமேல் நடைபெறமாட்டாது என்று ஊடகவியலாளர்களிடமும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரிடமும் உறுதியளித்திருந்தார்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தையும் பொலிசாரையும் உள்ளடக்கிய இரண்டு வெவ்வேறு குழுக்கள் விசாரணை நடத்தி வருவதாகவும், இராணுவத்தினர் இதில் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள் என்றும் மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்திருந்தார். ஆயினும் சம்பவம் நடைபெற்று இரண்டு வாரங்களாகிவிட்ட போதிலும், இந்தச் சம்பவம் தொடர்பில் எவருமே கைது செய்யப்படவும் இல்லை. விசாரணைகள் தொடர்பான விபரங்களும் வெளியிடப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்சவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தச் சம்பவத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை. அவர்களைப் பாதுகாப்பதற்காக கடமையில் இருந்த அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் (Ministerial Security Division – MSD), இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட சிறிய மோதல் ஒன்றை தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் அரசியல் இலாபத்திற்காக ஊதிப் பெருப்பித்துள்ளார்கள் என கொழும்பில் ஊடகங்களின் ஆசிரியர்கள் முக்கியஸ்தர்களுடனான ஒரு சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடப்பதாகவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

# சனல் 4

வெய்யில் பனிமழை பாராமல்
வீதியில் நின்று அழுதனமை
பொய்யர் என்று முழுஉலகும்
புறக்க ணிக்க மனம்நொந்தோம்!
தெய்வம், உலகம், நீதிநெறி
சேர்ந்து ஒன்றாய்த் தமிழினத்தை
கையை விட்டது எனஇருந்தோம்!
கடைசியில் நீதான் கைகொடுத்தாய்!




மெய்யைப் புதைத்துப் ‘புலி’யென்று
மேற்பூச் சளித்துத் தமிழினத்தைத்
தொய்யச் செய்யும் மனநிலைக்குத்
தூத்திய உலக சமூகத்தைக்,
கையைக் கட்டி இருந்தோரைக்,
கண்ணீர் விட்டுத் தவறுணரச்
செய்த ‘சனல் போ’ சேவைக்கு
சேர்ந்து வாழ்த்துக் கூறிடுவோம்!

தெய்வம் ஒன்றும் பார்க்கவில்லை!
திரும்பி யாரும் கேட்கவில்லை!!
“பொய்யு ரைத்தா தெருக்களிலே
புலம்பி அழுதோம் நாமெல்லாம்!”
செய்வ தறியா திருந்தஎமைத்
திரும்பி உலகம் பார்க்கவைத்த
செய்திச் சேவை சனல்நான்கைத்
திறந்த மனதுடன் வாழ்த்திடுவோம்!

மனித உரிமை வாய்பேச
வஞ்சக மாகக் காய்நகர்த்தும்
புனித மற்ற தலைமைகளும்
புழுங்கித் தவறைச் சீர்செய்ய
இனிய காரியம் நீசெய்தாய்!
என்றும் தமிழர் உனைமறவோம்!
இனியும் கண்ணைத் திறக்காதோர்...
இருந்தும் இறந்தும் ஒன்றேதான்!

மனித நீதிக் கென்னாச்சு...?
மனித உரிமை போனதெங்கே...?
தனியே ஒருவன், ஒருகூட்டம்
தாங்கள் விரும்பிய படிநடந்து
மனித குலமே தலைகுனிய
மற்ற இனத்தை அழிக்கையிலே
புனிதப் பணி-நீ செய்ததுதான்!
“புட்டு வைத்தாய் உண்மைகளை!”

ஓலம் போட்டு அழுதழுது
உண்மைக் காக ஏங்கியநாம்
“காலம் உருண்டு போனாலும்
கடைசியில் உண்மை தெரியவரும்
நாலும் அறிந்து மனிதகுலம்
நமக்கு நீதி வழங்கு”மெனக்
காலம் பார்த்துக் காத்திருந்தோம்!
கைகொடுத் தாய்நீ வாழியவே!

- சபா அருள்சுப்பிரமணியம் -

# நானும் அமெரிக்ககாரியும்




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.

பரிமளம் காதலித்த மன்மதன் பெயர் தருமன் என்றாள். மன்மதன் ஏதோ தவறு செய்துவிட்டான். அவனை நடுரோட்டில் வைத்து, எட்டிப்பிடித்து அவன் கழுத்துடன் சேர்த்துக் கொலரைப் பிடித்த பரிமளம் 'மோனே! என்று கத்தியபடி கைப்பையினால் அவனை அடிக்கத் தொடங்கினாள். அவன் தலை குனிந்து...குனிந்து... ரோட்டை நோக்கி இறங்கியது. வாய்கோணலானது. தெற்குப் பக்க முகம் சூரிய ஒளியில் சிவப்பாக மாறியது' என்றாள்.

நண்பா! தெற்குப் பக்கத்து முகம் சூரிய ஒளியில் சிவப்பாகியது என்றால் இவள் எந்தத்திக்கு நோக்கி நின்றாள். பரிமளம் எந்தத்திசையில் நின்றாள் என்று நான் யோசிக்கத் தொடங்கினேன். ஒருவர் கதை சொன்னால் இடையில் கேள்வி கேட்பதும் எதைப்பற்றியாவது யோசிப்பதும் கூடவே கூடாது. ஏன் தெரியுமா? நான் கிழக்கு, மேற்கு, வடக்குத்தெற்கு என்று யோசித்துக் கொண்டிருக்க அவள் கதையை முழுக்கச் சொல்லி முடித்து விட்டாள். அமெரிக்கக்காரியின் சொற்கள் (Vocabulary) என்னைப் பெருத்த சந்தேகத்துக்குள்ளாக்கியது.

மன்மதன் கரும்பு வில்லை வளைச்சு மலர் அம்புகளை எய்வானாம். மன்மதன் அழகானவன் என்று எங்காவது சொல்லியிருக்கா? காதலுக்கும் அழகுக்கும் சம்பந்தமே இல்லை!

ஆங்கில மொழிபடித்தால் மட்டும் போதாது. டச்சுமொழியும் படிக்க வேண்டும். போர்த்துக்கீஸ் மொழியும் படிக்க வேணும். அவர்கள் எல்லாம் எங்கள் நாட்டை ஆண்டவர்கள். அவர்கள் நாட்டை நாங்கள் ஆளமுடியாவிட்டாலும் அவர்கள் மொழியையாவது ஆளவேண்டும்.

சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கீழ்ச்சாதி பெண்ணொருத்தி தொங்கல் வைத்துச் சேலை உடுத்திப் போன போது மேல்ச்சாதி ஒருவன் கொக்கச்சத்தகத்தால் தொங்கலை இழுத்து வெட்டி பெருங்கலவரம் உண்டானது. அதை அப்ப கவுண்மேந்து ஏஜண்டாக இருந்த பிறீமன் துரை நேரில் வந்து அடக்க வேண்டியிருந்தது.

கனடாவையும், அமெரிக்காவையும் இணைக்கும் பாலம். திடீர் என்று இளம் காதலர்கள் இருவர் பாலத்தின் நடுவில் காணப்பட்டனர். எப்படி அவர்கள் அங்கே தோன்றினார்கள் என்று தெரியவில்லை. வானத்தில் இருந்து குதித்த தேவராசிகள் போல அழகாக, ஒருவருக்கு ஒருவர் பொருத்தமானவராக இருந்தார்கள். கட்டி அணைத்துக் கொண்டிருந்தார்கள். திடீர் என்று முத்தமிடத் தொடங்கினர். அது முத்தமிடுவது போலவே இல்லை.

பசுபிக் சமுத்திரத்தில் இரண்டு தீவுகள். பக்கத்தில் பக்கத்தில் இருந்தது. ஒன்றின் பெயர் சமோவா. மற்றதின் பெயர் ரொங்கோ. அந்தத் தீவுகளை சர்வதேசதேதிக்கோடு பிரிக்கிறது. சமோவாவில் திங்கள் காலை ஆறுமணி என்றால் ரொங்கோவில் செய்வாய் காலை ஆறுமணி ஐந்து நிமிடத்தூரம் மட்டுமே. ஆனால் இருபத்து நான்கு மணிநேரவித்தியாசம். ஒரு விசித்திரம் தான்.

இத்தனை விடயங்களையும் அமெரிக்ககாரி மாறி மாறி எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். இவள் உலகம் சுற்றிய வனிதையாக்கும் என்று எண்ணினேன். இடையே மதிவதனியையும் நினைவூட்டினாள். நண்பா! சந்திரனையும் அவள் மறக்கவில்லை. இவள் யார்? எந்த நாட்டவள், எந்த இனத்தவள் என்று ஆராய்ச்சி அலைகள் என்னுள் எழுந்து மோதின. பேச்சுத்தொனிப்பில் ஈழத்துவாடையும் அடிக்கிறது. நளின நாகரிகத்தில் மேலைநாட்டு அசைவுகளும் தெரிகிறது. ஈழத்துதமிழ்ச் சொற்களை செம்மொழிச்சாயல் கெடாதவாறு உபயோகித்தாள்.

இவள் ஈழத்தில் பிறந்து இலங்லையில் வாழ்ந்து லண்டன் வழியாகக் கனடாவுக்கு வந்து விஞ்ஞானம் தொழில்நுட்பம் படித்து, வரலாறு தத்துவம் பயின்று அமெரிக்கக்காரியான தமிழச்சியோ என்றும் என் யோசனை போனது. இவள் கதையைக் கேட்கக்கேட்க நெஞ்சு நிமிர்ந்தும், குளிர்ந்தும், விம்மியும், வியப்படைந்தும் பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்புகளால் மோதுண்டு களைத்துப் போனேன். அவள் கதை சொல்லிக் கொண்டேயிருந்தாள். நான் கேட்டுக்கொண்டே உறங்கிப்போனேன். அவள் அப்படியே என்நெஞ்சில் சாய்ந்து கிடந்தது உறுத்தலில் தெரிந்தது. நடுநசி ஆனது. ஆழ்ந்த நித்திரை (Deep Sleep) என்பார்களே அப்படி ஒரு ஆழ்ந்த உறக்கத்தில் அடங்கிப் போனேன்.

விடிந்தது. திடுக்கிட்டு விழித்தேன். என் நெஞ்சில் கிடந்த அமெரிக்கக்காரியை காணவில்லை. அறை எங்கும் தேடினேன். கட்டிலுக்குக் கீழ் அலமாரிக்குப் பின்புறம், மேசைக்கு மேற்குபக்கம், எங்கும் அவளைக் காணவில்லை. எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. மகளைக் கூப்பிட்டேன். அமெரிக்கக்காரியை கண்டாயா என்று கத்தினேன். இராத்திரி இங்கு வந்த பெரியக்கா விடியப்புறம் போகும் போது அமெரிக்கக்காரியை கிளப்பிக் கொண்டு போய்விட்டாள் என்று சொன்னாள். நான் நிம்மதியடைந்தேன். அவள் என்மகள், வீட்டில் தானே இருக்கிறாள் என்று. மகளுக்கு என் தவிப்புத் தெரியும். விரைவில் அமெரிக்ககாரியுடன் நான் இருக்கும் சின்னமகள் வீட்டிற்கு வருவாள் என்று சாந்தியடைந்தேன்!

நண்பா!
என்ன கனக்க யோசிக்கிறாய்? இந்த வயதிலும் இந்த நாட்டில் நடப்பது போல் நானும் நடந்து விட்டேன் என்று நினைத்திருப்பாய். "மழைக்கால இருட்டிலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது" என்ற நம்நாட்டுப் பழமொழியை நினைத்துப் பார்ப்பாயாக. நான் எழுதிய அத்தனை விடயங்களும் எழுத்தாளர் அ. முத்துலிங்கத்தின் அமெரிக்கக்காரி என்ற சிறுகதைத் தொகுதியைப் பற்றியது. என்ன சிரிக்கிறாய்! நீ தானே சொன்னாய் கடித இலக்கியத்தில் புதுப்புது உத்திகளையும் புகுத்தி எழுதென்று என் புதிய உத்தி உனக்குப் பிடித்திருக்கிறதா? படித்துவிட்டு எழுது.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# எழுதரும் அழகு...

தாய் சேய் உறவு தரணியில் தன்னிகரற்றது. தாய்தனை சேய் மறந்தாலும் சேய்தனை தாய் மறப்ப தில்லை. அது தாவிப்படரும் தன்மையது. துணையாகவும் பிணையாகவும் இருப்பவள் அன்னை. ஆண்டவனை பற்றிய அப்பர் தேவாரம் தாயவளுக்கும் பொருந்தும்.

அருந்துணையை அடியார் தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தனை மேல் வரும்பயனை போகமாற்றிப்
பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானை
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே

அன்னையின் அனேக திருநாமங்களை அனுதினமும் அசைபோட்டால் ஆகும் நன்மைகள் அனந்தம். ஆனந்தமயமாக விளங்குபவள் அன்னை. அவளை மறவாது நினைமின் என்பதே அபிராமி பட்டரது ஆணை.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது துன் மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்று மரும்பொருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே.

"தன்னை மலர் தூவித் தாள்கள் தொழுதேத்த எண்ணும் அடியவர்க்கில்லை இடுக்கண்ணே" என்பதற்கேற்ப அன்னையின் அடிக்கமலங்களை அகத்தில் நிலை நிறுத்தினால் பாதக மலங்கள் நீங்கும் செல்வோம் வாரீர் திரு நயினைப்பதிக்கு.

ஆத்தாளை ஆதியந்தம் இல்லாதாளை அகிலமொடு சரமனைத்து ளெங்கும்
பூத்தாளை அருமறையின் பொருளினாளை பொருப்பரையன் புத்திரியாய் பூ
காத்தாளை மாதுளம் பூ நிறத்தினாளை கடல்புடைசூழ் தரு நயினார் தீவில் இன்பஞ்
சேர்த்தாளை அடியார்க்கருளுவாளை திரு நாக பூசணியினை தரிசிப்போமே.

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666


யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com




# விருதுநகர்......

20ஆம் பக்கத்தொடர்ச்சி

துணைமாலை அம்மன். சைவ நாயன்மார் சுந்தரமூர்த்தி நாயனாரும் சேக்கிழாரும் பூமிநாதர் மீது பதிகங்கள் பாடியுள்ளனர். முத்துராமலிங்க சேதுபதியால் இந்த கோயில் புனரமைக்கப்பட்டு புதிய சன்னதிகள் அமைக்கப்பட்டன. குண்டாற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்ட போது சுவாமி விவேகானந்தர் இந்த கோயிலில் 3 நாட்கள் தங்கியிருந்தார் என்று சொல்கிறார்கள். வேம்பக்கோட்டையிலிருந்து கழுகுமலை செல்லும் சாலையில் உள்ளது குகன் பாறை. இதை ஒட்டியுள்ள கிராமமும் குகன்பாறை என்றே அழைக்கப்படுகிறது.



பாறையின் அடிப்பகுதியில் ஒரு குகை உள்ளது. இதில் முற்காலங்களில் ஜைன துறவிகள் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. கி.பி. 10ஆம் நூற்றாண்டை சேர்ந்த, வட்டெழுத்து கல்வெட்டு ஒன்றை இப்பொழுதும் இங்கு பார்க்கலாம். இங்கு ஒரு ஜைன மடம் இருந்ததாகவும், இம்மடம் முந்நூற்றுவர் பெரும்பள்ளி என்ற பெயரில் நிறுவப்பட்டதாகவும், சீடர்கள் முந்நூற்றுவர் கோயில் பிள்ளைகள் என அழைக்கப்பட்டதாகவும் இந்தக் கல்வெட்டுக் கூறுகிறது.

திருச்சுழி வழியாகச் செல்லும் குண்டாற்றின் கரையில்தான் அமைந்துள்ளது பள்ளிமடமும். 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரபாண்டியன் இந்த இடத்தில்தான் உயிர் நீத்தார் என்கிறார்கள். இங்கே அவர் புதைக்கப்பட்டுள்ள இடத்தில், அவரது சகோதரர் வீரபாண்டியன் பள்ளிபடை என்ற நினைவு இடத்தை நிறுவியுள்ளார். இந்த இடம் இப்போழுது, கலைநாதசுவாமி கோயில் என அழைக்கப்படுகிறது. ஆரம்பத்தில், பள்ளிப்படை சுந்தரபாண்டிய ஐஸ்வரமுடையார் கோயில் என்றுதான் சொல்வார்களாம். பாண்டிய நாட்டின் ஒரே கல்லறைக் கோயில் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

பிளவக்கல் அணைப்பகுதியும் விருதுநகர் மாவட்டத்தின் முக்கியமான பொழுதுபோக்கு இடமாகும். இந்த அணை பெரியார் அணை, கோவிலார் அணை என இரு பகுதியாக உள்ளது. இயற்கை சூழ்ந்த இந்த இடத்தில் அழகான தோட்டங்கள் உள்ளன. படகு சவாரியும் உள்ளது. இதன் காரணமாக விருதுநகர் மாவட்டத்தில் அரசால் அறிவிக்கப்பட்ட சுற்றுலா தலமாகவே பிளவக்கல் அணை அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் நான்கு புறமும் மலைகள் சூழ அமைந்துள்ளது. திருவில்லிபுத்தூரில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அணைக்கு செல்ல பஸ் வசதி உள்ளது. வத்திராயிருப்பு, கூமாப்பட்டி பகுதியில் இருந்து ஆட்டோக்களிலும் செல்லலாம். அணையில் மீன் பண்ணை உள்ளது. பல்வேறு வகை மீன்களை இங்கு ரசிக்கலாம். சிறுவர் பூங்காவும் உள்ளது.

விருதுநகரில் இருந்து சிவகாசி செல்லும் சாலையில் அமைந்துள்ள, திருத்தங்கலும் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று. தொன்மைமிக்க நகரம். முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனப்படும் மூன்று சங்கங்களிலும் இடம்பெறும் காலக் கவிஞர்களான முடக்கோரனார், பொற்கொல்லன் வெண்ணகனார், ஆதிரேயன் செங்கண்ணனார் ஆகியோர் வாழ்ந்த ஊர்.

விருதுநகரில் இருந்து 32 கி.மீ. தூரத்திலும், மதுரையில் இருந்து 90 கி.மீ. தூரத்திலும் உள்ளது, அர்ஜுன நதியும் வைப்பாறும் சந்திக்கும் இடத்தில் உள்ளது இருக்கன்குடி. சாத்தூரில் இருந்து 8 கிலோமீட்டர். இங்குள்ள மாரியம்மன் கோயில் தென் தமிழகக் கோயில்களில் பிரபலமான ஒன்று. இந்தக் கோயிலில் வழிபட்டுச் செல்பவர்களுக்கு அம்மை உட்பட அனைத்து விதமான நோய்களும் நீங்கும் என்பது நம்பிக்கை. இங்கு 21 நாட்கள் நடைபெறும் பங்குனி உத்திர விழா மிகவும் விமரிசையானது. விருதுநகர் மாவட்டத்தில் இன்னும் பல ஊர்கள் உள்ளன. அவை அடுத்த இதழில்...

# அவன்...

அளவில் பெரிய நடிகராகப் பிச்சி உதறுகிறார். 'நான் கடவுள்' படத்துக்குப் பிறகு 'பாஸ் என்ற பாஸ்கரன்', 'மதராஸப்பட்டிணம்' என ஆர்யாவுக்கும் ஏறுமுகம்தான். அப்படி இந்தப் படத்தில் விஷாலை உருமாற்றியிருக்கிறார், பாலா.

எங்காவது விஷாலைச் சந்தித்தால், கைகொடுக்கத் தயங்காதீர்கள். சரசரவென்று மரம் மேல் ஏறுவதாகட்டும், கிளைமாக்சில் காட்டும் அந்த ஆக்ரோஷமாகட்டும்... என்ன ஒரு உடல்மொழி. பெண்மை கலந்த நளினத்தோடு, கண்களை சுருக்கிக்கொண்டு... அய்யோ, என்ன ஒரு ஆளுமை. 'உசிரை கொடுத்து நடிக்கிறான்யா' என்று சொல்வார்களே அப்படி இந்த படத்தில் விஷால் நடிப்பை சொல்லலாம். கண்டிப்பாக விருதுகள் நிச்சயம். படம் ஆரம்பிக்கும்போது, விஷால் ஒரு குத்தாட்டம் போடுவார் பாருங்கள், இந்த வருடம் முழுக்க தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டே இருக்கலாம். காவல்துறையினர் கொடுக்கும் விருந்திற்காக ராமராஜன் உடையில் ஸ்டைலாக வந்திறங்கும் விஷால், தனது காதலியின் பின்னால் ஒய்யாரமாக நடந்து செல்வது பிரமாதம். இந்தக் கல்யாண மண்டபத்தில் தண்ணியடித்துவிட்டு அவர் செய்கிற அலப்பறைகள் இன்னும் பிரமாதம்.

விஷாலிடம் இவ்வளவு வேலைகள் வாங்கிய பாலா, ஏனோ ஆர்யாவை அதிகம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டார். "உனக்குத் தான் முந்தைய படத்தில் (நான் கடவுள்) தனியிடம் தந்தேன் இல்லையா, இதில் நான் சொல்வதை மட்டும் செய்" என்று சொல்லியிருப்பாராக இருக்கலாம். என்றாலும், விட்டேத்தியாய் திரியும் சில காட்சிகளிலும் சரி காதலின் ஈர்ப்பில் மதிமயங்கும் இடத்திலும் சரி கண்கலங்கி அழும் அண்ணனின் அழுகையை பார்க்க இயலாமல் கண்ணீர் வடிக்கும் காட்சியிலும் சரி தன்னை முழுமையாய் ஈடுபடுத்தி நடித்திருக்கிறார். ஆனால், ஆர்யா கொஞ்சம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய நேரம் இது. இன்னும் இரண்டு பாலா படங்களில் நடித்தால், அப்படியே அறிந்தும் அறியாமலும் ஆகிவிட வாய்ப்புள்ளது.

பரட்டைத் தலையும் மழிக்காத தாடியுமாய் உலாவும் மனிதர்களுக்கு மத்தியில் அந்திமந்தாரைப் போல் அழகு ராணிகளாக வருகிறார்கள் மதுசாலினியும் ஜனனி ஐயரும். ஆனால், லட்டு மாதிரி இருக்குற இந்த இரண்டு பெண்களும் 'அரவாணி விஷாலையும், பரட்டைத் தலை' ஆர்யாவையும் காதலிப்பதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழ் சினிமாக்களில் மட்டும்தான் பேரழகிகளுக்கு வெறும் பயல்களைத் தான் பிடிக்கிறது. இரண்டு கதாநாயகிகளில் மதுசாலினிக்கு அதிகம் வேலையில்லை. ஆனால், காவல்காரி ஜனனி ஐயரின் கண்கள் நிறையவே பேசுகிறது. விஷாலை நடுரோட்டில் வழிமறித்து பேசுவதாகட்டும் வாக்கி டாக்கி கேட்டு வீடு தேடி வந்து கெஞ்சுவதாகட்டும் இயல்பாக இருக்கிறார்.

மற்ற நடிகர்களில் குறிப்பிட்டு சொல்ல வேண்டியவர் ஆர்.கே. வில்லனாக கடைசி நேரத்தில் கொஞ்ச நேரமே வந்தாலும், சாதாரண பார்வையிலேயே வில்லன் எனும் தோரணையை கொண்டு வந்து, படம் முழுக்க நிறைகிறார். சிறந்த நடிப்பு. ஜமீந்தாராக வருகிறார் ஆர்.எம்.குமார். 'வெயில்' படத்தில் அப்பாவாக வருபவர். சிறப்பாக நடித்திருக்கிறார். ஆனால்,



படம் முழுக்க கண்ணியமானவராக காட்டி, கடைசியில் நிர்வாணமாக அடிவாங்கி இறப்பதுதான் சற்றும் பொருந்தவில்லை.

சூர்யா, தன் 'அகரம் பவுண்டேசன்' பிரதிநிதியாக இடையில் வந்து செல்கிறார். வசனம்: எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன். கிராமங்களில் சாதாரண பேச்சுகளில் அசாதாரணமாக தோன்றி மறையும் கெட்ட வார்த்தைகள் படம் முழுக்க இயல்பாக ஓடுகின்றன. இசை: யுவன்சங்கர் ராஜா. 'டியா... டியா டோலு...', ராசாத்தி' தவிர மற்ற பாடல்கள் மனதில் நிற்கவில்லை. ஒளிப்பதிவு: ஆர்தர் ஏ.வில்சன். படத்தில் பெரிய பலங்களில் ஒன்று.

இயக்கம்: பாலா 'சேது', 'பிதாமகன்' கொடுத்த இவருக்கு என்ன ஆனது? அவன் இவன் நகைச்சுவை படம் என்று சொல்கிறார்கள். ஆனால், அப்படி ஒன்றும் நகைச்சுவை இல்லை. பொதுவாக, பாலா படங்களில் சாதாரணமாக இருக்கும் நகைச்சுவையைக்கூட இதில் காண வில்லை.

அவன் இவன் - பாலாவுக்கும் சறுக்கும் என்பதற்கான சாட்சி!

226

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



‘தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் கனேடிய நாடாளுமன்றம் இரவுபகலாக பிஸியானதைவிட பிசியாகத் திரிந்தா ஆட்டிலறி அன்னம்மா வெளிநாடுகளிலிருந்து பல திருமண பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள் அதுவும் அரைவாசி ஜேர்மன் பிரென்ஞ்ச் இற்றாலியன் பாசையில் அச்சிடப்பட்டவை தபால் வேலை நிறுத்தத்தால் கைக்குவந்து சேரவில்லை. ஒருமாதிரி வேலை நிறுத்தம் முடிந்தாலும் அவ கட்டவேண்டிய ரெலிபோன் கேபிள் றெட்பில்லைத்தவிர வேறொன்றும் வரவில்லை.




ரெலிபோனிலோ ஈ மெயிலிலோ வந்தால் கௌரவமில்லை. தபாலில் வந்தால்தான் கௌரவமென நினைத்ததால் தான் இத்தனை சிரமமும்.



மதியாதார் முத்தம் மதித்தொருகாற்சென்று மிதியாமை கோடி பெறுமென ஔவைக்கிழவி 4 கோடி பாட்டில் எழுதிவைத்து விட்டுப்போய்விட்டார்.

இன்று மிதிப்பதற்கு முத்தமேயில்லை. முத்தமோ வீட்டுக்கோடியோ கால் வைக்குமிடமெல்லாம் கண்ணி வெடி.
பாதுகாப்பில்லா பக்கத்துவீட்டார் முத்தம் மிதியாமை கோடி பெறும்.



உலகர் தாமோதரம் வீட்டுக்குப்போன போது தாமோதரம் பின்வளவில் 4 5 மரக்கறிக்கண்டுகளை நடுவதற்குப் படும் பாட்டைப் பார்க்க உலகருக்குச்சிரிப்புத்தான் வந்தது. தாமோதரத்தின் தகப்பன், பேரன் ஊரிலேயே பேர்போன விவசாயிகள் விவசாய மன்னன் எனப் பட்டம் பெற்றவர்கள். தாமோதரம் தனது குழாமுடன் எம்.ஜி.ரின் படங்கள் பார்க்கப்போவது தோட்டப்பக்கம் எட்டிப்பார்ப்பதேயில்லை.






பருவத்தே பயிர் செய் என்பார்கள். நாங்கள் கடைக்குப்போய் பார்த்த நேரமெல்லாம் பாவல் கண்டும் பயித்தம்கண்டும் வாங்கி வெயிலே வராத பின்வளவில் நட்டு 60 70 நாள் மட்டும் வெயில் பிடித்து பூக்கும் நேரத்தில் பழையபடி பனியும் குளிரும்.
நல்ல நிலமிருந்தது நல்ல வளமிருந்தது எல்லாவற்றையும் இழந்தவர்களின் மனதில் ‘காணி நிலம்வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்’ பாடல் நினைவு வரவில்லை. காணி நிலம் வேண்டும் காடையர் ஆக்கிரமித்த எமது காணி நிலம் வேண்டுமென பாடத்தோன்றுகிறது.





இந்தக்காலநிலை கடும் பனி குளிரிலும் வீட்டுக்குள்ளும் பேஸ்மென்ரிலும் களவாகக்கஞ்சா நட்டு பொலிசில் சிக்குபவர்களின் தொகை குறையவேயில்லை.



என்ன வளம் இல்லையெங்கள் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளி நாட்டில்?

பாதை மாறும், போதை வேண்டாம். பண்பைக்காப்போம் கலகலப்பு.
இதற்கும் மேலாக நாங்கள் காடுவெட்டும்போது வெட்டியெறியும் கள்ளி, கொடிக்கள்ளி, நாகதாளி போன்றவை மிகவும் விலைக்கு வாங்கி வீட்டை அலங்கரிப்பவர் ஒருபுறம்.







01. கனடா பிறந்தநாள்
03. சுவாமி விவேகானந்தர் தினம்
04. அமெரிக்க தினம்
17. நாதஸ்வர கலாநிதி N.K. பத்மநாதன் நினைவு தினம்
28. ஆடி அமாவாசை



ரொரொன்ரோவிலுள்ள கோவில்கள் கும்பாபிசேகம் கொடியேற்றம் தேர் தீர்த்தம் பூங்காவனம்



RBC Royal Bank
Switch your Mortgage to RBC And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
• 1st Time Home Buyers
• Pre-Approvals
• Debt Consolidation
• Home Equity Line of Credit
• New Immigrant & Self-Employed Programs
• Over 20 years of experience with RBC
• Fast and Efficient Service
• Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham & 14th Ave Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

RE/MAX
2007 - 2010
Vision Realty Inc. Brokerage.
Each Office Is Independently Owned and Operated
Office: (416) 321-2228
Fax: (416) 321-0002
Email: anton@realtyagent.com
Web: RemaxVision.ca
2210 Markham Rd., Suite 1, Toronto, ON M1B 5V6
Anton Jeeva Arulappu
(416) 575-5055
AWARD WINNING REALTOR
Specialized in bank sale homes
Preconstruction condos in downtown from $299,000
Please call for VIP pricing
185,900 Scarborough Bedrooms: 2+1 Washrooms: 2 Well Maintained Bldg
339,000 Markham/Sheppard Bedrooms: 3+1 Washrooms: 3 Brand New Basement
287,900 Garden/Rossland Bedrooms: 3+1 Washrooms: 2 W/O Basement
370,900 Brock/Major Oaks (Pickering) Bedrooms: 4 Washrooms: 3 Basement: Finished
629,000 Markham & Bur Oak Bedrooms: 4 Washrooms: 4 Appx 2900 sqft
Want to own a new condo unit in Warden/Eglinton Donmills / Yorkmills
Price Starting from $279,000

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

IDOL BANQUET SERVICES
IDOL Banquet & Convention Center
VIJAY
Even Planer
416-908-8344
647-707-1230
vijayapala@hotmail.com
திருமணம்
பூப்புனிதநீராட்டு விழா
பிறந்தநாள் கொண்டாட்டம்
வர்த்தக ஒன்றுகூடல்கள்
நினைவுநாள் நிகழ்வுகள்
வர்த்தக கண்காட்சிகள்
ஆண்டு விழாக்கள்
ஒன்றுகூடல்கள்
அரங்கேற்றம்
மற்றும் அனைத்து விதமான வைபவங்களையும் உட்புறம் மற்றும் வெளிப்புற மண்டபங்களில் சிறப்பாக நிறைவேற்றிக்கொள்ள...
Tel: 416.908.8344, 647-707-1230
610 Coronation Drive, Scarborough, ON M1E 2K4
Email: contact@idolbanquet.com, Web: www.idolBanquet.com